# ஜகன்மோகினி.

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்



## மாயப்ரபஞ்சம்

முடிந்துவிட்டது

14. ஆனந்த செய்தி—ஆச்சரிய சம்பவம்
15. காலைக்குமஞ்சாக் கூரிய நெஞ்சம்
16. இறவியின் அன்பும் தூய்மைத் தொண்டும்
17. வேதனை ஊற்று—விதியின் கூற்று
18. விசித்திர சம்பவம்—விநோத தரிசனம்
19. பேய்களின் கதியும், பெருமகிழ் நிதியும்

---

## சந்திரமண்டலம்

? ? ?

1845

3C
ஊ21,N22 Jm
N37.14.8.
183009

எதிர்பாருங்கள்!

உங்கள்

மனத்தை

பரவச முறச்

செய்யும்

V

# சந்திரமண்டலம்

அல்லது

# அதிர்ஷ்ட மழை

என்ற

அற்புதமான

பல அரிய

விஷயங்களையும்,

அனுபவ சாரங்களையும்,

விசித்திரமாக விளக்கிக்

காட்டும் புதிய நாவல்,

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி

அம்மாளால் எழுதப்பட்டு, அழகிய

சித்திரப் படங்களுடன் கூடி அடுத்த இதழில்

ஆரம்பமாகும்.

ஸ்ரீ :

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 14 | ஈச்வர ஆடி மீ August 1937. | இதழ் 8 |
|---|---|---|


## திருமால் அம்மானை

மாவுறையு மார்பன் மதுசூதன் மாவலிபால்
பூவிகழ வையம் புரிந்தேற்றா னம்மானை
பூவிகழ வையம் புரிந்தேற்றா னுமாயின்
மூவுலகி லேச்சாய் முடியாதோ வம்மானை
எச்சிற்றும் பேச்சிற்றும் ஏரிடையன் அம்மானை. 1

துப்புறையு மாண்மைச் சுயோதனற்குத் தொல்லமரில்
ஒப்பிலா வீசனுரை கடந்தா னம்மானை
ஒப்பிலா வீசனுரை கடந்தா னுமாயின்
தப்புவது மன்னோற்குத் தாழ்வன்றோ வம்மானை
தாழ்வதுவுந் தன்னடியார் தம்மிடத்தே யம்மானை. 2

வாவுங் கவிகுலத்தால் வல்லிலங்கை கட்டழித்தான்
மூவுலகங் காக்கும் முழுமுதலவ னம்மானை
மூவுலகங் காக்கும் முழுமுதலவ னுமாயின்
தாவில் அரக்கர்தமைச் சாடியதேன் அம்மானை
சாடியதும் அடியற்காச் சாயகத்தால் அம்மானை. 3

அம்புவியின் மாந்தர்க்கு அறமுணர்த்த மன்னவனை
எம்பிரான் கோடரியால் எற்றினன்கா ணம்மானை
எம்பிரான் கோடரியால் எற்றினனே ஆமாயின்
பம்புகொலை அன்னவர்க்கு பாவமன்றோ அம்மானை
பாவந்தான் எங்ஙனுண்டாம் பாவமிலார்க்கு அம்மானை. 4

— திரு. ராகவாசாரியர்.

183009

# பழமையும் புதுமையும்

ஸ்ரீமான் M. C. ஸ்ரீநிவாஸன் M. A. B.L.,

பல வருடங்களாக அடிமையிலேயே வாழ்ந்துவரும் இந்தியனுக்கு, அரசாங்கங்களிலும், அரசாங்க இயந்திரத்தை நடத்தும் கனவான்களிடமும் சந்தேகமும் அச்சமுமே யிருந்து வந்தன. கிராமத்தில் சூரியோதயமாவதற்கு முன்பே எழுந்திருந்து சூரியாஸ்தமனமான பின்பும் வேலை செய்து பட்டினிகிடந்து கடனால் அரிக்கப்பட்டுவரும் கிராமவாசிக்கும், விவசாயிக்கும், பெரிய நகரங்களில் காற்றற்ற குகைகளிலும், துர் நாற்றம் சூழும் இடங்களிலும் வசித்துவரும் தொழிலாளிகளுக்கும் எந்த அரசாங்கத்திலும் நம்பிக்கை ஏற்படுவது துர்லபம். அப்படி யிருந்தும் வெளிச்சம் தோன்றுமோ வென்ற எண்ணத்துடனும், கேவலம் தாய்நாடு என்ற அபிமானத்தாலும், இவ்வேழை ஜனங்கள் காங்கிரஸ் மந்திரிகளிடம் அன்பு பாராட்டுகிறார்கள். அதை தற்சமயம் பதவியேற்றிருக்கும் மந்திரிகளனைவரும் நன்கு அறிவார்கள்.

சுயநலத்தை உத்தேசித்தே இதுவரையில் பல பிரமுகர்கள் உத்யோக வேட்டையாடி வந்தார்கள். புத்தியாலோ, செல்வத்தாலோ பெரிய உத்யோகத்திற்கு வந்துவிடுவார்கள். பொதுஜன ஊழியன் என்ற பதத்தையே எடுத்துவிட மனதில் உத்தேசம் இருக்கலாம். நம் அதிருஷ்டவசத்தால், ஆங்கிலேயர்களுக்கு அப் பதம் வெறுப்பையுண்டாக்கவில்லை. இங்கிலாந்தில் பொதுஜனப் பிரதிநிதிகள் சரியாக நடந்துகொள்ளாவிட்டால் வெகு சீக்கிரம் விழுந்துவிடுவார்கள், காங்கிரஸ் பிரதிநிதிகளும் இனி பொதுஜன வேலைக்காரர்கள் என்பதை அறிந்தவர்கள். ஐக்ய மாகாணத்தில் பண்டித கோவிந்த வல்லப் பண்ட் பிரதம மந்திரி பதவியேற்றவுடன் நிரந்தர உத்யோக அதிகாரிகளிடம் இவ் விஷயத்தையே எடுத்துக் காட்டினார். பம்பாய் பிரதம மந்திரி பால கங்காதர கேர் ஒரு பொதுக்கூட்டத்தில் "நான் பம்பாய் அரசாங்கத்திற்கு பிரதம மந்திரி; ஆனால் பொது ஜனங்களுக்கு வேலைக்காரன்" என்றார்.

சாதாரணமாக ஜனங்களுக்கு அரசாங்கம் தீமை செய்யாமலிருந்தாலே சந்தோஷப்படுவார்கள். பணக்காரர்களும் ஏழைகளை நசுக்காமலிருப்பதும், பலமுள்ளவன் பலமில்லாதவனை அடக்கியாள முடியாமலிருப்பதும் அரசாங்கத்தின் கையில் தானிருக்கிறது.

காங்கிரஸ் மந்திரிகள் வெகு வேகமாகவே வேலை செய்கிறார்கள். இவ்வளவு நாட்களாக நடந்த தீமைகளையும், அக்ரமங்களையும் போக்கடிக்க சில தினங்கள் (மாதங்களும்) செல்லும். ராஜீயக் கைதிகளின் விடுதலை, குடிவிலக்குப் பிரயத்தனம் முதலிய நன்மைகள் அனைவருக்கும் காங்கிரஸ் சொல்லுவதை செய்து காட்டக் கூடியது என்று நம்பிக்கை அதிகமாகி வருகிறது.

இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. காங்கிரஸின் கொள்கை இந்தியாவிற்கு பூர்ண சுயேச்சை வரவேணுமென்பது. உண்மை தேச பக்தன் எவனும் ஏகாதிபத்யத்திலிருந்து இந்தியா தப்பித்து வெளியேறும் வரையிலும் தாங்கமாட்டான்.

காங்கிரஸ் பலமாகயிருந்தால்தான் போரை ஜயம்பெறும்வரை நடத்த முடியும். ஏராளமாக லக்ஷக்கணக்கில் ஜாதி மத வித்யாசமின்றி காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேருவதே அதற்கு வழி. சிலவு அதிகமில்லை. வருடத்

திற்கு நாலணுதான். லக்ஷக்கணக்கில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து மந்திரி சபையினருக்குப் பக்க பலமளித்தால்தான் அவர்கள் உற்சாகத்துடன் தங்க ளுடைய கடமையை சரிவரச் செய்ய முடியுமென்பதைக் கவனிக்கவேண்டும்.

காங்கிரஸ் மந்திரிகள் பணம், பட்டம், பதவிக்கு ஆசைப்பட்டு தேசத்தைக் காட்டிக்கொடுப்பவர்களல்ல. பொதுஜனத் தொண்டே அவர்களது லட்சியம்; ஆகையால் பொது ஜனங்கள் அவர்களுக்குப் பூரண ஆதரவை அளிப்பார்களாக.

---

# காங்கிரஸ் மந்திரி சபைகள்.

பம்பாய்

1 பால கங்காதர கேர் (பிரதம மந்திரி)
2. கே. எம். முன்ஷி
3. ஏ. பி. லாதெ
4. முரார்ஜி தேசாய்
5. எல். பி. பட்டீல்
6. டாக்டர் கில்தர்.
7. எம். யூ. நூரி.

ஒரிஸா

1. விஸ்வநாததாஸ் (பிரதம மந்திரி)
2. நித்தியானந்த கனங்கோ
3. போதாராம் தூபே

ஐக்கியமாகாணம்

1. பண்டித கோவிந்த வல்லப பந்த் (முதல் மந்திரி)
2. ஜனுப் ரபி அகமது கித்வாய்
3. டாக்டர் கைலாசநாத் கட்ஜு
4. மிஸஸ் விஜயலக்ஷ்மி பண்டிட்
5. ஹபீஸ் மகமத் இப்ருகிம்
6. பியாரிலால் சர்மா

மத்திய மாகாணம்

1. டாக்டர் கரே (முதல் மந்திரி)
2. பண்டித ரவிசங்கர் சுக்லா
3. துர்க்கா சங்கர் மேத்தா
4. துவாரக பிரசாத் மிச்ரா
5. பி. பி. கோளே
6. ஆர். எம். தேஷ்முக்
7. யூசுப் ஷரீப்

பீஹார்

1. ஸ்ரீ கிருஷ்ண ஸின்ஹா
2. அநுக்ரக நாராயணசிங்
3. டாக்டர் ஸையத் மகமத்
4. ஜகல் சௌதரி

சென்னை

1. திரு. ஸி. ராஜ கோபாலாச்சாரியார் (பிரதம மந்திரி)
2. திரு. டி. பிரகாசம்
3. ,, வி. ஐ. முனுசாமி பிள்ளை
4. ,, யாகுப் ஹாஸன் ஸேட்
5. ,, டாக்டர் சுப்பராயன்
6. ,, வி. வி. கிரி
7. ,, டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன்
8. ,, எஸ். ராமநாதன்
9. ,, கே. ராமன் மேனன்
10. ,, பெஜவாடா கோபால் ரெட்டி

காரியதரிசிகள். 10

1. திரு. எ. காளேஸ்வரராவ்
2. ,, டி. விசுவநாதன்
3. ,, எ. பி. ஷெட்டி
4. ,, ஸி. ஜே. வார்க்கி
5. ,, கே. ஆர். கரந்த்
6. ,, என். எஸ். வரதாச்சாரியார்
7. ,, எம். பாப்பினீடு
8. ,, பி. எஸ். என். மூர்த்தி.
6. ,, மொகைதீன் மரைக்காயர்
10 ,, எம். பக்த வத்ஸலம்

# காங்கிரஸ் பதவி ஏற்றதேன்?

மகாத்மா காந்தி ''ஹரிஜன்'' பத்திரிகையில் ''காங்கிரஸ் மந்திரிகள்'' என்ற தலைப்பின் கீழ் பின்வருவாறு எழுதியிருக்கிறார்.

பதவி ஏற்புப் பிரச்னை விஷயத்தில் காரியக் கமிட்டியினரும், இதர காங்கிரஸ்காரர்களும் எனது அபிப்ராயத்தை ஏற்றுக் கொண்டு நடந்திருக்கின்றனர். இதனால் பதவி ஏற்பு பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும், காங்கிரஸ் தேர்தல் அறிக்கைக் கிணங்க எதைச் செய்வது சாத்தியமென்பதையும் நான் பொது ஜனங்களுக்கு விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தியாவின் சுதந்திரத்தை அடைவதற்கு இந்தியா கவர்ன் மெண்ட் சட்டம் சற்றும் பிரயோசனப் படாதென்றும் அது முற்றிலும் அதிருப்திகரமானதாயிருப்பதாகவும் எல்லோரும் கருதுகின்றனர்.

## கத்தி பல ஆட்சிமுறை ஒழிந்தது.

ஆனால் கத்தி பலத்தைக் கொண்டு நடத்தும் ஆட்சி முறைக்குப் பதிலாக பெரும்பான்மையோரது அபிப்பிராயத்திற் கிணங்க நடக்கும் ஆட்சி முறையை ஏற்படுத்த இச்சட்டம் சிறிதளவு முயற்சி செய்கிறது. 3 கோடி ஆண் பெண்களைக்கொண்ட பெரிய வாக்காளர் தொகுதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. வாக்காளரிடம் விரிவான அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவற்றை வேறு எந்தப் பெயர் மூலமும் வருணிக்க முடியாது.

## சட்ட கர்த்தாக்களின் நோக்கம்.

நம்மீது சுமத்தப்பட்ட அரசியலை நாம் நாளடைவில் விரும்ப ஆரம்பிப்போம் என்று இச்சட்ட கர்த்தாக்கள் நம்புகின்றனர்.

அதாவது நம்மைப் பிறர் சுரண்டுவதை நாம் இறுதியில் நமக்கேற்பட்ட பாக்கியமாக உண்மையில் கருதுவோமென சட்ட கர்த்தாக்கள் நம்புகின்றனர்.

## நோக்கம் பலிக்கவோட்டாதபடி செய்யும் வழி

3 கோடி வாக்காளரின் பிரதிநிதிகள் தங்களை நம்பி தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட அதிகாரங்களை (மந்திரி பதவியை வகிப்பது உட்பட) சட்ட கர்த்தாக்களின் உத்தேசத்தை நிறைவேற்ற வொட்டாமல் தடுப்பதற்காக புத்திசாலித்தனமான முறையில் உபயோகிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் சட்டகர்த்தாக்கள் நம்பிக்கை சித்திபெற வொட்டாமல் செய்ய முடியும்.

சட்டத்தை அதன் கர்த்தாக்கள் உத்தேசிக்கின்ற வழிகளில் உபயோகிக்காமலிருக்க வேண்டும். அவர்கள் எதிர்பாராத முறையில் சட்டத்தை சட்ட ரீதியான முறையில் பயன் படுத்த வேண்டும். இதன் மூலம் சட்ட கர்த்தாக்களின் உத்தேசம் பலிக்கவொட்டாதபடி சுலபமாகத் தடுக்க முடியும்.

## பொது மக்களுக்காக உழையுங்கள்.

ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டின் பிரதம காரியதரிசி, பிரதம மந்திரியான கோவிந்த வல்லப பந்துக்கு மற்றைய இலாகா காரியதரிசிகளை அறிமுகஞ் செய்து வைத்தார். அப்போது பண்டிட் பந்த் வருமாறு உபதேசித்தார்.

"ஸிவில் ஸர்விஸிலுள்ளவர்கள் சுதந்தரப் பிரியர்களான ஆங்கிலேயர்கள். இதனால் இவர்கள் இந்தியர்கள் பூரணமாக அபிவிருத்தியடையவேண்டுமென்பதில் அநுதாபங் கொள்ளுவார்களென்பதிலும், அதனை விரும்புவார்களென்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை. ஜனங்களது உரிமைகளை அடக்கும் விஷயத்தில் ஊழிய வர்க்கத்தினர் தங்கள் யோசனா சக்தியையும், ஊக்கத்தையும் செலவிடக்கூடாது. அவர்கள் ஜன சமூகத்தின் நன்மைக்கான சர்க்கார் வேலைகளைப் பெருக்கி அபிவிருத்தி செய்வதில் தங்கள் ஊக்கத்தையும், யோசனா சக்தியையும் செலவிட வேண்டுவது அத்யாவசியம்.

நாங்கள் பட்டினி கிடக்கும் ஜனங்களது நிலைமையை மேம்படுத்தவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பரிகரிக்கவும் பிரதிக்ஞை செய்திருக்கிறோம். காங்கிரஸ் இந் நோக்கத்தை அடையச் செய்யும் முயற்சியில் ஊழிய வர்க்கத்தினர் தீவிரமாக உதவி செய்யவேண்டுமென நான் எதிர்பார்க்கின்றேன்.

## டாக்டர் ராஜனைச் சேர்த்துக்கொண்டதேன் ?

**சென்னை கவர்ன்மெண்டின் பிரதம மந்திரியான ஸி. ராஜகோபாலாச்சாரியார் கீழ்கண்டவாறு அறிவிக்கின்றார்.**

டாக்டர் ராஜனை மந்திரி சபையில் சேர்த்துக்கொண்ட ஒரு விஷயத்தைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புறேன்- அவ் விஷயம் திடீரென்று எல்லோரும் ஆச்சரியப்படும்படி வந்தது. பொது ஜனங்கள் அதற்குள் மறக்காத, நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்து அது சரிதானாவென்று சிலர் சந்தேகத்தைக் கிளப்பினர். உள்ளூர் விஷயங்கள் சம்பந்தமாகக் கட்சித் தீர்ப்புக்கு இணங்க அவர் மறுத்ததால் சில மாதங்களுக்கு முன் அவர்மீது நான் எடுத்துக்கொண்ட கடுமையான நடவடிக்கை மிகச் சரியானதென்றே நான் நினைக்கிறேன். அந்த நடவடிக்கையால்தான் தேர்தல்களிலும் அதற்குப் பிறகும் ஒரு ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நம்மால் நிலைநாட்ட முடிந்ததென்று நான் எண்ணுகிறேன். நாட்டுக்கு அவரது சேவையில்லாமலிருக்கும் காலத்தை இன்னும் நீடிப்பது நியாயமாகாது. கார்யக் கமிட்டி அவரது நடத்தையைக் கண்டித்ததும் காங்கிரஸ்காரர் என்ற ஹோதாவில் அவர் வைத்துக்கொண்டிருந்த எல்லா ஸ்தாபனங்களையும் ராஜிநாமா செய்துவிட்டார். திடீரென்று ஏற்பட்ட ஒரு எண்ணத்தின் பயனாக அவரை என் மந்திரி சபையில் சேர்க்க நான் தைர்யத்துடன் நடந்துகொண்டிராவிட்டால் அது தற்கொலை செய்துகொள்வதற் கொப்பாகும். ஆலோசிப்பதற்கு அவருக்குச் சிறிதுகாலம் கொடுத்தேன். அவருக்கு அது ஒரு ஆச்சரியமாகமட்டுமில்லாமல், புதிதாகத் தியாகம் செய்வதற்கும் அவரை அழைத்ததாகும். இது விஷயத்தில் அவரிடம் நான் தாக்ஷண்யம் காட்டியதில்லை. அவர் மறுத்ததுமில்லை; மறுபடியும் என்னுடைய கட்டளைக்குக் கீழ்படிந்துவிட்டார். சர்தார் வல்லபபாய் படேல் அவருடைய பெயரை ஆமோதித்தார். டாக்டர் ராஜனை நான் நினைப்பதற்கு முன்பாகவே, தலைவர்கள், மந்திரி சபை முதலியவர்களின் பெயர்களுக்கு அவரிடமிருந்து நான் அனுமதி பெற்றுவிட்டேன். நம்முடைய மாகாணத்திலும்வெளியிலும் எல்லோரும் அதை ஆமோதித்து விட்டார்களென்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## ஸ்ரீ எம். என். ராயின் விளக்கம்

ஜூலை 26ந் தேதியன்று சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் அளித்த உபசாரப் பத்திரத்துக்குப் பதிலளிக்கையில் ஸ்ரீ எம். என். ராய் கூறியது வருமாறு :—

என்னுடைய கொள்கைகள் எதுவாயிருந்தபோதிலும் விடுதலைப் போர் சம்பந்தப்பட்டவரையில் இதரர்களைப்போல் நானும் உண்மையான காங்கிரஸ் வாதிதான். நான் பொதுவுடமைத் தத்துவத்தைக் கைப்பிடித்து நடப்பவ னென்று சில காங்கிரஸ் வாதிகள் என்னை சந்தேகத்துடன் நோக்குகிறார்கள், அபேதவாதிகளோ நான் காங்கிரஸ்வாதிகளோடு சேர்ந்துவிட்டதாகக் குறை கூறுகிறார்கள். இந்த நிலைமை மிகவும் கஷ்டமானதுதான். ஆனால் எனக்கு அதைப்பற்றி அக்கரையில்லை. திறந்த கண்களுடன்தான் இந்த நிலைமைக்குள் நான் நுழைந்தேன்.

ஜெயிலிலிருந்து நான் வெளியே வந்தவுடன் பொதுவுடமையே என் கொள்கையென்று அறிக்கை விடுத்தேன். இன்று கூட என் கொள்கை பொதுவுடைமை தான். ஆனால்; தேசத்தின் முன்னிருக்கும் பிரச்னை அபேதவாதக் கொள்கையை ஏற்றுக்கொள்ளலாமா அல்லது பொதுவுடை மையை ஏற்றுக் கொள்ளலாமா வென்பதல்ல.

ஆகவே, காங்கிரஸுக்குள் நான் ஏதோ பொதுவுடமைத் தகராறைக் கிளப்புகிறேனென்று நீங்கள் நினைக்கவேண்டாம். தேச விடுதலைப் போராட் டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று நான் காங்கிரஸில் சேர்ந்தேன். தேசீய சுதந்திரம் கிடைத்த பின்பு அபேதவாத சர்க்காரை அமைப்பதா வேறெவ்வித ஆட்சியையாவது ஏற்படுத்துவதா என்பதை யோசித்துக் கொள்ளலாம். இவ்விஷயம் பெரும்பான்மையான இந்திய மக்களால் தீர்மானிக்கப்படவேண்டியது. ஆகையால்தான் தேசத்தின் முன்னிருக்கும் பிரச்னை அபேதவாதத்தைப்பற்றி யல்லவென்று சொல்லுகிறேன்.

## மாணவர்களும் அரசியலும்

ஜூலை 16ந் தேதி ஆல்பர்ட் மண்டபத்தில் கூடிய பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ ஸரத் சந்திரபோஸ், ஜனாப் பஸ்லுல் ஹக் கூற்றைக் கண்டித்துப் பின்வருமாறு கூறினார்.

"நம் நாட்டு யுவர்கள் அரசியலில் உண்மையாக சிரத்தை கொள்ளவேண்டும். பஸ்லுல் ஹக்கின் மற்றொரு கூற்று வங்காள யுவர்களை அவதூறு செய்வதாக இருக்கிறது. நான் வாலிபர்களுள் அடங்காத தன்மையை உண்டாக்க விரும்பவில்லை. உலகில் முன்னேறவேண்டுமாயின் ஒழுங்கு நியதியும், கட்டுப்பாடும் வேண் டும். மாணவர்கள் ஏதேனும் ஒரு சட்டம் நியாயமற்ற சட்டமெனக் கருதினால் அவர்கள் அதனை எதிர்க்கும் தைரியம் தங்களுக்குள்ளதை செயலில் காட்டவேண்டும்.

—"கத்திரிக்கோல்"

# உதிர்ந்த மணிகள்

### சமாதானத்திற்கு வழி!

சமாதானத்தையும் நமது தேசத் தற்காப்பையும் முன்னிட்டு நாம் நமது யுத்த தளவாடங்களைப் பெருக்கியே ஆகவேண்டும்.

—ஸர். தாமஸ் இன்ஸ்கிப்

### தேசீய சின்னம்

தாய்நாட்டின் விடுதலைக்குச் சின்னமாகவே காங்கிரஸ் விளங்குகிறது.

—புலாபாய்

### சமமான பலம்

ஹனுமாருடைய வாலும் அவருடைய புஜங்களைப்போல் பராக்கிரமம் உடைய தென்பதை உணரவேண்டும்.

—ராஜாஜி

### முத்தண்ணு எச்சரிக்கை

நேரு யதாஸ்து தகராறே போதிய கேடு விளைவித்திருக்கிறது. பொது நடவடிக்கை எடுப்பதற்காக முற்போக்காளரை யெல்லாம் ஒன்றுபடுத்தத் தம்மால் இயன்றதை யெல்லாம் செய்கிறவர்க்கு அனுவசியமாக பண்டித ஜவஹர்லால் நேரு ஆத்திரம் மூட்டினல் கேடே அதிகரிக்கும்.

—மௌலானு ஷௌகத்தலி

### வங்காளிகள் தீரம்

இரவு நடமாட்டத் தடை உத்தரவுகள், ராணுவங்கள் அணிவகுத்துச் செல்லுதல், துப்பாக்கிப் பிரயோகம், அதிகாரிகள் ஆக்ஞைகள், அதிகாரிகளது தலையீடு முதலியவற்றைக் கண்டு ஜனங்கள் அஞ்சவில்லை.

—ஸரத் போஸ்

### அபிவிருத்தி எங்கே?

தற்காலம் பணக்காரர்கள் ஏழைகளாகிக்கொண்டு வருகிறார்களே ஒழிய, எந்த ஏழையும் பணக்காரனுக ஆனதாகத் தெரியவில்லை.

—எஸ். சத்தியமூர்த்தி

### உண்மை நிலை

தீய செயல்களைச் செல்வம் மறைத்துவிடுகிறது; நற்செய்கைகளைத் தாரித்திரியம் அழுத்திவிடுகிறது.

—திரு. ராகவாசாரியர்

### சுதேசி கப்பல் வர்த்தகம்

டக்கா நெசவுக்காரரைப்போல் கல்கத்தா கப்பல்காரரும் அழிந்தனர். 1921-ஆம் வருஷம் முதல் உள்ள புள்ளி விவரங்களைக் கொண்டு பார்த்தால் இந்தியாவின் கடல் வர்த்தகத்தில் ஒரு சத விகிதங்கூட இந்தியக் கப்பல்களின் மூலம் நடைபெறவில்லை யென்பது தெரியும்.

—டாக்டர் நாராயணசாமி

### அபிப்பிராய பேதம் எது?

சட்ட சடை போகும் விஷயமாக காங்கிரஸ்காரருள் அபிப்பிராய பேதமில்லை. அதன் நோக்கத்தைப்பற்றியும் அபிப்பிராய பேதம் இல்லை.

—சர்தார் படேல்

# எமது மனமார்ந்த வந்தனம்.

சென்ற மாதம் ஆனி 15-தேதி (ஜூன் 28) யன்று எமது குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீனிவாஸனுக்கும் (சித்தூரில் ப்ரபல வக்கீலாயும், பல வருடங்கள் ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி தலைவராயும் இருந்து சமூகத் தொண்டாற்றிய ஸ்ரீமான் ராவ் பகதூர் T. V. ரங்காச்சாரியரின் குமாரத்தி) சௌபாக்யவதி பத்மாஸனிக்கும் விவாகம் நடந்த அன்றும், ஜூலை முதல் தேதி சென்னையில் நடந்த தேனீர் விருந்திற்கும் நம்முடைய மோகினியின் அன்பர்களான பல சந்தா நேயர்களும், ஏஜண்டுகளும் தம்பதிகளுக்கு வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும், அனுப்பியதற்காக அவர்களனைவருக்கும் தனித்தனியே கடித மெழுத சாத்யமில்லை யாதலால் மோகினியின் மூலமாகவே எல்லோருக்கும் எமது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வை. மு. கோதைநாயகி.

வை. மு. பார்த்தசாரதி.

## பத்திரிகை விமர்சனம்

## ஹநுமான்

[ஆசிரியர்: ஸ்ரீமான். ரா. பார்த்தசாரதி. பிஏ. பி. எல். 150 அண்ணாப் பிள்ளை தெரு. ஜி. டி. சென்னை.]

ஹனுமானின் அருமையான ப்ரபாவத்தினால் அப்பெயரைக் கேட்கும் போதே, கூறும்போதே ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஒரு சக்தி உதிப்பதாகத் தோன்றும். அப்படியே அப்புனிதமான வீரனின் பெயரால் வெளிவரும் ஹனுமான் என்ற இப் பத்திரிகையைப் படித்துப் பரமாநந்தமடைந்தோம். ஹனுமாருக்கு மிகவும் விசேஷமான ஞாயிற்றுக்கிழமை யன்று வெளிவரும் இப்பத்திரிகை ஆரம்பம் முதல் கடைசி வரையில் படித்தும், சமயத்திற் கேற்றவாறு போட்டுள்ள படங்களைக் கண்டு மகிழ்ந்தும் கொண்டாடக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது. இதன் விலை ஒரு அணா தானாதலால் எல்லோரும் வாங்கி ஆதரவளிப்பார்களாக.

சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற வாக்யத்தின்படி ஹனுமானைப் பற்றிக் கூறவேண்டுமானால் ஸ்ரீராமாயணத்தில் பாணத்தினால் தாக்குண்டு மூர்ச்சித்திருந்த இளையாழ்வானையும் மற்றையோரையும் அந்த ஹனுமான் சஞ்சீவி கொணர்ந்து எப்படி புத்துயிர் அளித்துக் காத்தாரோ அதேபோல் அடிமை, மடமை, பயம், தைரியனன்மை முதலிய பாணங்களால் கட்டுண்டு தவிக்கும் மக்களின் பிணியைப் போக்க இந்த ஹனுமான் சஞ்சீவிக் கொப்பான பல அரிய விஷயங்களைத் தாங்கி வந்து நாட்டிற்கு நலம் பெறச் செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆழ்ந்த யோசனையில் அசைவற்று உட்கார்ந்திருந்த ஹரி நாத்தின் கைகளைப் பிடித்துக்கொண்டு அம் மாதரசி "மிஸ்டர் ஹரி நாத்! ஏன் ஏதோ ஒருவாறு இருக்கிறீர்கள்? நான் அதிகப்ரசங் கித்தனமாக இப்படிப் பேசிவிட்டேனே என்று நீங்கள் வெறுக்கி றீர்களா, அன்றி கோபிக்கிறீர்களா! நான் அம் மாதிரி சொல்லியது குற்றமாயின் என்னை மன்னிக்கவேண்டும்.

மிஸ்டர் ஹரிநாத்! தங்களிடம் என் பிதா பரிபூர்ண அன்பு செலுத்தி சினேகங்கொண்ட நாள் முதல் அவர் தங்களை நினைக்கும் பாவனைப்படியே நான் சர்வ சுதந்தரத்துடனும், என்னை மீறிய சந்தோஷத்துடனும் யோசிக்காமல் கூறிவிட்ட வார்த்தைகள் சற்று துடுக்காகவோ, அச்சமற்றுக் கூறியதாகவோ தங்களுக்குத் தோன்றி இருக்கலாம். அதனுல் தாங்கள் என்னைப்பற்றி கேவலமாகவும் எண்ணி இருக்கலாம். ஹரிநாத்! தங்கள் முக மாறுதலைப் பார்த் தால் தாங்கள் என்னை விலைமாதென நினைத்துவிட்டீர்களா என்ன?" என்று கேட்கும்போது அந்த நங்கையின் கண்களில் நீர் மடமட வென்று உதிர்ந்துவிட்டது.

இதைக் கேட்ட ஹரிநாத் திடுக்கிட்டுத் தன்னை யொருவாறு தேற்றிக்கொண்டு "ஓ மேடம்! நான் அப்படியொன்றும் வித்யாச மாக நினைக்கவில்லை. தாங்கள் இத்தகைய சந்தோஷத்தை எனக் குத் தெரிவித்தும் எனது பழங் கதைகள் என்னைக் கலக்கிவிட்ட தால் என் உணர்வழிந்துவிட்டேன். அதற்காக மன்னிக்கவேண்டும், தங்களுடைய பிதாவினுல்தான் எனக்கு இந்த கவுரவம் வந்ததென் பதை என்னுளும் நான் மறக்கவே மாட்டேன். முன்பின்னறியாத இவ் வூரில் அவருடைய பேருதவியும், தயவும் இல்லாவிடின் நான் மிகவும் கஷ்டப்பட்டிருப்பேன். எல்லாம் ஆண்டவனின் செயல்." என்றுன்.

அன்று அதிக சம்பாஷணைக்கு இடம் ஏற்படவில்லை. ஹரி நாத்தின் சினேகிதர்கள் எல்லாம் ஒருவர்மேல் ஒருவராக வந்துவிட் டதால் லில்லி என்ற அம் மாதரசி எழுந்து போய்விட்டாள். லில்லியின் தகப்பனுராகிய வில்லியம் என்பவர் கண்ணியம் பொருந்

திய பெரிய மனிதர்; ஆகையினால் அவருடைய சிநேகம் ஹரிநாத் திற்கு மிகவும் உதவியாயும், அவசியமாயும் இருந்ததால் அடிக்கடி அவர் வீட்டிற்கு ஹரிநாத் செல்லுவது சகஜமாயிருந்தது.

லில்லியின் எண்ணம் ஹரிநாத்திற்கு முதலில் தெரியவில்லை எனினும் நாளடைவில் அதுவும் அறிந்துகொண்டான். அதனால் முதன் முதலில் மிக்க விசனமும் வெறுப்பும் கொண்டானே யன்றி பிடித்தம் ஏற்படவில்லை. விதியை வெல்ல யாரால் முடியும்? இம் மாய ப்ரபஞ்சத்தின் மாயா லீலைகளை ஜெயிக்க எந்த சாதாரண மனித னால்தான் முடியும்? பெரிய பெரிய த்யாக முனிவர்கள் எல்லாம் தம் யோகமழிந்து ஆசை வேகத்தில் மூழ்கிவிட்டார்கள் என்றால் கேவல மனிதர்களை அந்த ஆசைப் பிசாசம் பிடித்துக்கொள்வது வியப்பா!

தன்னை யொரு விகல்பமான உணர்ச்சியும் பாதிக்காமல் காப் பாற்றவேண்டும் என்று முதன்முதல் கடவுளைத் தோத்திரம் செய்த ஹரிநாத்தின் தீரமான இதயமும் சற்று நழுவிவிட்டது. சபல புத்தியே தலைக்கேறியது. இதற்குக் காரணம் தன் மனத்திற்கு ஒவ் வாத மனைவியின் ப்ரேமையற்ற தன்மையொன்று. மனத்தைக் கவர்ந்த மங்கையை அடைய முடியாத விதியமைந்ததொன்று. இரண்டுமே அவனை நிலை குலையச் செய்தன.

லில்லியின் பேரழகும் அவளுடைய வெகு சாமர்த்தியமான குணமும், பெரிய படிப்பின் அழகும், அவள் தன்பால் கொண்டுள்ள உண்மையான காதலின் தீரமும் ஒன்றுகூடி அவனை வதைக்கும் போது "ஏன் நாம் மட்டும் உலகத்தில் பிறந்து சகலமான சந்தோ ஷத்தையும் அநுபவிக்காமல் இருக்கவேண்டும்? ஏன் நாம் எட் டாத கனியை எண்ணிக் கொட்டாவி விடவேண்டும்? நம்மிடம் இத் தனை ப்ரியமாகவிருக்கும் லில்லியை ஏன் அடையக்கூடாது?" என்ற எண்ணங்கள் உதிக்க வாரம்பித்தன.

ஆனால் திடும் திடும் என்று சௌதாமினியின் காம்பீரமான உருவமும் பரிதாபகரமான பார்வையும் அவனை. ஆட்டாமலில்லை. இந்த பரீக்ஷைக்குத் தொடர்ந்தாற்போல் இன்னொரு பரீக்ஷையும்

படித்துத் தேறிவிட்டால் பெரிய பதவியும் வருமானமும் கிடைக்கும் என்று தெரிந்ததால் அதையும் படித்துவிட்டே தான் திரும்பிச் செல்வது என்று தீர்மானித்துவிட்டான்

இவன் முதல் வகுப்பில் தேறி பதக்கமும் பரிசு வாங்கிவிட்டதால் அந்த வகுப்பில் தோல்வியடைந்த சிலருக்கு இவன்மீது அபாரமான பொறாமையும், க்ஷாத்திரமும் உண்டாகிவிட்டன. அதனால் அவர்கள் ஒன்றுகூடி எப்படியாவது ஹரிநாத்தை இந்த பரிக்ஷையில் தோல்வியடையும்படிச் செய்துவிடவேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஹரிநாத் ஒரு தினம் உலாவி விட்டுத் தனிமையில் வரும்போது அத் துஷ்டர்கள் மாறு உருவத்துடன் தோன்றி ஹரிநாத்தை பலமாக அடித்து வீழ்த்திவிட்டு ஓடிவிட்டார்கள். இம் மாதிரி தனக்குச் சில பகைவர்கள் இருக்கிறார்கள் என்பதே தெரியாதிருந்ததால் இம் மாதிரி நேர்ந்துவிட்டதற்கு நடுநடுங்கி ஸ்மரணையற்றுவிட்டான்.

வேறு யாரோ சிலர் அவ் வழியோடு போகும்போது இவன் கிடக்கும் நிலைமையைக் கண்டு பரிதாபத்துடன் தூக்கிக்கொண்டு வந்து ஆஸ்பத்திரியில் விட்டார்கள். ஹரிநாத்தை ஆஸ்பத்திரியில் வெகு ஜாக்ரதையாகவும் அக்கரையுடனும் உபசரித்து வந்தார்கள். ஹரிநாத் வழக்கம்போல் தன் வீட்டிற்கு வராமையினால் லில்லிக்கும் வில்லியமுக்கும் பெரிய குழப்பமேற்பட்டது. காரணம் தெரியாமையினால் அவன் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்று விசாரித்ததில் இரண்டு நாட்களாக ஹரிநாத் ஹோட்டல் பக்கமே வரவில்லை என்று தெரிந்ததும் தந்தைக்கும் மகளுக்கும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த கலவரமும் கவலையும் உண்டாகிவிட்டன.

கவலையுடன் எங்கெங்கெல்லாம் விசாரிக்க முடியுமோ அங்கெல்லாம் தேடினார்கள். ஒருவிதமான தகவலும் தெரியாது தவிக்கையில் அன்று வந்த பத்திரிகையில் கொட்டை எழுத்தில் கீழ் காணும் விஷயம் பிரசுரமாகி இருந்தது.

## தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையுடன் நீங்கியது

"டாக்டர் ஹரிநாத் பிழைத்ததை புனர்ஜன்மம் என்று கூறினல் மிகையாகாது. திங்கட்கிழமை மாலை சவுக்குத் தோப் பிற்கருகாமையில் உள்ள மணற்பாங்கில் யாரோ துஷ்டர்க ளால் ஹரிநாத் மிகவும் பயங்கரமாக அடிக்கப்பட்டு ஸ்மரணை யற்றுக் கிடந்தார். நாங்கள் பந்தாடிவிட்டு வழியோடு செல் கையில் அவரை இன்னரென்று அறியாது, ஆஸ்பத்திரியில் சேர்த்த பிறகே அங்குள்ள ஒருவரால் இன்னரென்றறிந்து கொண்டோம். அடித்தவர்கள் கள்ளர்களல்லவென்பது அவ ரிடமிருந்த பொருளும் பணமும் அப்படியே ஒரு சல்லிகூடக் குறையாமலிருப்பதிலிருந்து தெரியவருகிறது. இது யாரோ வேண்டுமென்று செய்திருக்கும் காரியம் என்று எல்லோரும் அபிப்ராயப்படுகிருர்கள். போலீஸார் இதுபற்றி புலன் விசா ரித்து வருகிருர்கள். இரண்டு நாள் ஹரிநாத்துக்கு சுய உணர்வே வராதிருந்தது. இன்றுதான் சற்று உணர்வு பெற் றிருக்கிருர் எனினும் மூளையே சிதறும்படி மண்டையில் அடிபட்டுவிட்டதால் அவர் வாய்திறந்து பேசுவதே கூடா தென்று வைத்தியர் திட்டம் செய்திருக்கிருர். இனிமேல் ப்ராண பயமில்லை என்று வைத்தியர்கள் கூறுகிருர்கள். கடவுளே துணை."

இந்த விஷயத்தைப் படித்ததும் லில்லியின் மனது துடித்தது. வயிறு பற்றி எரிந்தது. உடனே தான் சென்று பார்க்கவேண்டு மென்கிற பேராவல் உதித்ததால் தன் பிதாவுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்ருள். ஹரிநாத்தின் பரிதாபமான நிலைமை லில்லியத்தின் மனத்தையுருக்கியது. அவர் பெருமூச்சு விட்டபடியே, "லில்லி! நான் நினைத்தபடியேதான் நடந்திருக்கிறது. வெளி தேசத்திலிருந்து வந்தவர் இப் பரிக்ஷையில் முதன்மையாகத் தேறிப் பதக்கமும் பரிசு பெற்றுவிட்டதால் இவரிடம் அனேகருக்குப் பொருமையும் க்ஷாத்திரமும் நிரம்பி இருந்ததை நான் ஒருவாறு உணர்ந்தேன். அவர்களால் ஒருவிதமான தீங்கும் நேராதிருக்கவேண்டுமே என்று

பயந்தேன். இது அத்தகையோரால் நடந்த சதியேயன்றி வேறல்ல வென்பதைத் திட்டமாகச் சொல்வேன்.

லில்லி! அதோடு, இவ்விதம் செய்திருக்கும் மனிதர்களும் யார் என்று எனக்கு ஒருவாறு தெரியும். பெயரைச் சொன்னுல் பொல்லாப்புதான் வரும். பெரிய இடத்துச் சமாச்சாரமாகையினுல் பேசாதிருப்பதே நலம். என்று விட்டுவிட்டேன்.' என்று கூறும்போது லில்லி ஆத்திரத்துடன் "ஏனப்பா அப்படி விடவேண்டும்? வெளிநாட்டினர் நம் நாட்டுக்கு வந்து நம் மக்களுடன் எத்தனையோ சிநேகபாவமாக நடக்கும்போது நம் நாட்டவர்கள் மட்டும் அவர்களிடம் பகைமை பாராட்டுவது தகுமா! இம் மாதிரிச் செயல்களை கண்டிக்காமல் வளரவிட்டால் இது நியாயமாகுமா?'' என்ருள்.

இச்சமயம் ஹரிநாத் சற்று கண்ணைத் திறந்தான். ஆனுல் அடுத்த விநாடியே மூடிக் கொண்டான். அப்போதே வில்லியமும் லில்லியும் ஓர் தனித்த விடுதியை ஆஸ்பத்திரியிலேயே எடுத்துக் கொண்டு ஹரிநாத்தை அங்கு மாற்றிக் கொண்டு தாங்களே பக்கத்திலிருந்து இரவு பகல் இடைவிடாது கவனித்ததால் சுமார் 15 தினங்களில் ஹரிநாத் நல்ல நினைவும் குணமும் பெற்று விட்டான். பின்னும் ஒரு மாதத்திற்குள் ரணங்களும் நன்ருக ஆறிவிட்டன.

ஹரிநாத்தின் அருகிலேயே சதா இருந்து வெகு அன்பாக லில்லி உபசரித்துப் பணிவிடை செய்ததானது அவனுடைய அன்பை பின்னும் பதினுயிரம் பங்கு இழுத்து விட்டது. லில்லியின் அபாரமான அன்பில் ஹரிநாத் முற்றிலும் ஆழ்ந்து விட்டான். உலகத்தில் பூகம்பம் வரும்போது ஒரு புறம் உயர்வதும், ஒரு புறம் அடியோடு மறைந்து பூமியுடன் பூமியாவதும் எப்படி இயல்போ அப்படியே மனிதர்களின் வாழ்க்கையிலும் எத்தனை பூகம்பங்கள், எத்தனை புயல் காற்றுகள், எத்தனை ப்ரளயங்கள் தோன்றி அவ்வப்போது அனைத்தையும் மாற்றியும், புதுப்பித்தும், பழமையை மறக்கச் செய்தும் தன்னுட்சி புரிந்து வருவது இயற்கையல்லவா! எத்தனை இடங்களில் இம்மாதிரியான பலவித மாறுதல்களை நாம் காண்கிருேம்.

மாடமாளிகையும் கூட கோபுரமுமாக நம் கண்ணுக்குத் தோன்றிய தோற்றம் பூகம்பத்திற்குள் புதைந்து விடுகிறதும், வேறு கண்ணால் கண்டிராத கட்டிடம் கண்ணுக்குத் தெரிவதும் போல் ஹரிநாத்தின் இதயத்தில் புது மோகமாகிய பூகம்பத்தில் பழய கட்டிடமாகிய சௌதாமினியின் காதல் புதைக்கப் பட்டதுபோல் மறைந்தது. லில்லியின் மீது கரை காணாத அன்பு உதயமாகி வளர்ந்து விட்டது.

அவளுடைய அபாரமான அன்பு பொருந்திய பணிவிடையினால் சீக்கிரமே குணமடைந்து வீடு வந்து சேர்ந்தான் முன்னை விட அதிகமான ஸ்வதந்தரத்துடன் லில்லியோடு பழக வாரம்பித்தான். லில்லியும் இவனும் தம்பதிகளாகி விடுவது நிச்சயமென்றே காண்போர் கருதும் நிலைமைக்கு வந்து விட்டார்கள்.

ஆனால் ஏற்கெனவே விவாகமாகி இருக்கும் இவனை எப்படி அவள் மணம் செய்து கொள்ள முடியும்? இதனால் பெரிய குழப்ப மேற்பட்டது. ஹரிநாத்திற்கு எத்தனை மாறுதல்கள் ஏற்படினும் தன் மதத்தை விட்டு மதம் மாறுவதற்கு மட்டும் மனம் சற்றும் இடந்தரவில்லை. ஆனால் லில்லியின் தகப்பனுருக்கு அவள் ஒரே செல்வப் புதல்வி யாதலால் அவள் ஹரிநாத்தை மணப்பதற்கு வில்லியம் எவ்வித ஆக்ஷேபணையும் செய்யாததால் அவள் எப்படியும் ஹரிநாத்துடன்தான் தான் வாழமுடியும் என்பதை உறுதியுடன் தெரிவித்து தந்தையின் ஆசியைப் பெற்று விட்டாள்.

ஹரிநாத்தை மணக்கும் பொருட்டு லில்லி ஆரிய சமாஜத்தின் மூலமாக இந்துவாக மாறி லில்லி பெயரை லீலா வென்று மாற்றிக் கொண்டு, ஹரிநாத்தை பூர்ண சந்தோஷத்துடன் மணந்து கொண்டாள். புதிய வெள்ளத்தில் பழய எண்ணங்கள் எல்லாம் அடியோடு மறந்து விட்டதென்றே கூறலாம். இன்பமான இல்வாழ்க்கையின் இனிமையில் ஹரிநாத் புனர் ஜென்மம் கொண்டவன் போல் மாறிவிட்டான்.

அடுத்த பரிக்ஷையில் தோல்வியடைய வேண்டு மென்று வேண்டி சதி செய்தவர்களின் முன்பு அவன் அதிலும் அபார

வெற்றி பெற்று தேறிவிட்டதால் அந்த ஊர் பெரிய ஆஸ்பத்திரியி லேயே பெரிய சம்பளத் தொகையில் வேலையும் கிடைத்து விட்டது. இந்த ஆநந்த வாழ்க்கையை விட்டு அவன் நரக வேதனையை அடை வதற்கு இனி இசைவானு? ஆனுல் எப்போதாவது ஒரு சமயம் சௌதாமினியின் நினைவு மட்டும் குளத்தில் பாசி மூடுவதுபோல் சற்று தோன்ருமலில்லை. அதுவும் அடுத்த வருடம் தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு அதே பெயரிட்டு வாய் ஓயாமல் 'சௌதாமினி! சௌதாமினி!' என்று அழைத்துக் கொஞ்சிக் குலாவு வதில் மறைய வாரம்பித்தது. என்னே உலகம்! என்னே உறுதி! என்னே காதல்! என்னே ஆசை! ........எல்லாம் வெறும் தோற்ற மல்லவா! எல்லாம் மாயப்ரபஞ்சத்தின் மாயா லீலையின் சாய லல்லவா! வீண் உருவெளித் தோற்ற மல்லவா? எல்லாம் வெறும் கானல் நீரல்லவா? இங்கு இவனது லீலையையும், அறவே மாறிவிட்ட மாறுதலையும் அறியாத சௌதாமினியின் மனத்தூய்மை மாறிற்ரு? உறுதியுடன் கூடிய ஆழ்ந்த அன்புக்கு அடிமையாகி விட்ட சௌதாமினியின் கண்ணீரும், பெருமூச்சும், கவலையும், துயரமும் அவளை விட்டுப் போகுமா! அவையன்ருே அவளுக்குத் துணை.

---

## 15—வது அதிகாரம்

## கொலைக்கு மஞ்சாக் கூரிய நெஞ்சம்

கோலாகலம் சொல்லிய வார்த்தையினுல் இடி முழக்கம் கேட்ட நாகம்போல் நடு நடுங்கி விட்ட ஊர்மிளாவின் நிலைமை மிகவும் திண்டாட்டமாகி விட்டது. தான் செய்து விட்ட மகத்தான குற்றத்தின் பயங் கரத்தையோ பாதகத்தையோ சற்றும் எண்ணுமல், இதைத் தன் கணவனுக்கு சௌதாமினி சொல்லிவிடாது சூழ்ச்சி செய்து விட

வேண்டுமென்ற திகில் பிடித்துக் கொண்டது அவளது மூளையே சுழல்வதுபோலாகி விட்டது.

“கோலாகலம்! இதற்குத் தக்க சூழ்ச்சி என்ன செய்யலாம் நீயே சொல்லு என்னைச் சுற்றிலும் இப்போது பேராபத்துக்கள் நிற்பதாக என் மனத்தில் வேதனை செய்கிறது. அந்த பெரிய டாக்டர் என்னவோ துலைந்து விட்டார். இனி அவரால் பயமில்லை. இந்த ரகஸ்யம் வெளி வந்ததென்றால்—வெளி வருமாயின்—அது அந்த சௌதாமினியின் மூலந்தான் வெளியாக வேண்டும். ஆதலால் அவளை தலை எடுக்காமல் செய்வதற்கு ஓர் உபாயம் சொல்லேன்”, என்று கேட்டாள்.

கோலா:—ஊர்மிளா! திடீரென்று நாம் இப்போது என்ன செய்ய முடியும்? இம்மாதிரியான காரியங்களைச் செய்வதற்கு நன்றாக யோசித்துப் பிறகு தான் சொல்ல வேண்டும். எப்படியும் அவள் கொட்டத்தை யடக்கினால் தான் எங்கள் பிழைப்பும் நடக்க முடியும். எங்கு சென்றாலும் எல்லோரையும் காக்காய் பிடித்து எல்லோருக்கும் மிகவும் நல்லவளாகி விடுகிறாள். அதனால் அவள் செல்லும் வீடுகளில் அவளுக்குப் பெரிய மதிப்பும், அன்பும் உண்டாகி விடுகிறது. ஆகையினால் நாம் என்ன செய்தால் நலமென்பதை நாங்கள் யோசனை செய்து பின் தெரிவிக்கிறேன். இதை மட்டும் நீ விடவே கூடாது. நான் சென்று நாளைய தினம் வருகிறேன்” என்று கூறி விட்டு விடை பெற்றுச் சென்றாள்.

ஊர்மிளா பிழைத்த சந்தோஷம் அவள் தாயாருக்குத் தோன்றியதே யன்றி தகப்பனுருக்கு ஒரு சிறிதும் சந்தோஷமே இல்லாது அதற்குப் பதில் மிகுந்த விசனமும், சதா மனத்தில் ஒரு விதமான கவலையும் உண்டாகி விட்டன. அதற்குக் காரணம் தன் மகளின் மிகவும் வெட்கக் கேடான ரகஸ்யத்தை அவர் அறிந்து கொண்டதே யாகும். பெரிய வைத்தியர் யாரிடம் ஒளித்தாலும் தகப்பனுரிடமும் இதை ஒளித்து விட்டால் அந்த பெண்ணின் பிற்காலத்து வாழ்க்கை பின்னும் சந்தி சிரித்து விடும் என்பதை உணர்ந்து தகப்பனுருக்கு மட்டும் இதைத் தெரிவித்து விட்டார்.

மகா மானியும், நற்குணவானுமாகிய அவள் பிதாவுக்கு இச் செய்தியைக் கேட்டதும் தீயை மிதித்ததுபோலாகி விட்டது. அவரால் இந்த அவமானம் தாங்காது இதயம் வெடித்து விடும்போலாகி விட்டதால் "இந்த பெண் இதே வியாதியால் இறந்து போய் விடக் கூடாதா! இது ஏன் பிழைக்க வேண்டும்?" என்று மனதார வேண்டினர். ஆனல் பெத்த தாயிடமும் சொல்ல வில்லே. தனக்குள்ளேயே வைத்து மிகவும் பரிதபித்தார்.

பெண்ணின் குணத்தைக் காணக் காண அவர் வயிறு எரிந்தது. ஆதியில் தான் ஹரிநாத்தைக் கண்டித்து சௌதாமினியுடன் பேசக் கூடாதென்று திட்டம் செய்ததும், அவன் அவ்வாறே கட்டுப் பட்டதும் தனக்கு இஷ்டமில்லா விடினும் பெரியவர்களுக்கு அடங்கி தன் மகளே மணம் செய்து கொண்டதும் அவர் நினைவுக்கு வந்து மிக்க வேதனையை உண்டாக்கியது.

தன் புருஷனுக்குள்ள மலே போன்ற புகழை யறியாது இவ் விதம் தறிதலேயாகி விட்ட தன் பெண்ணே நோக்கி உள்ளூற வயிறெரிந்து வெறுத்தார். இனி இவளே இங்கு வைப்பது கூடாதென்றும், தன் மருமகன் வரும் பரியந்தம் தனது கிராமத்திற்கே சென்று கிராம வாஸம் செய்யத் தீர்மானித்து விட்டார். இதை யாரிடமும் சொல்லாமல் அதற்கான முயற்சிகளேச் செய்து விட்ட பின்னரே "இவ்வீடு வாடகைக்கு விடப்படும்" என்ற அட்டையை ஒட்டி விட்டார்.

கோலாகலத்தை யனுப்பி விட்ட பிறகு ஊர்மிளா வீதியில் வந்து நிற்கையில்தான் இந்த அட்டையைப் பார்த்து, உடனே திடுக்கிட்டாள். விவரம் அறியாததனல் இது வேண்டுமென்று யாரோ குறும்புக்காரர்கள் செய்திருக்கும் காரிய மென்று எண்ணி உடனே அதை யவிழ்த்து எடுத்துக் கொண்டு தகப்பனரிடம் சென்று "அப்பா! அப்பா! இதோ பாருங்கள். யாரோ திமிர் பிடித்த கழுதைகள் நம் வீட்டை வாடகைக்கு விடப்படும் என்று அட்டையில் எழுதி மாட்டி இருக்கிருர்கள். இதைக் கிழித்துக் கொண்டு வந்து விட்டேன்" என்று வெகு அழுத்தமாகக் கூறினள்.

அப்போது தன் பிதாவின் சாமான்களே எல்லாம் வேலேக்காரர்கள் மூட்டை கட்டுவதைப் பார்த்ததும் ஊர்மிளாவுக்கு ஒன்றுமே தோன்ருது விழித்தாள். தான் சொல்லியதற்கு தகப்பனர் ஆச்சரியமாகக் கவனிக்காமல் சாவதானமாகவே அந்த அட்டையை வாங்கிக்;கொண்டு "இது எந்த குறும்புக்காரர்களும் செய்யவில்லே. நானேதான் நேற்று கட்டினேன். நேற்றிரவே குடித்தனத்திற்கு

வரப் போகிறவர்கள் வந்து பார்த்து அட்வான்ஸூம் கொடுத்து விட்டார்கள். இதை யவிழ்த்து விட மறந்துவிட்டேன்.''

என்று முடிப்பதற்குள், ஊர்மிளா அலறியவள் போல் துடித்த குரலில் பேசத் தொடங்கி "என்னப்பா இது? இந்த வீட்டிற்கா குடித்தனக்காரர்கள் வருகிறார்கள்?.........ஏன்... ...... இதை குடித்தனத்திற்கு விட்டால் நாம் எங்கிருப்பது? வேறு பங்களா ஏதாவது வாங்கினீர்களா!......சாமான்களை ஏன் கட்டு கிறார்கள் ? எனக்கொன்றும் விளங்க வில்லையே? என்று கேட்டாள்.

"ஆமாம். உனக்கு எப்படி விளங்கும்? விளங்காதுதான். நாம் இனி இந்த நகரவாஸம் செய்யப் போவது கிடையாது. எனக்கு உடம்பு சரியில்லை. டாக்டர் மலைச்சாரலுள்ள கிராம வாசம் செய் தால் நல்லதென்று சொல்லி இருக்கிறார்; அப்படி இல்லா விட்டால் என்னுயிருக்கே அபாயம் நேரும் என்றும் கூறி விட்டார். ஆதலால் நம் கிராமத்துக்குச் செல்ல ஏற்பாடு செய்து விட்டேன். சாமான்களெல்லாம் க்ராமத்துக்குச் செல்ல ஏற்பாடு செய்து விட்டேன். சாமான்களெல்லாம் க்ராமத்துக்குப் போகின்றன. முதல் தேதி இதை முற்றிலும் காலி செய்து ஒப்பித்து விட வேண் டும். உன் புருஷன் திரும்பி வந்த பிறகு நீ இங்கு வரலாம்'' என்றார்.

ஊர்மிளாவின் மனத்தில் திக்கென்றது. க்ராம வாசத்தை யொரு த்ருணமாயும் அலக்ஷியமாயும் கேவலமாயும் மதித்து வந்த அவளா;இப்போது இதற்கு இசைவாள்? ஏதோ பெரிய நஷ்டம் வந்து விட்டது போல் அவள் மனத்தில் பெருங் கலக்கம் உண்டா கியது. உடனே சற்றும் யோசியாமலும் துடுக்காகவும் பேசத் தொடங்கி "என்னப்பா இம்மாதிரி செய்து விட்டீர்கள்? என்னால் க்ராமத்தில் ஒரு விநாடி கூட இருக்க முடியாது. என்னுடைய மனத்தை சோதிக்க இப்படிச் சொல்கிறீர்களா?

வேண்டுமானால் ஒன்று செய்யுங்களேன். உங்கள் உடம்புக் காக நீங்கள் மட்டும் ஒரு வேலைக்காரனுடன் சில மாதங்கள் கிரா மத்தில் வசித்து விட்டு வாருங்கள். உங்களுக்காக நாங்களும் க்ரா மத்தில் அவஸ்தைப்பட்டுச் சாக வேண்டுமா! அங்கு போது போக் கிற்கு குட்டிச் சுவர்களையும், கொல்லை வெளிகளையும், சப்பாத்திக் கள்ளிகளையும் தவிர வேறு என்ன இருக்கிறது? ஊஹூம். நான் வரமாட்டேன். இந்த ஊரையும் வீட்டையும் விட்டு யார்தான் போக முடியும்? என்னால் வரமுடியாது.''

என்று அழுத்தந் திருத்தமாயும், ஒருவிதமான பார்வையுடன் கூறிய வார்த்தைகளில் "உங்களுக்காக நாங்களும் க்ராமத்தில் அவஸ்

தைப் பட்டுச் சாக வேண்டுமா''? என்ற வாக்கியம் அவளைப் பெற்ற வரானாலும் அவர் மனத்தில் சுருக்கென்று தைத்தது. அவ்வார்த்தையினால், அவள் மனத்தில் பெத்த பிதா வென்கிற பாசமே இல்லை என்பது தெட்டென விளங்கி விட்டது. தனக்கு உடம்பு குணமில்லை என்கிற சாக்கு சொல்லும்போதே சற்றும் அன்பற்றுக் கூறி விட்ட மகளின் மனத்தை யறிந்தபின் வேறு என்ன வேண்டும்?

அவளுக்கு தகப்பனோ தாயோ, கணவனோ! எதுவும் லக்ஷ்யமில்லை. தனது மனம் போனபடியான சுதந்தர வாழ்க்கையின் இன்பந்தான் ப்ரதானம் அதிலுள்ள பயங்கரத்தைக் கூட லக்ஷ்யம் செய்ய வில்லை என்பது நன்றாகத் தெரிந்து விட்டது. அவருடைய மனது இதை யறிந்ததும் பின்னும் துடித்தது. அவர் ஒரே வார்த்தையில் சற்று அதட்டிய குரலில் ''சரி. எனக்கு எல்லாம் தெரியும். உன்னை யோசனை கேட்க வில்லை. உடனே மூட்டைகளைக் கட்டு. நாளை மறுநாள் புறப்படத் தயாராகவிரு'' என்று மட்டும் கூறிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கப் போய் விட்டார்.

இந்த வார்த்தை ஊர்மிளாவின் தலையில் அடித்தது போலாகி விட்டது. ''ஒரு காரணமுமின்றி திடீரென்று இம்மாதிரியான மாறுதல் தன் பிதாவுக்கு ஏன் உண்டாகி விட்டது. ஒருகால் அந்த ரகஸியத்தை இவருக்கு சௌதாமினி தெரிவித்திருப்பாளோ!...... ஐயயோ! நாம் எதற்காக நடுங்கி பயந்தோமோ, அதுவே வந்து விட்டதே. காட்டில் எதேச்சையாகத் திரிந்து கொண்டிருந்த கிளியை கூட்டில் அடைப்பதுபோல் என்னை கேவலமான பட்டிக் காட்டில் கொண்டு அடைத்து விட்டால் என் பொழுது எவ்விதம் கழியும்? சிறைச்சாலையைப் போன்றல்லவா இருக்கும்! அதை நினைக்கும் போதே பயங்கரமாக விருக்கிறதே என்ன செய்வேன்? எவ்வித சாகஸம் செய்து இதை மாற்றுவது?'' என்ற பெருங் குழப்பமும் கவலையும் உண்டாகி விட்டதால் நேரே தன்னறைக்குச் சென்றாள்.

தனது மாபெருங் குற்றத்தைப் பற்றி ஒரு சிறிதும் சிந்தியாமல் அறவே மறந்து விடுவதும், பிறர் மீதே குற்றமும் குறையும் பொறாமையும் கண்டு பிடிப்பதுந்தான் இக் கலிகாலத்தின் கூற்றாகும்; மாயப்ரபஞ்சத்தின் மயக்காகும். ஊர்மிளா மட்டும் இந்த விதிக்கு எங்ஙனம் விலக்காகக் கூடும்? தான் செய்துள்ள கொடிய பயங்கரத்தை இம்மியளவும் நினைக்காமல் மறந்து விட்டதோடு தனக்குத் துன்பம் வருகிறது என்று நினைக்கும்போதெல்லாம் சௌதாமினியின் மீது பெரும் பகையும், ஆத்திரமும், அவளால் தான் தனக்கு ஆபத்து நேருகிறது, நேரப்போகிறது, நேர்ந்து விடும் நேர்ந்து விட்டால்......... என்றெல்லாம் யோசனை தோன்றி விபரீதமான ஆத்திரத்தை யடைவாள்.

அதே போல் தன்னறைக்கு வந்ததும் பித்து பிடித்தவள் போல் அங்கு மிங்கும் ஓடினாள். "சௌதாமினியைக் கொன்று விட்டால் தான் என்ன? என் வாழ்க்கைக்கு பங்கம் செய்ய விருக்கும் துஷ்டையை ஏன் கொல்லலாகாது? கொல்வதால் பாவம் என்ன? தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு தன் எதிரியை என்ன தான் செய்யலாகாது?" என்றது போன்ற குருட்டு நியாயமும், திருட்டு வேதாந்தமும் முரட்டுத்தனமாக எண்ணினாள்.

வீதிப் பக்கம் ஜன்னலால் நோக்கினாள். சிறு தூறல் தூறிக் கொண்டிருந்தது. அங்கேயே வீதியைப் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் நின்றாள். ரிக்ஷா வண்டியில் சௌதாமினி எங்கேயோ கேஸுக்குப் போவதைப் பார்த்ததும் இன்னும் ஆத்திரம் அதிகரித்து விட்டது. ஒரு பெரிய கல்லை அவள் தலையில் போட்டு விடலாமா வென்ற பயங்கரமான எண்ணமும் உண்டாகியது. வெட்ட வெளியில இச் செய்கையை யாரேனும் பார்த்து விட்டால் ஆபத்து என்ற உணர்ச்சி மட்டும் அந்த ஆத்திரத் தீயிக்கு மத்தியில் ஒரு சிறிது தோன்றியது. பல்லைக் கடித்துக் கொண்டே நின்றாள். வண்டியும் சென்று மறைந்து விட்டது.

மீண்டும் ஒன்றுந் தோன்றாமல் சில நிமிஷங்கள் தவித்தாள். தன் தாயிடம் வந்தாள். தாயாரும் மூட்டை முடிச்சுகள் கட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு ஸ்வதந்திரம் நிறைந்த அதிகார தொனியில் பேசத் தொடங்கி "என்னம்மா இது? திடீரென்று அப்பா ஏன் ஊருக்குப் போகப்போகிறாராமே.........நீயும் மூட்டை கட்டுகிறாயே. நான் எப்படியம்மா அந்த பட்டிக் காட்டில் காலந்தள்ளுவேன்? அது கட்டோடு முடியவே முடியாது. நீ கட்டாயம் மறுத்துக் கூறுவதற்கென்ன?" என்று கேட்டாள்.

இது கேட்ட தாயார் சில நிமிடங்கள் மவுனமாயிருந்த பின்னர் "மறுத்துக் கூறும் தைரியம் எனக்குக் கிடையாது நான் அந்த காலத்து மனுஷியாகையால் அவர் எவ்விதம் சொல்கிறாரோ அவ்விதந்தான் நான் நடக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த பட்டிக் காடும் மனிதர்கள் வசிக்கும் ஊரே யன்றி காடல்லவே! ஆகையால் அங்குள்ள மனிதர்களை விட நாம் கொம்பு முளைத்தவர்களல்ல. போது போகாமல் அப்படியே சூரியன் நிலைத்து விட மாட்டான். அப்பாவின் உடம்பிற்கு மிஞ்சியா மற்றது? எனக்கு அது தான் ப்ரதானம். நீ இப்படி அசட்டுத்தனமாகப் பேசுவது சற்றும் நன்றாக இல்லை. பெரியவர்கள் என்ற மரியாதையுடன் நடந்து கொள்ளு. உன் துணிமணி சாமான்களை எல்லாம் கட்டி வைத்துக் கொள்ளு. வீண் எண்ணமும் வீண் தாமதமும் செய்யாதே."

என்று சற்று கடுகடுத்த த்வனியுடனேயே கூறிவிட்டு வேலையாக உள்ளே போய் விட்டாள்.

இனிமேல் என்ன செய்வது? இரண்டிடத்திலும் ஒன்றும் சாயவில்லை. ஊர்மிளாவின் நிலைமை மிகவும் கவலையில் மூழ்கி விட்டது. அன்று முற்றும் ஊணும் உறக்கமும் அவளிடம் நாடவே இல்லை. இம்மாதிரியான ஆத்திரம் அதிகமாக ஆக அவளுடைய கோப நினைவு முற்றும் சௌதாமினியின் மீதே பாய்ந்தது. அவளால் தான் தனது வாழ்வே பாழாகி விட்டது என்ற எண்ணமே தலை தூக்கி விட்டதால் அதை யடக்க மாட்டாது தவித்தாள்.

தாங்கள் ஊருக்குச் செல்வதை முக்யமான சிலரிடம் ப்ரயாணம் சொல்லிக்கொள்வதற்காக ஊர்மிளாவின் தாயார் கிளம்பினாள். தன் மகளையும் உடன் அழைத்துச் சென்றாள். இவர்களுக்கு வேண்டிய பந்துக்கள் வீட்டில் அவர்களின் செல்வப் புதல்வி முதல் நாள்தான் ப்ரஸவித்து ஜுரம் கண்டு வீடு தடபுடல் படுகிறது. அவ்விடத்தில் சௌதாமினியே நர்ஸாக இருப்பதை ஊர்மிளா பார்த்துவிட்ட உடனே அவள் இதயத்தில் ஆழ்ந்து கிடந்த பொறாமைத் தீ குபீரென்று கிளம்பிவிட்டது.

எப்போதும் மனிதனுக்கு நல்ல எண்ணங்கள் நவ நவமாக உதிப்பதற்கு வெகு நேரம் யோசனைகள் செய்யவேண்டும், அல்லது ஏதேனும் ஒன்றைப் பார்த்தல் வேண்டும், அல்லது படித்தல் வேண்டும், அல்லது கேட்கவேண்டும் அல்லது தனித்து இயற்கை தேவியுடன் குலாவிக் களித்து அந்த ஆநந்தத்தில் மூழ்கவேண்டும். இம் மாதிரி ஏதேனும் ஒன்று இருப்பின் ஒவ்வொன்றின் மூலம் ஒவ்வொரு புது மலர் நறுமணத்துடன் மலர்வதுபோல் மனிதனது மூளையில் கற்பனைகளும் எண்ணங்களும் தோற்றங்களும் உணர்ச்சிகளும் தோன்றும். இதுவே உலகியல்பும் அனுபவமும் ஆகும்.

ஆனால் தீமை செய்ய நினைப்பதற்கோ அன்றி உடனே தன்னை மிஞ்சிய ஆத்திரத்துடன் செய்துவிடுவதற்கோ அத்தகையோரின் ஆத்திரமும், க்ஷாத்திரமும், ஆவேசமும் எந்த நிமிடம் உதிக்கின்றதோ அந்த நிமிடம் கண்மூடித்தனமாகச் செய்துவிடுவதே அவர்களின் தொழில்போலும். பொறுமைக்கும் நிதானத்திற்கும், யோசனைக்கும் இங்கு இடமே இல்லை. அவ்வாறு செய்துவிட்டதன் பலன் தங்களை வந்து சுற்றும்போது தான் அதைப்பற்றி சிலருக்காவது தெரிகிறது; சிலருக்கு அதுவுமில்லை.

ஏற்கெனவே புகைந்துகொண்டிருந்த ஊர்மிளா அங்கு சௌதாமினியைப் பார்த்த உடனே முகத்தைச் சுளித்தாள். ப்ரஸ

வித்துள்ள பெண்ணின் தாயிடம் தானே வலுவில் பேச்சை யாரம்பித்து "ஏனம்மா! உங்களுக்கு வேறு நர்ஸு அகப்படவில்லையா! இந்த பெண்ணையா அமைத்திருக்கிறீர்கள்? இவளுக்கு அவ்வளவாக கைராசி இல்லை என்றும், சதா ஞாபக மறதி அதிகம் என்றும் அதனால் வேளா வேளைக்குச் சரியானபடி மருந்துகள் கொடுக்கவோ, உபசரிக்கவோ சரியாகச் செய்வதில்லை என்றும் ஒன்றுக்கொன்று மருந்துகளைக் கொடுத்து சில இடத்தில் பெரிய விபரீதமாகிவிட்டதென்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

உடம்போ ரொம்ப ஸீரியஸாக விருக்கிறது. நல்ல கைதேர்ந்த நர்ஸாக வைத்து கவனியுங்கள்." என்று கூறியதைக் கேட்டதும் அந்தம்மாளின் திகிலும், கவலையும் அதிகரித்துவிட்டன. "என்ன செய்வேன் ஊர்மிளா! எனக்கு இப்போது ஒன்றுமே தோன்றவில்லை. பெரிய டாக்டர்தான் இவளை தன்னுடன் கூடவே அழைத்துவந்து அமர்த்தி இருக்கிறார் நாம் எப்படி வேண்டாமென்று சொல்வது? கடவுள் விட்ட வழி யாகட்டுமென்று துணிந்து தான் இருக்கிறேன். எப்படியாவது என் குழந்தை பிழைத்தால் போதும்" என்று விசனித்தபடியே கூறிக்கொண்டு வேறு காரியமாகச் சென்றுவிட்டாள்.

ஊர்மிளாவும் அவள் தாயாரும் ப்ரஸவித்துள்ள பெண்ணைப் பார்க்க அவ் விறைக்குச் சென்றார்கள். ப்ரஸவித்தவள் கண்ணைத் திறக்காமல் படுத்திருந்தாள். ஊர்மிளாவின் தாயார் அவளருகில் சென்று "தங்கம்!... உடம்பு எப்படி இருக்கிறதம்மா!" என்று விசாரித்தாள். ஊர்மிளாவும் பக்கத்தில் நின்றாள்.

அவ் வறையில் தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்த சௌதாமினிக்கு ஊர்மிளாவைப் பார்த்த உடனே திடுக்கிட்டு தூக்கிப் பீபாட்டது. அவள் தன்னுடைய ஊழலை மறைத்து அதை சற்றும் சிந்தியாமல் இத்தனை தைரியமாக வெளியில் வந்துவிட்டதற்கு மிகவும் ஆச்சரியப்பட்டாள். தன்னருமை ஹரிநாத்திற்கு இத்தகைய துர்க்குணியை ஈசன் முடித்து வைத்ததை எண்ணி மனம் கலங்கினாள். ஹரிநாத்தின் இப்பொதிய நிலைமையை இந்த பேதை எங்ஙனமறியக்கூடும்? தன் கடியாரத்திற்குள் வைத்திருக்கும் ஹரிநாத்தின் சிறிய புகைப் படத்தை சதா மணி பார்ப்பது போல பார்த்து பெரு மூச்சு விட்டாளே யன்றி ஊர்மிளாவுடன் பேசவில்லை. குழந்தைக்கு ஸ்நானம் செய்விக்க அதை எடுத்துக்கொண்டு பேஸினருகில் சென்றாள். பூனை எப்போதும் எலியை எந்த பக்கமாகப் பிடிக்கலாம், எப்படி பதுங்கினால் அது ஏமாந்து தன்னிடம் அகப்படும் என்று வளைய வளைய பார்ப்பதுபோல் ஊர்மிளா பார்த்துக்கொண்டே இருந்தாள்.

நோயாளிக்குப் பின்புறத்து மேஜையின்மீது இருந்த மருந்து புட்டிகளை கவனித்தாள். இவளுடைய எண்ணம் முற்றும் அதிலேயே சென்று லயித்ததால் தீய யோசனையும், அதற்கனுகூலமான தைரியமும் காற்றும் நெருப்பும் போல் முன்னே வந்து நின்றன. இதனால் ஓர் பெரும் பாதகம் செய்ததாக நேரிடுமே என்ற எண்ணமே மறைந்து அவளே ம்ருத்யு தேவதையாக மாறினாள். அங்கு லைஸால் என்ற மருந்து புட்டியில் இருந்தது. உள்ளுக்குக் கொடுக்கும் மருந்து புட்டியை மெல்ல கவனித்தாள். ஒரு டோஸ்தான் இருந்தது கண்டு அதை எடுத்து திருட்டுத்தனமாக ஒரு மூலையில் கொட்டிவிட்டு லைஸாலில் அந்த ஒரு டோஸ் அளவுக்குச் சரியாகக் கொட்டி மூடிவிட்டாள்.

இத்தகைய மகா கொடிய காரியத்தைச் சற்றும் கைகூசாமலும், மனம் பதைக்காமலும் வெகு சந்தோஷத்துடன் தாம் ஏதோ செய்யவேண்டிய கடமையைச் செய்து திருப்தியடையும் மனிதர்களைப்போல் செய்து, த்ருப்தியுடன் அவ்விடம் விட்டு மெல்ல நகர்ந்தாள். அவள் மனத்தில் பெரிய பாரம் குறைந்தது போன்ற ஒரு அல்ப உணர்ச்சியையும் அடைந்தாள்.

183009

ஒரு பாபமும் அறியாத சௌதாமினி குழந்தைக்கு வேண்டிய காரியத்தைச் செய்துவிட்டு அதை தொட்டிலில் படுக்கவைத்து பின்னர் நோயாளியின் அருகில் உட்கார்ந்தாள். ஊர்மிளாவின் தாயார் சௌதாமினியை அப்போதே கவனித்தாளாகையால் அவளை நோக்கி "ஓகோ! நீதானா இருக்கிறாய்? பின்புறம் பார்க்கையில் யாரோ என்று இருந்தேன். சௌக்யந்தானா?" என்றாள்.

சௌதாமினியும் மிகவும் வணக்கத்துடன் 'சௌக்யம்' என்று தலையாட்டினாள். தான் ஒன்றுமே பேசாதிருந்தால் என்ன நினைப்பார்களோ என்று சௌதாமினிக்குத் தோன்றியதால் அந்தம்மாளை நோக்கி "இவர்கள் உங்களுக்குச் சொந்தமா?"...என்றாள்.

அதற்கு ஊர்மிளா "ஆமாம்....எங்க எஜமானருக்கு மிகவும் வேண்டியவர்கள்." என்று தானே வலுவில் பதில் கூறினாள். அதற்கு மேல் பேசுவதற்கு மனம் அடைத்துவிட்டது. அவள் முகத்தைப் பார்க்கவும் சகிக்காமையால் வெளியில் வந்துவிட்டாள். குற்றமறியாத குணமாணிக்கமாகிய சௌதாமினிக்கு இங்கு அந்த பைசாசம் செய்து வைத்துச் சென்ற சதிகார வேலையின் மர்மம் தெரியுமா! மருந்து கொடுக்க மணியைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருக்கிறாள்.

தாயும் மகளும் ப்ரயாணம் சொல்லிக்கொண்டு சந்தடி இன்றி போய்விட்டார்கள். 'பின்னால் விளையப்போகும் நன்மையோ

தீமையோ அது முன்னால் யாருக்குத்தான் தெரியும்' என்பது பழமொழி. ஆனால் தீமையை வேண்டுமென்றே அறிந்து செய்துள்ள நபர்களின் மனத்திற்கு அதனால் விளையும் விபரீதமும் தெரியாமலிருக்க முடியுமா ஊர்மிளாவின் மனம் எப்படி இருந்ததோ? எதை எதிர்பார்த்ததோ! யாருக்குத் தெரியும். இந்த பேராபத்திலிருந்து கடவுள் அந்த பரதேசிப் பெண்ணைக் காப்பாரோ, கைவிடுவாரோ! யார் அறிய முடியும்?

பெரிய டாக்டர் வந்துவிட்டார். நோயாளியையும் குழந்தையையும் வெகு நன்றாக கவனித்துக்கொண்டிருப்பதையும் அவ்வறையை முரமுரப்பாயும் சுத்தமாயும் வைத்திருப்பதையும் கண்டு டாக்டர் சந்தோஷத்துடன் "பேஷ் சௌதாமினீ! நீட் அண்டு க்ளீன். (Neat and Clean) இவை இரண்டுந்தான் அத்யாவசியம். அதை வெகு நன்றாகத் தெரிந்து செய்திருப்பதுபற்றி சந்தோஷம். எங்கே ஜுரம் குறித்து எழுதிய காகிதம்?" (chart) என்றார்.

சௌதாமினி உடனே அதை எடுத்துக் கொடுத்தாள். மறுபடியும் ஜுரம் எவ்வளவென்று பார்த்துவிட்டு "சௌதாமினீ! மருந்து இன்னும் எத்தனை டோஸ் இருக்கிறது?" என்றார். சௌதாமினி மிக்க வணக்கத்துடன் மிக்சர் ஒரு டோசும், பவுடர் ஒரு டோசும் இருக்கிறது. மாத்திரை மட்டும் மூன்று இருக்கிறது" என்றாள்.

உடனே பெரிய டாக்டர் "எங்கே மருந்தை எடு. இந்த டோஸை இப்போது கொடுத்துவிடு. வேறு மருந்து இதோ எழுதி இருக்கிறேன்; அதை வாங்கி வந்து, இரவு தூங்கினால் எழுப்பாதே; விழித்திருந்தால் இரண்டு மணிக் கொருதரம் கொடு" என்று கூறிய படியே ஒரு டோஸ் இருந்த பாட்டிலைத் தானே கையில் எடுத்து குலுக்கினார்.

அவருக்கு அதைப் பார்த்ததும் ஏதோ ஒரு விதமான சந்தேகம் உண்டாகி விட்டதால் கார்க்கை எடுத்து விட்டு மருந்தை முகர்ந்து பார்த்தார். அவர் கண்கள் சிவந்து விரிந்தன. பல்லைக் கடித்துக் கொண்டே "சௌதாமினீ! இது மருந்துதானா பாரு." என்றார். சௌதாமினிக்கு ஒரு பாபமும் தெரியாதாகையினால் தேகம் நடுங்க வாரம்பித்தது. மார்பு பட பட வென்று அடிக்கின்றது. கை நடுங்கிய படியே மருந்து புட்டியை வாங்கி முகர்ந்து பார்த்ததும், குலை நடுக்க மெடுத்துக் கொண்டது.

"ஹா........இது மருந்தல்ல..........இது லைஸால் வாசனை வருகிறதே"...என்று குழறியவாறு கூறினாள். பெரிய டாக்டருக்கு கோபம் கரை கடந்து வந்து விட்டது. பல்லைக் கடித்துக் கொண்டே

"என்ன சொன்னுய்! லைசால் போல விருக்கிறதா, இதில் லைசால் எப்படி வந்தது? அதுவும் கணக்காக ஒரு டோஸ் எப்படி இதில் வந்தது?......... ஐயயோ! எனக்கு பெரிய சந்தேகமாகிவிட்டதே. இதற்கு முன்பு கூட லைசால் தான் மருந்தாகக் கொடுத்து விட்டாயா! என்ன திருகத் திருக விழிக்கிருய்?....இதில் எப்படி இந்த மருந்து வந்தது? சொல்லு." என்று தாண்டவமாடுகிருர்.

சௌதாமினிக்கு இந்த தொழில் மீது எற்கெனவே இருந்த வெறுப்பும் கசப்பும் பின்னும் அதிகரித்தது. சித்திரவதை செய்கிறது. "டாக்டர்!......நாலு வேளை மருந்து தாங்களனுப்பியதில் மூன்று வேளை தவருமல் கொடுத்தேன் இந்தம்மாளையே கேளுங்கள். கடவுள்மீது ஆணையாக எப்படி இந்த புட்டியில் லைசால் வந்ததென்றே எனக்குத் தெரியாது இது ஏதோ பெருஞ்சூது நடந்திருக்கிறதென்றே நினைக்கிறேன். டாக்டர்! எனக் கொன்றுமே தெரியாது" என்று கூறும்போது கண்ணில் ஜலம் மட மடவென்று வந்து விட்டது.

டாக்டரின் ஆத்திரத்தில் அவர் தன்னிரை யழிந்தார்...... "என் பெயரைக் கெடுக்கவா சதிகாரி உன்னை யழைத்து வந்தேன்... உனக்குத் தெரியாமல் எப்படி இந்த உள்ளே பாட்டிலிலுள்ள மருந்தைக் கொட்டவும் வேறு ஒன்று அதில் ஊற்றி வைக்கவும் முடியும்? நீ வேண்டு மென்று நோயாளியின் பாதையை அதிகரித்து வயிறு வாயெல்லாம் வெந்து விட்டால் பின்னும் சில மாதங்கள் உனக்கு இங்கு வேலை கிடைக்கு மென்று இக்காரியம் செய்தாயா? அன்றி நோயாளியை ஒழித்து விட்டு அவள் மீதுள்ள நகைகளைத் திருடிக் கொண்டுபோய் விடலாமென்று இம்மாதிரி செய்தாயா! அல்லது என் பெயரைக் கெடுத்து என் பிழைப்பில் மண்ணைப் போடுவதற்கு இம்மாதிரி செய்தாயா!.......

சீச்சீ.......துஷ்டே!...உன் அஜாக்ரதையும், ஆஸ்பத்திரியில் உன்னை டிஸ்மிஸ் செய்தது சரி என்பதும் இப்போது தான் தெரிகிறது. நீ எதற்காக இங்கு இருக்கிருய்......வேறு யார் தைரியமாக மருந்தை மாற்றி வைக்க முடியும். அப்போது நீ எங்கே தூங்கினுய்? நீ செய்யாததாகவே இருக்கட்டும். இந்த மருந்தை பார்க்காமல் கொடுத்திருந்தால் என்ன கதி நேர்ந்திருக்கும்?

நீ இனிமேல் இந்த வேலைக்கு ஒரு சிறிதும் லாயக்கற்றவள். இனி உன்னை நர்ஸாக வைத்தால் அவர்கள் சீக்கிரம் எமலோகம் சேரவேண்டியதுதான்... ......உடம்பில் ஜாக்ரதை இல்லை. தொழிலில் அக்கரை இல்லை.......ஊம்......இங்கு நிற்காதே......(get out)......என்று கூச்சலிடுவதைக் கேட்டு எல்லோரும் ப்ரமித்தார்

கள். பெண்ணின் தாயார் இதை யறிந்து லபோ திபோவென்று அடித்துக்கொண்டு வந்து "ஐயோ! சற்று முன்பு என் மனிதர்கள் சொல்லியது உண்மையாகிவிட்டதே. இந்த மூதேவியையா நர்ஸாக வைத்தீர்கள் என்று கேட்டது நிஜமாகிவிட்டதே! அடீ பாவி! என் குழந்தையைக்கொலை செய்வதற்காகவா நீ வந்து சேர்ந்தாய்?'' என்று பெருத்த இரைச்சலுடன் அழவாரம்பித்துவிட்டாள்.

அந்தோ! ஒரு குற்றமோ, சூழ்ச்சியோ ஒன்றுமறியாத சௌதாமினியின் மனம் எப்படித்தானிருக்கும்? அவளுடைய உயிர் இருக்கிறதா இல்லையா! வென்ற சந்தேகமே தோன்றும்படி சவம்போலாகிவிட்டாள்...அகதிக்கு தெய்வமே துணை என்பார்களே! அந்த தெய்வமாவது துணை செய்யுமோ, தூங்கிவழியுமோ! யாரறிவார்கள்?

---

## 16-வது அதிகாரம்

### துறவியின் அன்பும், தூய்மைத் தோண்டும்.

சன்யாசினியின் தலையிலடிபட்ட வேதனையிலும் அந்த உத்தமி "கிருஷ்ணா! கிருஷ்ணா! என்ற நாமத்தைத் தவிர வேறு ஏதும் வாய்த்துடுக்காகச் சொல்லவே இல்லை. தலையிலிருந்து வழியும் ரத்தத்தை அப்படியே துடைத்துக்கொண்டாள். அங்குள்ள அத்தனை கைதிகளுக்கும் இவளுக்கு நேர்ந்த இந்த விபத்தைக் கண்டு சகிக்க முடியவில்லை. "யம்மா! சாமியாரம்மா, ஒங்களுக்கா இப்படி வரணும்? அந்த பாவி முண்டெயெ கொண்ணுபுட்டாத்தான் என்ன தப்பு?''... என்று ஆத்திரத்துடன் பேசவாரம்பித்தார்கள்.

சன்யாசினி மிக்க சாந்தத்துடன் பேசத்தொடங்கி "அன்பர்களே! ஆத்திரப்படாதீர்கள். எல்லாம் நல்லதற்குத்தான் என்ற பழமொழியை நான் நம்புகிறவளாகையால் இதுவும் மெத்த நன்மைக்கே யமைந்த சம்பவமாகும். உங்களுடைய கண்மூடித்தனமான ஆத்திரத்திலல்லவா நீங்களும் வெறுக்கத்தக்க பாப காரியங்களைச் செய்துவிட்டு கடவுளால் கொடுக்கப்பட்ட சுக போகங்களையும்,

சுதந்திரத்தையும், மக்கள் மனிதர்களையும் பிரிந்து இந்த சிறைச் சாலையில் காரியுமிழ்ந்து கண்டோர் சிரிக்கும்படி கூழுங் களியும் உண்டு காலத்தைத் தள்ளுகிறீர்கள்.

இந்த சமயம் அன்று உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் யாரை என்ன சித்திரவதை செய்தீர்களோ, ஹிம்சித்தீர்களோ! அவர்களின் ஆத்மா எவ்விதம் துடித்திருக்கும், எவ்விதம் தத்தளித்துப் பிரிந்திருக்கும் என்பது விளங்கும். உங்களுக்கு அதை விளக்குவதற்காகத்தான் கடவுள் இன்று இச் சம்பவத்தைக் காட்டினுர் என்று நினைக்கிறேன். இது உங்களுக்கு ஒரு உணர்ச்சியுடன் மனத்தில் பதிந்திருக்குமென்று நம்புகிறேன்''.

என்று தன் வலியின் பாதையையும் சகித்துக்கொண்டு கூறிய உபதேச மொழிகளால் அங்குள்ள கைதிகளில் அனேகரின் மனம் தத்தளித்துக் குழம்பி ப்ரமை பிடித்ததுபோலாகிவிட்டது அவர்களின் வாழ்நாளில் நடந்த கொடிய சம்பவங்கள் முற்றும் கண்முன்பு தெரிவதுபோலான பெருங் குழப்பமும் பயங்கரமும் தோன்றியது. சன்யாசினியின் பொறுமையான உரையின் மகிமையை நன்குணர்ந்து கடவுளை மனமாற வழிபடத் தொடங்கினுர்கள்.

அந்த துஷ்டக் கைதியைத் தேடிக்கொண்டு வீதியில் சில வார்டர்கள் ஓடினுர்கள். க்ஷண நேரத்திற்குள் மாயமாய் மறைந்துவிட நினைத்த கைதியைத் தேடிப் பிடித்து முன்னிலும் அதிகரித்த தண்டனையுடன் தனிக் கொட்டடியில் போட்டுவிட்டார்கள்.

சன்யாசினியை ஆஸ்பத்திரிக்கு அழைத்தார்கள். அந்தம்மாள் அதற்கு இசையாததால் தத்கால சாந்தியாக, தலைக்கு மருந்துகள் போட்டு கட்டி வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். சன்யாசினியின் வரவை வெகு ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்த அவளது சிஷ்யைகளும், மற்றயோரும் அவளுக்கு நேர்ந்த கதியை எண்ணி மனங்கலங்கி அங்கலாய்த்தார்கள் சன்யாசினி அதையோர் பொருட்படுத்தாமல் அதுவும் தனது பொறுமையை சோதிப்பதற்காக நேர்ந்த சம்பவம் என்றும், தனது வைராக்யம் அதிகப்படுவதற்காக கடவுளே பாடங் கற்பித்ததாகவும் எண்ணினுளேயன்றி சிறிதும் ஆயாசப்படவில்லை. இந்த பொறுமையான குணம் எல்லோரையும் பரவசமுறச் செய்தது.

தன் கடமையிலிருந்து சற்றும் வழுவாமல் சன்யாசினி தலையின் கட்டுடன் வழக்கம்போல் ஜெயிலுக்குச் சென்று கதை சொல்வதையும், பாட்டு சொல்வதையும் நடத்திவந்தாள். சன்யாசினி அங்கு

வர வாரம்பித்த பிறகு அனேக கைதிகள் தங்கள் விடுதலை காலம் வந்துவிட்டதால் விடுதலையாகிச் சென்றார்கள் ஆனால் சன்யாசினி ஆச்சரியப்படும் முறையில் விடுதலையாகிச்சென்ற ஒரு மாதத்திற் குள் மீண்டும் திருடிவிட்டு அதே ஜெயிலுக்கு வந்துவிட்டார்கள்.

இதைக் கண்டு சன்யாசினிக்குத் தாங்காத வியப்பும் பரிதாப மும் உண்டாகிவிட்டது. திரும்பி வந்துள்ள கைதிகளை நோக்கி "அடி பாவிகளே! நீங்கள் இம் மாதிரி எத்தனை தரம் விடுதலையாகி எத்தனை தரம் வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

கைதி:—சாமியாரம்மா! எங்க நாலு பேருக்கும் இது நாலா வது தடவெங்க. இந்த தரம் 7 வருசம் போட்டுட்டாங்கம்மா! ஏயு வருசத்துக்கு பயமில்லீங்க.

சன்யா:—என்ன! என்ன! ஏழு வருஷத்திற்கு பயமில்லையா! அப்படி என்றால் நீங்கள் வெளிவாஸத்தைவிடச் சிறைவாசத்தையே மிகவும் இஷ்டமாக நினைக்கிறீர்களா!

கைதி:—பின்னெ என்ன பண்ரதுங்க. ஊட்லே ஒண்ணுஞ் சரியா இல்லெ. புருசன் குடுச்சி குடிச்சி சாவரானே கண்ட ஒரு காலணா குடுக்கறதில்லே... பசங்களெ எப்படி வளக்கரது எப்படி துண்ரது. கயிஷ்ட காலத்தாலே மொதல்லே திருடினேன். அதுலெ அம்புட்டுகாமெ செயிச்சுபுட்டேன். அதனாலெ திரியும் திருடி னேன். அப்பொ புடிச்சி ஒரு வருசம் தண்டிச்சுபுட்டாங்க. ஒரு வருசம் கயிச்சு போனா ஊட்டுக்குள்ளற வரக்கூடாதுண்ணு கட்டு போட்டுட்டாங்க. மக்க மனுசாளுங்கல்லாம் ஒன்னு சேந்துகிணு என்னெ கட்டுபோட்டு தெருத்திபுட்டாங்க. பொம்பளெ சின்ன வயசுகாரி நானு என்ன பண்ரதுங்க சாமியாரம்மா! நீங்களே சொல் லுங்க.

என்னமோ அப்போ போராத வேளையாலெ செஞ்சுபுட்டேன் அது தப்புதானுங்க; என்னெ இப்பிடி தள்ளிப்புட்டாக்கா நானு எப்பிடி பொயக்கிறது. திருடறுத்துக்கு மனசு துணிஞ்சுபூட்டுது. ஆனா வேறே கெட்ட காரியத்துக்கு மனசு துணியல்லெங்க. அயுது அயுது கெஞ்சினேன். ஊட்டு பேக்கடலெயெ கிரேன். ரவெ கஞ்சிவாருங்கண்ணு கேட்டேன் நான் அவங்க கண்ணுலெ பட்றதே அவமானமுண்ணு எப்படியாச்சும் பூடுண்ணு தெரித்தீட்டாங்க.

தலைவிதியேண்ணு பூட்டேன். சோதாக்களும் போக்கிரிங்க ளும் சும்மா இருக்கராங்களா? அந்த பாடெலெ வெப்பாங்களுக்கு பயந்துகிணு படாத பாடெல்லாம் பட்டேன். இப்படி பயந்து பயந்து ஒரு நாள் போரது ஒரு யுகமா இருக்கரத்தெ வுட திரும்பி

யும் செயிலுக்கே பூடலாம்னு தோணிபுட்ச்சி. என்னோடு விடுதலை யாயி வந்த ஒருத்தி அப்படிதான் செய்யறேன்னா. சரின்னுபுட்டு திருடிபுட்டு வந்துட்டம். இங்கே ரெண்டு வருசமாச்சு. திருப்பி யும் போயி வந்தோம். இப்படியே என் காலம் கழிதுங்க.

இந்த கட்டைக்கி சாவு கூட வரமாட்டேன்னுதுங்க. சிவ னென்னு கெடக்கரத்துக்கு இது தானுங்க தேவலே. ஆத்தா ஊடு போல இது எங்களுக்கு ஆயிபூட்டுதுங்க. அதனாலே திரியும் திரியும் இங்கே வராமெ என்ன பண்ரதுங்க'' என்று ஒவ்வொருவரும் தனித் தனியே தங்கள் குறைகளை எடுத்துக் கூறினார்கள்.

இதைக்கேட்ட சன்யாசினியின் மனம் உண்மையில் வருந்தி உருகியது. இத்தகைய அனாதைகளுக்குப் பிழைக்க வழியும் இல்லை; வேறு புகலிடமும் இல்லை. இம்மாதிரி தள்ளப்பட்டு விடுவதால் தான் அனேக திருட்டுகளும் கொலைகளும் தற்கொலைகளும் ஏராள மாகப் பெருகி விடுகின்றன. இவர்களுக்குத் தனித்த ஏற்பாடு ஏதா வது செய்து காப்பாற்றும் வழி ஏற்பட்டுவிட்டால் இத்தனை தவிப் பும் கஷ்டமும் இராது'' என்று எண்ணினாள்.

அப்போது அருகிலிருந்த வார்டர் "அம்மா! சாமியாரம்மா! இவங்க சொல்றதும் உண்மைதானுங்க. ஆனா இப்பிடிப்பட்டவங் களெ காப்பாத்தறத்துக்கு தனியா பணம் சேத்தும், பெரிய மனு சாளெ புடிச்சும் எத்தனையோ ஏற்பாடு செய்திருக்கிறாங்க. ஆனா அது சரியா நடக்கில்லேங்க. அந்த எடத்துலேந்து சகாயத்துக் குண்ணு பணத்தை வாங்கிகிணு ஓடி பூட்ராங்க. எத்தினியோ அக்குறும்புங்கல்லா நடக்குதுங்க'' என்றாள்.

அன்று முதல் சன்யாசினியின் மனத்தில் எந்த வகையில் இதற்கு உதவி செய்யலாம் என்று எதிர் பார்த்து அதே நினைவாக விருந்தாள்.'' இம்மாதிரி யோர் நல்ல காரியத்தைச் செய்வதற்கு இருப்பிடத்திலேயே உட்கார்ந்திருந்தால் காரியம் ஆகாது. நல்ல காரியத்தைச் செய்வதற்கு எந்த உயர்ந்த ஒழுங்கான முறையையும் அனுஷ்டித்துப் பொருள் தேடுவது ஈனமே யல்ல. அதிலும் நாமோ முற்றுந்துறந்த துறவியாகிவிட்டது. ஆதலால் எப்படி யாசித்தால் தான் குற்றம். இனிமேல் தினந்தோறும் காலையாவது மாலையாவது நம் பஜனை கோஷ்டியுடன் வீதி வீதியாய். ஊர் ஊராக பஜனை செய்து கொண்டே சுற்றிப் பொருள் சேர்த்து இந்த பெரிய ஸாதனத்தைச் செய்து முடிக்கவேண்டும்'' என்ற தீவிரமான எண்ணம் உதித்துவிட் டதால் சன்யாசினி மறு தினமே தன் கோஷ்டிகளுக்கு இதைத் தெரிவித்துவிட்டதோடு அன்று முதல் விடுதலையாகும் கைதிகளைத் தன்னுடனேயே அழைத்து வந்து நல்ல உபதேசங்களைச் செய்து

அவர்களை பரிசுத்தமாக ஆடையணிவித்து விபூதியும் குங்குமமும் கொடுத்து அவர்களைத் தூய்மையாக்கிப் பின்னர் அவர்களையும் உடனழைத்துக்கொண்டு பஜனையுடன் கிளம்பிவிட்டாள்.

சன்யாசினியின் இந்த புதிய வழியைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். சன்யாசினி அந்த கைதிகளைப் பிறர் எளிதில் கண்டுகொள்ளும் பொருட்டு பச்சை கலர் ஆடையே கொடுத்துவிட்டாள். ஆதலால் வீதியில் இந்த தனி கோஷ்டியைக் கண்ட உடன் ஒருவருக்கும் அர்த்தம் விளங்காமல் வியப்புடன் பார்த்தார்கள். சன்யாசினியோ பக்திரஸம் நிறைந்த ஒரு பாடலைப் பாடியதும் அதை எல்லோரும் பின்பற்றிச் சொல்லிய பிறகு அப்பாடல் முடிந்ததும்,

"மகா ஜனங்களே! இதோ பச்சை உடையுடன் உங்கள் முன்பு நிற்கும் பெண்கள் மகா நிர்ப்பாக்யசாலிகள். நம்மைப் படைத்த கடவுள்தான் அவர்களையும் படைத்தார். அவரவர்களின் பலாபலனுக் கேற்ப அறிவையும் அளித்தார் ஆனால் அதைச் சரியாக பயன்படுத்தும் பொறுப்பை அந்த மக்களிடமே கொடுத்துவிட்டார். இந்த பெண்களின் போதாக் காலக் கொடுமையினால் கெடுமதி கொண்டும், கர்மவினையினால் படாப்பழி ஏற்றும் வருடக்கணக்காக சிறைவாசம் செய்து அங்கு பட்ட அனுபவங்களால் நல்ல புத்தி யுண்டாகப்பெற்று தண்டனை காலம் முடிந்து விடுதலையடைந்திருக்கிறார்கள்.

இழிவான குற்றத்தால் சிறைவாசம் செய்தோர்களை சமூகமும் தண்டித்து கட்டு செய்து விலக்குவதாலும், திருடி, கொலைகாரி இவளைக் கிட்டவே சேர்க்கக்கூடாதென்று வேலைக்கு வைத்துக் கொள்ளவும் பொது ஜனங்கள் விரும்பாது வெறுப்பதாலும் இவர்களுக்குப் பிழைக்க பிழைப்புமின்றி, அறிவு திருந்தி நன்மார்க்கமடைய ஏதுவின்றி மீண்டும் மீண்டும் தீத் தொழிலையே புரிந்து நாசமாவதை நான் கண்ணுறக் கண்டதும் என்னால் சகிக்க முடியவில்லை.

இத்தகையோர்களைக் காண்பதற்கும் கூசும் என்பது உண்மை எனினும், இவர்களுக்கு பிழைக்க ஓர் மார்க்கத்தைத் தேடிக் கொடுத்து கூடியவரையில் ஆதரித்தால் அந்த பலனைக் கடவுள் நமக்குக் கொடுப்பார். பற்றி எரியும் வீட்டை அணைப்பதும், நோயுடன் அவதிப்படுவோர்களுக்கு சிகிச்சை செய்வதும், பசியோடு தவிப்போருக்கு கஞ்சி வார்ப்பதும், பாபத்தைச் செய்பவர்களைத் தடுப்பதும் நம்முடைய பெருமை நிறைந்த இந்து மதத்தில் பெரிய தர்மமாயும், அபார நன்மையும் பலனும் பயக்குமென்றும் பெரியோர் கூறியிருக்கிறார்கள்.

நாம் அத்தகைய உயரிய தத்துவத்தை மேற்கொண்டு இந்த பேதைகளுக்கு ப்ரத்யேகமாக சம்ரக்ஷண நிலையம் ஒன்று நிறுவி அதில் இவர்களுக்குத் தகுந்த தொழிலைக் கொடுத்து அத் தொழி லின் மூலம் அவர்களைக் காப்பாற்றலாம் என்ற தீவிர உணர்ச்சியை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா என்னிதயத்தில் உண்டாக்கினர். இந்த மகத்தான காரியத்தை கேவலம் ஆண்டிச்சியாகிய என்னல் ஒரு போதும் நிறைவேற்ற முடியாது. மகா ஜனங்களாகிய நீங்கள்தான் பரிபூரண மனத்துடன் உதவி செய்யவேண்டும். அதற்காகவே நான் பிச்சை எடுக்கக் கிளம்பிவிட்டேன். உங்கள் மனப்பூர்வமான அன்புடன் கொடுப்பதைக் கொடுங்கள்.'' என்று உருக்கமான ஓர் ப்ரஸங்கம் செய்தாள்.

இதைக் கேட்ட ஜனங்கள் அந்த கைதிகளைக் கண்டு ஆச்சரியப் படுவோரும், வெறுப்போரும், ஐயோ பாவமென்போரும், சன்யா சினியின் பரந்த நோக்கத்தைக் கண்டு சந்தோஷ மடைவோரும் அதையே ஏளனமாக எண்ணி 'ஆமாம்; இத்தனை பெரிய காரியத்தை இவள் சாதித்துப் புரட்டிவிடப்போகிருள். என்னமோ ஜம்பம். வேஷம்...ஊரை மயக்க இது ஒரு வழி என்று கூறுவோரும் செவ் வனே தம்தம் கடமைகளைச் சரிவரச் செய்தார்கள்.

கையில் கிடைத்ததை சிலர் போட்டார்கள். கூட்டத்தி லிருந்த ஒரு வாயாடி குறும்புத்தனமாக சன்யாசினியை நோக்கி "அம்மா! நீங்கள் செய்ய நினைத்திருக்கும் காரியம் என்னமோ நல் லதுதான்; ஆனல் அது சாத்யமா வென்றுதான் யோசனை. கையும் மெய்யும் துணிந்து கொலையுங் களவும் செய்துவிட்டு சிறை வாஸத்தை நிறைமனத்துடன் அனுபவித்துவிட்டு வந்திருக்கும் இவர்கள் என்ன தொழில் செய்வார்கள்? என்ன தொழில் கொடுப்ப தாக உத்தேசம்? இவர்கள் ஏற்கெனவே செய்து கைதேர்ந்த தொழி லைத்தான் செய்வார்கள். பொது ஜனங்களின் பணத்தை வீணுக்கு வதற்கு இது ஓர் வழியா?'' என்று தாக்ஷிண்யமின்றி கேட்டான்.

இதைக் கேட்ட சன்யாசினி மிகுந்த வணக்கத்துடனும், சாந்த மாயும் பேசத் தொடங்கி "ஐயா! மனிதர்கள் எல்லோரும் அந்த ஜகத்ரக்ஷகன் கிழேதான் குடி. மக்கள் செய்ய நினைக்கும் எந்த காரியத்தையும் அதன் ஜெயத்தை எதிர்பார்த்துத்தான் செய்யத் தொடங்குவார்கள். மக்களின் இதயத்தில் இத்தகைய தீவிர உணர்ச் சியை உண்டாக்குபவனும் அவனே! அதை நிறைவேறச் செய்பவனும் அவனே. நம் விதி சரியில்லையெனின் கெட்டுப்போகிறது. இதனல் மக்கள் வேண்டுமென்று எதுவும் செய்வதாக நினைக்கக்கூடாது.

ஐயா! ஒரு தரம் தவறிவிட்டதனலேயே அவர்களை ஆயுள் பரி யந்தம் தவறிவிடுவார்கள் என்றே நினைத்துவிடுவதுதான் தவறு.

வியாதிக்காரர்களை ஸ்வஸ்தப்படுத்த முயற்சி செய்யலாம். அவர்கள் மருந்து குடிக்க மறுத்தால் அவர்களின் விதி யது என்று கைவிட்டு விடுவதுபோல் இதிலும் முயற்சி செய்து பார்க்கவே உத்தேசம். அவர்களுக்கு என்ன தொழில் கொடுக்க முடியாது? மக்களுக்கு மானம் ப்ரதானம்; பிறகு தான் ப்ராணன். அத்தகைய மானத்தைக் காக்கும் உடைகளை பண்டைய காலத்து பழக்கத்தைபோல் நாம் ஏன் செய்துகொள்ளக்கூடாது?

அதைத்தானே தற்போது பல்லாண்டுகளாக மகாத்மா காந்தியடிகள் உபதேசம் செய்துவருகிறுர். நம் பாரத நாடே அதை விரும்புகிறது. இந்த கைதிகளுக்கு பஞ்சு பதம் செய்யவும், நூல் நூற்கவும், அதை நெய்யவும், சாயம் ஏற்றவும், அச்சடிக்கவும் இது சம்பந்தமான பல வேலைகளையும் கற்றுக்கொடுத்தால் செய்யமாட்டார்களா?

பாய் முடைவது, கூடை முறம் தட்டுகள் முதலியன முடைவது இவைகளைக் கற்றுக்கொடுத்தால் செய்யமாட்டார்களா? நாகரிகத்திற்கு வேண்டியபடி பூவேலைகளைச் செய்யக் கற்றுக்கொடுத்தால் செய்யமாட்டார்களா! படம் போடுவது, பைகள் பின்னுவது, கதவுகளுக்கும், மேஜைகளுக்கும் போடும் திரைச்சீலைகளும், சவுக்கங்களும் போடக் கற்றுக்கொடுத்தால் போடமாட்டார்களா. வாசல்படிகளுக்கும் விளக்குகளுக்கும் தொட்டில்களுக்கும் மணிக்கோர்வைகள் கோர்க்கக் கற்றுக்கொடுத்தால் போடமாட்டார்களா! காய்கறித் தோட்டம், நந்தவனம் முதலியவற்றில் வேலை செய்யமாட்டார்களா?

களிமண்ணால் கும்மட்டிகள், அடுப்புகள் முதலியன போடமாட்டார்களா? தையல் மிஷனில் வேண்டிய துணிமணிகளைத் தைக்கமாட்டார்களா! (Ply wood) மரத்தினுல் அழகான சாமான்கள் செய்யமாட்டார்களா? இலை தைக்கமாட்டார்களா! எதைத்தான் செய்ய முடியாது? அதற்கு வேண்டிய சவுகரியமும் வசதியும் கொடுத்து பொறுப்புடன் இவ் வேலைகளை வாங்கினுல் அவைகளை வெளியில் மார்க்கெட்டில் விற்கும் விலைகளைவிட மலுவாக விற்ருல் சீமான்களும் சீமாட்டிகளும் சாதாரண மனிதர்களும் தமக்குத் தேவையான சாமான்களை போட்டி போட்டுக்கொண்டு வாங்குவார்களல்லவா! அந்த ஆதாயத்தைக்கொண்டே அவர்களுக்கு நிம்மதியான வாழ்க்கையைக் கொடுக்கலாமே....

ஐயா! இன்னும் கேட்டால் நெல்லையும், கோதுமையையும் மெஷினில் குத்தியும், அரைத்தும் சத்து இல்லாமல் அசத்தாக உண்டு உடல் நலமின்றி கஷ்டப்படுவதைவிட நெல்லு முதலிய சகல தானியங்களையும் கையால் குத்துவதும் அரைப்பதும் செய்து கொடுத்தால் எத்தனை ப்ரயோஜனம் உண்டாகும்? கடவுளை நம்பி

எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் ஜெயமுண்டாகும், என் மனத்தில் இத்தகைய எண்ணத்தைப் புகுத்திய ஸ்ரீ பரந்தாமன் அதை நிறைவேற்றாமலா போய்விடுவார்?' என்று சலிக்காமல் கூறினாள்.

சன்யாசினியின் திட்டங்கள் அறிவு படைத்த அனைவர்களின் நெஞ்சிலும் மிகவும் மேன்மையாகப் பதிந்தன. அவ்வாறு செய்வதில் மெத்த நன்மையுண்டு என்று ஆமோதித்து பெரிய மனிதர்கள் எல்லாம் பெருந் தொகைகள் கொடுப்பதாக கையெழுத்துடன் வாக்குக் கொடுத்தார்கள். சன்யாசினி இம்மாதிரியான ப்ரசங்கமும் பஜனையும் செய்து தன் திட்டங்களை பொது ஜனங்களுக்கு விளக்கிக் கூறுவதுமாக பஜனையுடன் தெருத்தெருவாய் அலைகிறாள். தங்கள் பொருட்டாக இத்தனை ச்ரத்தை எடுத்துக்கொண்டு பாடுபடும் சன்யாசினியின் மீது இந்த கைதிகளுக்கு பெரும் மதிப்பும் நம்பிக்கையும் அளவு கடந்த ப்ரீதியும் உண்டாகியது

ஆனந்தமான பாடல்களின் இனிமையும் பெண்களின் கூட்டமும் வைராக்யக் கொழுந்தென விளங்கும் சன்யாசினியின் தோற்றமும் மக்களைப் பரவசமுறச் செய்ததால் பலரும் கூடக்கலந்து கொண்டார்கள். இந்த பஜனை கோஷ்டி ஊர்மிளாவின் வீட்டு வழியே வந்தது. அப்போதுதான் நாம் முன்பு தெரிவித்தபடி கொடுமையிலும் கொடிய காரியத்தைச் செய்துவிட்டு சற்றும் கூசாமல்தான் ஏதோ பழிக்கு பழி வாங்கிவிட்ட த்ருப்தியோடு ஊர்மிளா மமதையுடன் வீட்டுக்கு வந்தாள்.

உள்ளே மனக் கலக்கத்துடன் ஊர்மிளாவின் பிதாவாகிய சடகோபன் என்பவர் தன் சாமான்களை ஒழித்துக்கொண்டிருக்கையில் கர்ணாம்ருதமான கானம் கேட்டதும் அப்படியே அதில் பரவசப்பட்டு மெத்தையின் வராண்டாவில் வந்து நின்றார். அப்போது சன்யாசினி கீழ் வரும் அர்த்தமுள்ள பாட்டைப் பாட மற்ற கோஷ்டியர் பின்பாட்டு பாடிக்கொண்டே வீதியில் நின்றார்கள்.

அப் பாடலின் அர்த்தமும், ப்ரஸங்கத்தின் ஸாரமும் அவர் மனத்தை யுருக்கிவிட்டது "அஞ்சாது பாபத்தைச் செய்பவர்களே பெரிய மனிதர்கள் மதிப்புக்கு ஆளாகி ப்ரகாசிக்கிறார்கள். அந்த பெரிய மனிதர்களுக்கு வேண்டுமானால் உன் ஊழலை அறிய சக்தி இல்லாததால் அதை மறைக்கலாம். சிலர் அறிந்திருப்பினும் உனது பணத்திற்கும் பதவிக்கும் பயந்து அறியாதவர்கள்போல் நடிக்கலாம். இந்த புரட்டுகளையும் மயக்கு மோசங்களையும் உலகையே அளந்த உத்தமனிடம் காட்டி ஜெயிக்க முடியாது என்பதை உணரு."

என்ற அபாரமான அர்த்தம் ததும்பும் பாடல் இவர் மகளுடைய ஊழலையே குத்திக் காட்டுவதுபோல் தோன்றியது.

அவர் மனம் பட்ட வேதனை சொல்லில் அடங்காது. அவருடைய கண் முன்பு பாபக் குவியலின் மத்தியில் ஊர்மிளா நிற்பது போலும், இன்னும் பலவிதமான பயங்கரத் தோற்றங்களும் தோன்றிவிட்டன. பெற்ற பெண்ணையினும் மனமாற வெறுத்தார். சன்யாசினியின் ப்ரஸங்கமும் திட்டங்களும் அவர் மனதில் ஓர் புத்துயிரையும் உணர்ச்சியையும் கொடுத்தன.

உடனே அவர் எண்ணங்கள் பற்பல விதம் கரைபுரண்டோடின. தனது ஒரே மகளின் கதியே கண் முன்பு கண்ணடி போல் தெரிகிறது. அவளால் இனி எந்த விதமான லாபத்தையும் அடைய முடியாது என்ற உறுதி அவரையறியாமல் மனதில் தோன்றியது. "வெளியூருக்குச் சென்ற ஹரிநாத்தின் நிலைமையோ ஒன்றுமே தெரியவில்லை. அவனுக்கு ஊர்மிளாவின்மீது சற்றும் அன்பு இல்லை என்பதும் தெரிந்த விஷயம். மகள் இத்தகைய துஷ்டையாகிவிட்ட பின்னர் இனிமேல் ஹரிநாத் சரி இல்லை என்று சொல்வதும் பெருங் குற்றமாகும். அதோடு ஹரிநாத்தே இந்த சனியனின் ஊழலைத் தெரிந்துகொண்டுவிட்டால் யார் கதி என்னவாகுமோ...நமக்கும் வயதாகிவிட்டது. நல்ல காரியத்திற்கு நாம் சரீரப் பாடு படாவிடினும் பொருளுதவியாவது செய்து மகிழ்ச்சி பெறலாம்."

என்ற வீராவேசம்போன்ற எண்ணம் உதித்துவிட்டதால் தடதடவென்று இறங்கி வந்தார். அவரை மீறிய உணர்ச்சியினால் கண்ணீர் மாலை மாலையாகப் பெருகியது. இதுகாறும் தான் உழைத்துச் சம்பாதித்ததைத் தவிர பென்ஷன் வாங்கும்போது (கயும்டேஷன்) வாங்கிய பணத்தொகை சுமார் 5 ஆயிரம் ரூபாய் வந்ததில் கை கூசாமல் இரண்டாயிரம் ரூபாயிக்கு ஒரு செக்கு எழுதி அதை எடுத்துக்கொண்டு ஓடிவந்தார்.

இவர் ஆவேசத்துடன் செக்கை எடுத்துக்கொண்டு வருவதைக் கண்ட ஊர்மிளாவுக்கு ஆத்திரம் பத்திக்கொண்டது. இதை சன்யாசினிக்குத்தான் கொடுத்துவிடப்போகிறார் என்று தெட்டென விளங்கிவிட்டது. எனினும் என்ன நடக்கிறதென்பதைப் பார்த்துக் கொண்டே நின்றாள். சடகோபன் வீதியில் சென்று பஜனையிலுள்ள கடவுள் படத்திற்கு வணங்கிப் பின் "தாயே!....உங்கள் பெருமையைப் பற்றி பலர் மூலம் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் நேரில் கண்டதில்லை. அதற்கு பாக்யம் செய்யவில்லை.

சற்று முன் தாங்கள் பாடிய பாடலின் உண்மையை இம் மாய ப்ரபஞ்சத்தில் கண் கூடாகக் கண்டும் மக்களுக்கு மதி இல்லை. தாயே! வெளிப்படையாக குற்றம் செய்தோரை சமூகமும் உலகமும் பகிஷ்கரிக்கிறது. ஆனால் செய்யத்தகாத குற்றத்தைச் செய்து கொண்டே இருப்பவர்களை சமூகம் நன்கு வரவேற்கிறது; உபசரிக்கிறது, பின்னும் பின்னும் மூடி வைத்து மறைத்து உதவியும் செய்கிறது.

தாயே! என்னால் பேச முடியவில்லை. இம் மாய ப்ரபஞ்சத்தில் நான் பார்க்காததும் அனுபவிக்காததும் எதுவுமில்லை. நான் செய்துள்ள பாபமும் கூறத்திறமில்லை. அந்த குவியலில் ஒரு சிறிதாவது தங்கள் புண்ணிய தரிசனத்தினாலும் கைங்கரியத்தினாலும் தலைவதற்கு இதோ இந்த 2 ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொள்ளுங்கள். இதொன்றுவது என் உழைப்பினால் பயன்பெற்றதாகட்டும்'' என்று கூறியவாறு கொடுக்கும்போது, அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஊர்மிளாவும் அவள் தாயாரும் ஓட்ட ஓட்டமாக ஓடி வந்து சடகோபனின் கையைப் பிடித்துக் கொண்டு தடுத்து ''அப்பா! இதென்ன மூட நம்பிக்கையான காரியம் செய்யத் துணிந்தீர்கள்? ஆண்டிச்சி வேஷம் போட்டுக்கொண்டு ஊரை ஏமாற்றும் இந்த வேஷக்காரிக்கு முன் பின் யோசியாமல் இரண்டாயிரம் ரூபாயைத் தூக்கிக் கொடுப்பதாவது. கைதிகளுக்கு நன்மை செய்வதாம்; பாழாப்போவதாம். ஊரைக் கொள்ளையடித்து அடித்து நெடுநாளாகப் பழகிவிட்டதால் இந்த புதிய முறைக் கொள்ளைக்கு வந்துவிட்டாளோ! இது சுத்த மோசம். ஹம்பக்கு...உள்ளே வாருங்கள்''......என்று ஊர்மிளா கையைப் பிடித்து இழுத்தாள்.

சடகோபனின் மனது கொதித்து வயிறு எரிந்தது. தன்னிடம் மலை போன்ற குப்பையை வைத்துக்கொண்டு பரிசுத்தவதிகளை வாய் கூசாமல் பேசுகிறாளே துஷ்டை...என்று எண்ணி முகத்தைக் கடுத்துக்கொண்டே ஊர்மிளாவை இழுத்துத் தள்ளிவிட்டு ''ஊர்மிளா! மரியாதையாகச் சென்றுவிடு. நான் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்த சொத்திற்கு உரிமை பாராட்டும் கடமை என்னுடையதே யன்றி பிறருடையதில்லை. நீ சொல்லவேண்டாம். ...அனியாயமாக ஓர் பரிசுத்தவதியைப் பழித்து அந்த பாதக மூட்டையையும் சேர்த்துக்கொள்ளாதே...போ...விலகிப்போ...

அம்மணீ! இந்தாருங்கள். தாங்கள் இச் சிறு தொகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தங்களுடைய இப் பெரிய காரியம் பரிபூர்ண வெற்றியுடன் நிறைவேறவேண்டுமாய்க் கடவுளை ப்ரார்த்தனை

செய்கிறேன். இம் மாதிரி இன்னும் பல அரிய காரியங்களைத் தாங்கள் செய்து உலகத்திற்கு நன்மை பயக்கவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறேன்'' என்றார்.

சன்யாசினியும் வெகு வணக்கத்துடன் அத் தொகையைப் பெற்றுக்கொண்டு பரம சந்தோஷமும் மரியாதையும் நிரம்ப சடகோபனை வணங்கி "ஐயா! தங்களைப்போன்ற தரும தாதாக்கள் இருக்கும் வரையில் உலகத்தில் நல்ல காரியத்திற்குப் பஞ்சமே இல்லை எல்லாம் என்னப்பன் கிருஷ்ணனின் அருள். அவன் கருணையாலும், உங்களைப்போன்ற பெரியாரின் ஆசியாலும் என் கடமையைச் செய்து முடிக்கிறேன்.'' என்று கூறிவிட்டு மீண்டும் பாடிக் கொண்டே போய்விட்டாள்.

"இப்படியும் ஒரு பயித்தியக்காரனிருப்பனு! இது ஏதோ தெரியவில்லை. அந்த மனிதனுக்காவது மூளை கலங்கி புத்தி ஸ்வாதீனமின்றி இத்தனை பெருந் தொகையை திடீரென்று முன்பின் யோசியாது கொடுத்திருக்கவேண்டும். அன்றி அந்த ஆண்டிச்சி ஏதாவது மாயஜால மந்திரம் செய்து மதியை மயக்கி அடித்துக் கொண்டுபோயிருக்கவேண்டும். இல்லையேல் இம்மாதிரி தூக்கிக் கொடுக்க முடியாது. அந்த ஆண்டியை அடித்துப் பிடுங்கி அப் பணத்தைக் கொண்டுவந்துவிடவேண்டும்'' என்ற எண்ணம் ஊர்மிளாவின் மனத்தில் வேகமாகத் தோன்றியது.

அந்த எண்ணத்தை வளர்ப்பதில் சகாயம் செய்யும் துர் மந்திரிகளைப்போல் சிலர் சேர்ந்து ஒத்து ஊதினார்கள். அதே சமயத்திற்கு அவளுடைய சினேகிதிகளான கோலாகலம் முதலியோர் வந்து சேர்ந்து இன்னும் தூபம் போட்டுவிட்டதால் ஊர்மிளாவின் தீய எண்ணம் பின்னும் தலைதூக்கிவிட்டது. இந்த விபரீத போக்கின் விளைவு எவ்விதம் முடியுமோ, யார் கண்டது? எல்லாம் ஈசன் செயல்.

---

## 17-வது அதிகாரம்

### வேதனை ஊற்று—விதியின் கூற்று

முன்பு ஆஸ்பத்திரியில் தனது பெரிய டாக்டர் கோபித்துத் தள்ளியபோதே சௌதாமினியின் இதயம் வெடித்துவிடும்போல் தத்தளித்தது. தேகம் குன்றிப்போய் உயிரே போய்விடும்போலாகிவிட்டது. இன்று

இத்தனை பெரிய மனிதர்களின் கண்முன்பு இம்மாதிரி யோர் காலமும், விதியின் கூத்தும் சம்பவித்ததை அவளால் தாங்கவே முடியவில்லை. அவளுடைய மனம் படும் பாட்டைக் கூறவும் திறமில்லை. இம்மாதிரி சதியாலோசனைச் சூழ்ச்சியை யார் செய்திருப்பார்கள்? தன்னை இத்தனை தூரம் இம்சிக்கக்கூடிய அத்தனை கொடிய விரோதிகள் யார் இருக்க முடியும்?

இன்று இச் சொல்ப நேரத்திற்குள் ஊர்மிளாவைத் தவிர வேறு யாரும் வரவே இல்லை. அவளுக்கு நம்மீது என் பகை இருக்கப்போகிறது? அவள் ஏன் இம்மாதிரி செய்திருக்கப்போகிறாள்.... சீச்சீ! அப்படி செய்திருக்க இடமில்லை. நியாயமும் இல்லை. நம் விரோதிகள் அந்த நர்ஸ்கள் நால்வரைத் தவிர வேறு யாருமில்லை. அவர்கள் இன்று இங்கு வரவில்லை. வேறு எவ்விதமாகத்தான் இது நடந்திருக்கலாம்...

ஒருகால் இவர்களுக்கு வேண்டாத எதிரிகள் யாராவது இந்தம்மாளை ஒழித்துவிடும்பொருட்டு இம்மாதிரி செய்திருக்கக்கூடுமா! ....இப்படி எல்லாம் சௌதாமினியின் மனது குழம்புகிறது. அங்கு நிற்கவும் வெட்கமும் துக்கமும் பாதித்து வதைக்கிறது. தான் ஒரு குற்றமும் செய்யாத நிரபராதி என்று எத்தனையோ சொல்லியும் டாக்டரின் கோபம் தணிவதாயில்லை. இத்தனை ஆபத்தான நோயாளியிடம் நீ கண்ணுக்குக் கண்ணாய் பார்த்துக்கொள்ளும் பொறுப்பற்று இம்மாதிரி அஜாக்ரதையாயிருந்ததால் உனக்கு புத்திவரும் பொருட்டு 50 ரூபாய் அபராதத்துடன் விடுகிறேன். இதுவே நீ செய்த பாக்யம்...உம்...பணத்தை வைத்துவிட்டு நட....என்றார்.

நின்றவிடத்தில் பணத்தை வைப்பதற்கு எங்கே போவாள்! என்ன செய்வாள் பாவம்...தலை கிறுகிறு என்று சுற்றுகிறது. கண்ணீர் வழிந்தபடியே "ஐயா! நின்றவிடத்தில் நான் எப்படி ரூபாயை வைக்கமுடியும்? நான் என்ன உங்களைப்போன்ற மகராஜர்களா! நான் பரம ஏழையல்லவா! எங்கிருந்து நான் பணம் திடீரென்று வைப்பேன்?''...என்றாள்.

வைத்தியரின் ஆத்திரம் பின்னும் அதிகரித்தது. "என்ன! என்ன! எங்களைப்போன்ற மகராஜர்கள் இல்லையா! ஆம்...உன்னைப்போல் நான்கு மூதேவி நர்ஸுகளை வேலைக்கு வைத்துக்கொண்டால் எங்களுக்கு விடிந்துவிடும். நல்ல கீர்த்தியும் செல்வமும் உடனே குவிந்துவிடும் இம்மாதிரி துடுக்காக வாயாடத் தெரிந்திருப்பதுபோல் வேலையில் ஏன் தெரியவில்லை? உன் பெட்டியை இனி நீ எடுக்க யோக்யதை இல்லை; அதை வைத்துவிட்டுப் போய் விடு.''

என்று இவர் தலைகால் தெரியாது கூச்சலிட்டுக்கொண்டிருக்கையில் ப்ரஸவித்த பெண்ணின் சகோதரன் ஓட்டமாக ஓடி ஒரு நர்ஸை அழைத்துவந்து "டாக்டர்! இதோ வேறு நர்ஸை அழைத்து வந்தேன்" என்று கூறினன். கோலாகலம் என்ற துஷ்டை பெட்டியுடன் உள்ளே ப்ரவேசிப்பதைப் பார்த்ததுமே சௌதாமினிக்குத் தூக்கி வாரிப்போட்டது.

கோலாகலம் சௌதாமினியை ஒரு மாதிரி குற்றலாகப் பார்த்துக்கொண்டே "அடாடா! யாரோ முட்டாள் நர்ஸ் அம்மாதிரி செய்துவிட்டாள் என்றல்லவா நினைத்தேன் சௌதாமினி! நீயா இத்தனை அஜாக்ரதையாகவிருந்தாய்! அட க்ரகசாரமே. ஆஸ்பத்திரியோடு உன்னைப் பிடித்த பீடை தொலைந்ததென்றல்லவா நினைத்தேன்....ஐயோ பாவமே"...என்று வயிற்றெரிச்சலுடன் குத்தலாகக் கூறினள்.

சௌதாமினிக்கு இம் மொழிகள் அளிந்த புண்ணில் அனலைக் காட்டுவதுபோல் வேதனையுண்டாக்கிவிட்டன. டாக்டரும் முடுக்காக கோலாகலத்தை நோக்கி "ஊம். இந்தம்மாளுக்கு ட்ரெஸ் சேன்சு பண்ணு." என்ருர். சௌதாமினி இனியும் அங்கு நிற்க மனம் ஒப்பாது தன் கழுத்திலிருந்த சின்ன செயினைப் பார்த்தாள். அதுகாறும் தொழில் செய்துவந்த அந்த பெட்டியும், சில சாமான்களும் அவள் முதல் முதல் தொழிலுக்கு ஆரம்பிக்கும் போது அவள் உயிர்க் காதலனுகிய ஹரிநாத் வாங்கிக்கொடுத்ததால் அதை இங்கு கொடுக்க மனம் துணியவில்லை. இந்த சங்கிலிதான் நமக்கெதற்கு என்று வெறுப்பும் துக்கமும் பொங்கிவிட்டது.

உடனே அதைக் கழற்றி டாக்டரின் முன்பு வைத்துவிட்டு பதில் பேசாமல் தன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்கமாட்டாது நடந்து சென்று விட்டாள். புத்தி தடுமாற்றமும் நிலை புரண்ட மனே வேகமும் இவளைத் தள்ளிக் கொண்டு சென்றன. இந்த அவமானமும் துக்கமும் நிறைந்த செய்தியை தன் தாதாவுடன் எவ்வாறு சொல்வதென்று விசனம் ஒரு புறம் தலை தூக்குகிறது.

கோலாகலமே தான் அங்கு வரும் பொருட்டு இம்மாதிரி சதி செய்திருக்கக் கூடுமல்லவா.........ஆஹ்ஹா......அந்தப் படுபாவியைக் கொலை செய்தால் தான் என்ன தோஷம்......நியாயம்.... நீதி......பாபம்......புண்ணியம்......என்று சதா நடுங்கித் தவிப்போருக்குத்தான் யாவும் ப்ரதிகூலமாகிறது. அஞ்சாது பாபத்தையும் மோசத்தையும் செய்கிறவர்கள் தான் இக்காலத்தில் பரம சந்தோஷத்துடனும் பலராலும் மதிக்கப் பட்டும் வாழ்கிருர்கள்...

ஏன் இனியும் சந்தேகம்......இந்த நால்வரும் சேர்ந்துச் செய்த சூழ்ச்சிதான் இது என்பதற்கு இனியும் சந்தேகமா!...... இல்லை......இல்லை.......அப்பாதகிகளுக்கு நானும் ஏன் துணிந்து பழிக்குப் பழி வாங்கக் கூடாது? என்னை வயிறு எரியச் செய்தவர்களை நான் ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்?'' என்று மனம் முறிந்துபோய் எண்ணுததும் எண்ணினபடியே நடந்து வரும் போ ,, சன்யாசினியின் பஜனை கோஷ்டியார் கீழ்வரும் பாடலை வெகு உருக்கமாகப் பாடிக் கொண்டே வந்தார்கள்.

சுருட்டி ராகம். ஆதி தாளம்.

(ப) போறுமையே உன்னைக் காக்கும் அதே உன்றன்.
பெருந்துயர்தனை நீக்கும் —போ

(அ) வறுமையும் துன்பமும் பிறவியின் நிழலாம்
மருும மறிந்து நல்லறிவு கோள்வாய் உயர் —போ

(ச) பகைமையும் கோபமும் பாபக் குன்றமல்லவோ
இகபர மிரண்டிலும் இழிவுறச் செய்திடும்
ஜகமளந்தோன் பதம் சரண் புகுந் தனுதினம்
அக முருகத் துதித்தால் தகர்த்திடும் அனைத்தையும்—போ

என்ற வெகு பொருத்தமானதும் அருமையானதுமான பாடலைக் கேட்டதும் சௌதாமினியின் உள்ளம் அப்படியே நெகிழ்ந்துருகியது. "ஹா.......நம் வினை நம்மைத் தாக்கும்போது பிறர் மீது நோவதில் பயன் என்ன? சிறிது நேரத்திற்குள் நான் எத்தகைய கொடிய எண்ணத்திலாழ்ந்து விட்டேன்? ஆம்....... எத்தனை கர்மாவை நான் அனுபவிக்க வேண்டுமோ! அத்தனை சோதனைகளையும் ஈசன் காட்டித்தான் ஆட்டுவான். கடன் வாங்கும் போது சந்தோஷமாக இருப்பதை, திருப்பிக் கொடுக்கும் போது துக்கமாக மாற்றினுல் பயன் உண்டா! அது போல் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.

இந்த சன்யாசினியே எனக்குக் குருவைப் போல் உபதேசம் செய்து தக்க தருணத்தில் காத்தார்கள். நெஞ்சே அஞ்சாதே!'' என்று தன்னைத்தான் தேற்றிக் கொண்டே அந்த பஜனை கோஷ்டியை நமஸ்கரித்து விட்டு நேரே வீட்டை நோக்கி நடந்தாள்.

கிழவருடன் யாரோ பேசும் சப்தம் கேட்டவுடன் அந்த வீட்டிலிருந்து தான் நடந்த விஷயத்தை சௌதாமினியிடம் தெரிவிக்க யாரேனும் வந்து விட்டார்களோ என்று குழப்ப முண்டாகியது. நடையிலேயே நின்று சற்று கவனித்தாள். யாரோ புதிதாக விருந்தமையால் உள்ளே சென்றுள். இவளைப் பார்த்த உடனே கிழவர்

அதிகமான ஆவலுடன் "என் கண்ணே சௌதாமினீ! வாம்மா உன் வரவுக்கே எதிர் பார்த்திருந்தேன் கடவுள் நம்மீது கண் திறந்து கருணை பாலித்திருக்கிறார்.

இதோ இப்பெரியாரை நமஸ்காரம் செய்யம்மா! இவர்தான் உன்னுடைய மாமன் இவர் வெகு நாட்களுக்கு முன்பே வெளியூர்களுக்குச் சென்று விட்டதால் இவரைப் பற்றிய தகவலே ஏதும் தெரியாது அடியோடு மறந்து போய் விட்டது. இப்போது புனர் ஜென்மம் எடுத்ததுபோல இத்தனை வருடங்கள் சென்று பின்னர் இங்கு திரும்பி வந்தாராம். வந்த பிறகு பழய உணர்ச்சியும் அன்பும் பாசமும் மூடிக் கொண்டதால் அவர் சகோதரியைப் பற்றி விசாரித்து கொண்டு இங்கு வந்திருக்கிறார்.

சௌதாமினீ! அவர் சகோதரியின் குடும்ப வரலாற்றைக் கேட்டுக் கண்ணீர்விட்டார். எனக்கோ வயது சென்றுகொண்டே இருக்கிறதே! என் கண் மூடிவிட்டால் உங்களுக்கு திக்கு யாரு, எப்படி நீங்கள் பிழைப்பீர்கள் என்று இரவு பகலாக நான் விசனித்துக்கொண்டே இருந்தேன். உனது சொந்த தாய்மாமனின் துணையை கடவுள் உனக்குக் காட்டிவிட்டார். இனி என்னுயிர் போனாலும் எனக்குக் கவலை இல்லை." என்று தன் மனத்திலுள்ள சந்தோஷ உணர்ச்சியை அப்படியே கூறிவிட்டார்.

இதைக் கேட்ட சௌதாமினிக்கு ஏற்கெனவே உண்டாகி இருந்த விசனமே தலை சிறந்து விளங்கிற்றேயன்றி தனக்குப் புதிய உறவினர் ஒருவர் கிடைத்ததுபற்றி சந்தோஷமோ, தெம்போ, ஆச்சரியமோ ஒருவித உணர்ச்சியும் உண்டாகவே இல்லை. தன்னுடைய இந்த கேவலமான நிலைமையில் விருந்தாளியும் ஒருவர் வந்துவிட்டாரே. நம்மைப்பற்றி ப்ரமாதமாக நினைத்திருக்கையில் நமது கால விதியின் கோல நிலையை அறிந்துகொண்டால் என்ன நினைப்பாரோ!" என்ற கவலையும் குழப்பமுமே முதன்மையாகத் தோன்றி வதைத்தது.

எனினும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் வந்தவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு ஒன்றுமே பேசத் தெரியாமல் நின்றாள். வந்தவர் சௌதாமினியை நோக்கி "அம்மா! குழந்தாய்! நான் ஊரைவிட்டு ஒரு வைராக்யத்தின்மீது சென்றபோது நீ மூன்று மாதத்துக் குழந்தை. காலகதியால் எத்தனையோ விபரீதங்களும் மாறுதல்களும் நடந்துவிட்டன. திடீரென்று எனக்கு இந்தப் பக்கம் வரவேண்டுமென்ற பேராவல் உதித்ததால் வந்துவிட்டேன்.

உங்களை எல்லாம் எங்களுடன் சில நாளைக்காவது வைத்துக் கொள்ளவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. உன் தொழிலில்

உனக்கு சற்றுவது ஓய்வென்பதே கிடையாது'.சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு சில நாட்கள் இருந்து எங்களை மகிழ்விக்கலாம். எல்லோரும் வாருங்கள்'' என்று அன்புடன் அழைத்தார்.

இதனால் சௌதாமினியின் மனது பின்னும் குழம்பியதேயன்றி தீர்மானமான முடிவுக்கு வரவில்லை. இவளுடைய வேதனையில் அயோமயமாயிருந்தது. அதற்குமேல் பேசமுடியவில்லை. இரவு எல்லோரும் படுத்துவிட்டார்கள். சௌதாமினி மட்டும் அன்று நடந்த விபரீத சம்பவத்தில் தூக்கமென்பதே கொள்ளாமல் தன் பாழ் பிறவியின் அவகேட்டை எண்ணி எண்ணிப் புலம்பித் தவிக்கிறாள்.

தனக்கு எந்த விதத்திலும் உலகத்திலுள்ள ஒரு சுகமும் நிம்மதியும் இல்லாதிருக்கையில் ஆயுளாவது முடியலாகாதா! ஏன் உயிர் வாழவேண்டும் என்ற விசனம் பொங்கிப் பொங்கி எழுகின்றது. ஹரிநாத்தின் பிம்பம் அடிக்கடி தோன்றி வதைக்கிறது. இன்னிலைமையில் இரவு வெகு நேரம் கழித்து பின் மாலையில் கண்ணயர்ந்து விட்டாள்.

சமயல்காரி முதல்முதல் எழுந்து வழக்கம்போல் வீதிக்கு வருகையில் வாசக்கதவு திறக்கப்பட்டிருந்தது கண்டு முதலில் திடுக்கிட்டாள். பிறகு உள்ளே வந்து பார்க்கையில் விருந்தாளியாக வந்தவரைக் காணவில்லையாதலால் அவர்தான் வெளியில் போயிருக்கிறாரோ என்னமோவென்று எண்ணித் தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டாள். சௌதாமினியும் கோகிலாவும் எழுந்தார்கள். கிழவர் எப்போதும் ஒரு கைப்பெட்டியைத் தம் தலைமாட்டிலேயே வைத்திருப்பது வழக்கம். அந்த கைப்பெட்டியைக் காணவில்லை, கிழவர் ஸ்மரணையற்றுப் படுத்துக் கிடப்பதைக் கண்டதும் சௌதாமினி அலறியவாறு கிழவரை எழுப்பி ''தாதா! இதென்ன இப்படி உடம்பு தெரியாமல் உறங்குகிறீர்களே! உங்கள் கைப்பெட்டி எங்கே காணவில்லை! வந்த விருந்தாளியும் காணவில்லையே?'' என்று பதைக்கப் பதைக்கக் கேட்டாள்.

கிழவர் திடுக்கென விழித்துக்கொண்டு ''என்ன! என் பெட்டியைக் காணவில்லையா! ஐயயோ! அந்த மனிதனையும் காணவில்லையா?'' என்று அலறியவாறு கேட்டார். உடனே வீடு முற்றும் பார்த்ததில் சௌதாமினியின் உடைகள் வைக்கும் பெட்டி முற்றிலும் காலியாகவிருந்தது. சில வெள்ளிப் பாத்திரங்கள் வைத்திருந்த பெட்டியை காணவில்லை. சௌதாமினி தன் தொழிலுக்கு அத்யாவச்யமான சில மருந்துகளும் அதற்கான சாமான்களும் ஒரு சிறிய பீரோவில் வைத்திருந்த அத்தனையும் காணவில்லை.

விலையுயர்ந்த சகல சாமான்களும் பறிபோய்விட்டதையறிந்த இப் பேதைப்பெண்ணின் நெஞ்சம் எப்படித்தான் துடிக்கும்? ஏற்கெனவே வேகும் மனத்தில் கவலையும் பாய்ச்சியதுபோல் ஆய்விட்டது. "ஆஹா! வந்த மனிதனை உண்மையில் சொந்தக்காரர்கள் என்று நம்பி இப்படியா மோசம் போய்விட்டோம். ஐயோ! கெட்ட காலம் மனிதர்களுக்கு வருவது உண்டு. இவ்விதம் இடிமேல்இடி இடிப்பதுபோலவா வரும். தாதா பெட்டியில் என்ன வைத்திருந்திருந்தீர்கள்?'' என்று சௌதாமினி கேட்டாள்.

கிழவர்:—என் செல்வமே:......எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் நான் அந்தப் பாவியைப் பார்த்ததுதான். நேற்று பார்த்ததும் முதலில் அடையாளம் தெரியவில்லை அவனுகவே நான் தான்;பலான மனிதன்; இதற்குள் மறந்து விட்டீர்களா? என்று நமது பூர்வீக சரிதையை எல்லாம் கூறியதால் நான் நம்பிவிட்டேன். அவனைப் போலவே குரலும் சாயலும் இருந்ததால் நான் முற்றிலும் ஏமாந்து விட்டேன்.

கண்ணே! பெட்டியில் நான் வைத்துள்ள உளவு தெரிந்து தான் இந்தப்பாவி வந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். நமக்கு ஊரிலிருந்த சொல்ப நிலத்தில் விளைவும் கிடையாது; கிஸ்தி கட்டும் செலவும் அதிகமாகிக் கொண்டு வந்தது. வீட்டு வாடகையோ நான்கு மாதங்களாக பாக்கி நின்று விட்டது. உனக்கு வரும் வருவாயோ நம் சாப்பாட்டிற்கும் மற்ற செலவுக்கும் தான் சரியாகி விடுகிறது. ஆதலால் அந்த நிலத்தை அடியோடு விற்று விட்டு அந்த தொகைக்கு ஒரு சிறிய குடிசையாவது சொந்தத்தில் வாங்கிக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் அதை விற்று விட்டேன்.

அந்த தொகை 800 ரூபாய் நேற்று காலையில்தான் வந்தது. இந்த வீடு மிகவும் சிறியதாயும், சந்தான ஒதுக்குப் புறத்திலிருப்பதாலும் இதையே இதன் சொந்தக்காரர் விற்று விடப் போகிறார் என்றதை: அறிந்தே நான் நிலத்தை விற்றேன். இதன் கிரயம் 1250 ரூபாய் என்றார். 1000 ரூபாய்க்கு; முடித்தேன். 800 முதலில் கொடுத்து விடுவதும் பிறகு 200 கொடுப்பது என்ற தீர்மானமும் முடிந்து விட்டது. இந்த உளவுகளை யறிந்துதான் இம்மாதிரி மோசம் நடந்து விட்டது. இதோடு மட்டு மில்லாமல் வீட்டிலிருந்த மற்ற பொருள்களுமன்றோ போய்விட்டன. ஐயோ! இம் மாயப்ரபஞ்சத்தின் மோசம் நம்பவைத்துக் கொள்ளை யடிப்பது தானே......இனி நாம் என்ன செய்வது?

சௌதாமினீ! இந்த விஷயம் வீட்டுக்காரனுக்குத் தெரிந்தால் வாடகைப் பணத்தை முதலில் கீழே வை என்று கட்டாயப் படுத்துவானே என்ன செய்வது? கண்ணே! உன் கழுத்திலிருந்த சங்கிலியை

இதுவரையில் நான் எத்தகைய கஷ்டத்திற்கும் தொடக்கூடா தென்று விருதம் வைத்துக் காப்பாற்றி வந்தேன். ஏனெனில் அது உன் தாயாரின் கழுத்திலிருந்த நகையாகும். இந்த கஷ்டமான நிலைமையில் வீட்டுக்காரன் நிர்ப்பந்தம் செய்வதற்கு முன்பு அதை யாவது விற்றுக் கொடுத்துவிடலாம். அம்மாதிரி செய்தால்தான் மானமாய்ப் பிழைக்க முடியும்...புத்தியறிந்த பெண்ணுகிய கோகி லாவை வைத்துக்கொண்டு நாம் எப்படி சந்தியில் அலைய முடியும்... கண்ணே....ஏன் புலம்புகிருய்?...இந்த களவை உடனே போலீஸில் எழுதி வைத்துவிட்டு வா!'' என்ருர்.

சௌதாமினிக்குள்ள மனக்கொதிப்பில் வாய்திறந்து பதில் கூறச் சாத்யமில்லாதுபோய்விட்டது. சில விநாடிகள் சென்ற பிறகு தன்னுடைய முந்திய நாள் சம்பவத்தைத் தெரிவித்து "தாதா! சங் கிலியை நேற்றே இழந்துவிட்டேன். இனிமேல் ஹரிச்சந்திர புரா ணத்தைப்போல் நாம்தான் அடிமையாகவேண்டும்; எனக்கு இனி மேல் எங்கும் மதிப்பு கிடையாது; கேஸ்கள் வராது. என்னை ஆதியி லிருந்து பாழ்படுத்தவேண்டுமென்றே அந்த பாவிகள் காத்திருந்து இம்மட்டும் செய்துவிட்டார்கள். இனியும் என்ன செய்வார்களோ தெரியவில்லை.

தாதா! இப் பாழும் உலகத்தில் எத்தனையோ அக்ரமங்களைச் செய்யும் பாவிகளுக்குத்தான் வாழ இடமுண்டு. சத்தியம், சத்தி யம், தர்மம் என்று கூவிக்கொண்டிருக்கும் நம்போன்ற கட்டைக ளுக்கு வாழ இடமே கிடையாது. நாம் மூவரும் கூண்டோடு கைலா சம் போகவேண்டியதுதான். நம்முடைய...ஏன்...மகா பாவியாகிய என்னுடைய ஜீவன் மறைந்துவிட்டால் என் கோகிலாவாவது சுகப் படுவாளோ; என்னமோ! என் பாப ஜென்மாவின் நிழல்தான் அவளை யும் வாட்டுகிறது. ஒரு பாபமும் அறியாத குழந்தையும்...சாகுந் தறுவாயிலுள்ள நீங்களும் கஷ்டப்படுகிறீர்கள். என் இதயம் வெடித்துவிடும்போலவிருக்கிறது. போலீஸிலாவது எழுதுவதா வது? எங்கு எழுதினுலும் நமது நிழல்தான் முன்னே நிற்கும். நமக்கு ஒருபோதும் நன்மை கிடைக்காது; எல்லாம் வினை வினை; தீ வினை'' என்று ஆவேசம் வந்தவளைப்போல் கூறிக்கொண்டே தேம்பித் தேம்பி அழுகிருள்.

இவைகளை எல்லாம் பார்த்த கோகிலாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அக்காவின் பரிதாபம் மனத்தைப் பிளக்கிறது. சின்னஞ்சிறு கிளி கூண்டி லடைபட்டுக் கிடப்பதுபோன்று கிடக் கும் அவளுக்கு என்ன தெரியும்? அக்காவை எப்படித்தான் தேற்று வாள்? தானும் கூட அழுவதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

போலீஸுக்கும் தகவல் கொடுத்தார்கள். போலீஸாரும் அவர்களின் சட்டப்படி விசாரணை செய்துகொண்டு சென்றார்கள். இடையில் ஒரு வாரம் கழிந்துவிட்டதேயன்றி பொருளைப்பற்றி எவ்விதமான தகவலும் கிடைக்கவில்லை. இச் செய்தி ஊர் முற்றி லும் பரவிவிட்டது. உடனே வீட்டுக்காரனுக்கு அவனுடைய வாட கைப்பணம் இதுவரையில் பாக்கியுள்ளது, வசூலாகுமோ ஆகாதோ! இனிமேல் பாக்கி சேராதிருந்தால் போதும். இந்த கஷ்ட நிலைமையில் எப்படி கொடுக்க முடியும் என்ற அரிய உபதேச ரத்ன மாலையை சௌதாமினியின் விரோதி நர்ஸ்களில் ஒருத்தியான குஞ்சம்மாள் என்பவள் தக்க சமயம் பார்த்து உபதேசம் செய்து விட்டாள்.

வீட்டுக்காரனின் மனைவி தேக அசுகமாயிருப்பதால் அவள் காலை மாலை இரு வேளையும் வரும்படி நேர்ந்ததால் வீட்டுக்கார னுக்கு எத்தனை தூரம் சௌதாமினியைப்பற்றிக் கூறமுடியுமோ அத்தனையும் கூறிவிட்டாள். கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரை யும் என்பது பழமொழியல்லவா! அதேபோல் அம் மனிதனுக்கு அவ நம்பிக்கையும், பணத்தை உடனே வசூல் செய்துவிடவேண்டு மென்கிற ஆசையும் தலைதூக்கிவிட்டது.

அவன் தனது வாடகை பாக்கியைக் கொடுக்கவேண்டுமென்று கிழவரிடம் வற்புறுத்தியதோடு, இன்னும் 15 தினத்திற்குள் வீட் டைக் காலிசெய்து விடவேண்டும்; இல்லையேல் ஜப்தி செய்துவிடு வேன்'' என்று மிரட்ட வாரம்பித்தான். ஐயோ! பாவம்! பரதேசிக ளுக்கொப்பான இவர்கள் எங்கே போவது? என்ன விதமாகப் பணத் தைக் கொடுப்பது?

இதே வேதனையில் சௌதாமினியின் உயிரே போய்விடும்போ லாகிவிட்டது. இந்த சமயம் கிழவருக்கும் சௌதாமினிக்கும் யார் யார் தெரியுமோ அவர்களை எல்லாம் உதவி கேட்டும் கிடைக்க வில்லை. இரண்டொருவர் "கோகிலாவை எங்கள் வீட்டில் விவாகம் செய்துகொடுத்துவிடுங்கள். நாங்கள் அந்த கடனை ஏற்றுக்கொண்டு அடைத்துவிடுகிறோம்'' என்று கூறினார்கள்.

கிழவரின் மனம் உடைந்துவிட்டது. "பெண்ணைக் கொடுத் துப் பொருள் வாங்கவேண்டுமா! ஐயோ! என்னென்னவோ எண்ணி மனக்கோட்டை கட்டினேனே. எங்கள் கதி இப்படியா ஆக வேண்டும்...சௌதாமினீ! என்ன சொல்கிறாயம்மா! குழந்தையைக் கொடுத்துவிட உன் சம்மதம் எப்படி?'' என்றார்.

சௌதாமினி:—தாதா! எனக்கு மூளையே குழம்பிக்கிடக்கிறது. என்னால் ஒன்றுமே பேசத் தெரியவில்லை. என் கண்மணி கோகி

லாவை நான் என் ஆபத்திற்காக விலைக்கு விற்பதுபோல் ஊமைக்கும், நொண்டிக்கும், செவிட்டிற்கும் விற்கமாட்டேன். இச் சமயம் ஹரிநாத் இந்த ஊரிலிருந்தால் இம்மாதிரி ஆபத்தில் உதவி செய்யாமல் பார்த்துக்கொண்டிருப்பாரா! நமது தலைவிதிதான் அவரையும் பிரியச்செய்தது...

என்று பேசிக்கொண்டிருக்கையில் வீட்டுக்காரன் ஜப்தி வாரண்டுடன் எமதூதன்போல் சிலரை உடன் அழைத்துக்கொண்டு வந்து அட்டகாஸம் செய்ய வாரம்பித்தான். சௌதாமினியின் உயிர் துடிக்கிறது. கிழவரின் ப்ராணன் தபிக்கிறது. கோகிலாவின் நிலைமை பதைக்கிறது. என்ன செய்வார்கள் பாவம்! ஜப்தி வாரண்டு வந்த பிறகு தங்கள் வேலையைச் செய்யாமல் தியங்குவார்களா! சௌதாமினியும் கோகிலாவும் ஸ்மரணையற்றுர்களென்றே கூற வேண்டும். அயோமயமான நிலைமையில் பலகையோடு பலகையாகச் சாய்ந்தார்கள்.

---

## 18-வது அதிகாரம்

## விசித்திர சம்பவம்—விநோத தரிசனம்

சடகோபன் முக்கிய சாமான்களை எல்லாம் கிராமத்திற் கனுப்பிவிட்டு மிச்சமுள்ளதையோர் அறையில் பூட்டிவிட்டு ப்ரயாணத்திற்குச் சித்தமாகிவிட்டார். ஆனல் சன்யாசினியின் பஜனை இவர் மனத்தை உருக்கியதால் பஜனையைப் பார்க்கவேண்டுமென்ற ஆசைக்காக பின்னும் இரண்டு நாட்கள் ஊருக்குப் போகாமல் தங்கி சன்யாசினியின் ஆசிரமத்திலேயே இருந்தார்

ஒருநாள் பிற்பகல் ஆசிரமத்திலிருந்து அவர் வரும்பொழுது சௌதாமினியின் வீட்டு வாசலில் ஒரே கூட்டமாயிருந்ததைக் கண்டார். இரு பெண்களும் தேம்பித் தேம்பியழும் குரலையும் கேட்டு சற்று திடுக்கிட்டார். பெஞ்சி, பலகை, பெட்டி, தட்டு முட்டு சாமான்கள் முதலியவற்றை எல்லாம் வாரண்டு சேவகன் வீதியில் கொண்டுபோவதையும் பார்த்த உடனே இவர் மனம் இவரையறியாமல் கலங்கியது.

இவர் தடதடவென்று உள்ளே வந்தார். சௌதாமினி குச்சியிலும் குச்சியாக இளைத்துப்போய் புலம்பிக்கொண்டே இருப்பதைப் பார்த்த உடனே உண்மையில் மனது உருகிவிட்டது. தன் மகளுடைய அத்தனை பெரிய ஊழலையறிந்தும் அதை வெளியிடாது காப்பாற்றிய பெருந்தன்மையான குணமும், மாதிரியும் அவர் கண் முன்பு தோன்றியது. தன் ஊழலை மறைக்காமல் ஊரெல்லாம் சொல்லியிருந்தால் தனக்கு என்னவாகி இருக்கும்?.'' ஐயோ பாவம்! ...நம்மை ஆபத்தில் காத்ததுபோல் நாம் இச்சமயம் விசாரிக்காவிடில் கொடிய பாவியாகவன்றோ ஆவோம்?

அதோடு ஹரிநாத்தும் இவளும் முழு மனத்துடன் காதலித்த ரகஸ்யம் நம் உள்ளம் அறியாமல் போகவில்லை. அவன் இங்கிருந்தால் இச்சமயம் கைவிடுவானா? பாவம் பரிதாபமாகவிருக்கிறது'' என்று தனக்குள் பலவிதமான எண்ணங்கள் உதிக்கப்பட்டவராய் சௌதாமினியின் முன்பு அவளே வியக்கும் வண்ணம் சென்று "சௌதாமினீ! ...என்ன விஷயம்!...ஏன் ஜப்தி செய்கிறார்கள்?' என்று அன்போடு கேட்டார்.

சௌதாமினி "இது உண்மையான தோற்றமா! அன்றி உரு வெளித்தோற்றமா?...என்று ஐயுற்று ப்ரமித்து இமை கொட்டும் நேரம் அவரையே உற்று நோக்கினாள்.

சடகோ :—அம்மா! பயப்படாதே...நான்தான் ஹரிநாத்தின் மாமன். விஷயமென்ன—என்றார். சௌதாமினி புலம்பிக்கொண்டே ஆதிமுதல் இன்றுவரையிலுள்ள சகல விஷயங்களையும் கூறி இம் மாதிரி என்னை அடியோடு பாழ்படுத்திவிடவே அவர்கள் கங்கணங் கட்டிக்கொண்டார்கள். செய்து தீர்த்துவிட்டார்கள். என் தலை விதியில் இன்னும் இனிமேல் அனுபவிக்கவேண்டியது பாக்கி இல்லை. உயிரை விடுவதுதான் மிச்சம்'' என்று கதறிக் கண்ணீர் விட்டவாறு கூறினாள்.

இந்த மிகவும் பரிதாபகரமான விஷயங்கள் சடகோபனின் மனத்தை உருக்கின. அத்தகைய துஷ்ட நர்ஸ்கள் ஊர்மிளாவுக்கு சினேகமாகவிருப்பதுபற்றி வேம்பென வெறுத்தார். தன் ஊழலை சௌதாமினி அறிந்துகொண்டதால் அவள்மீது த்வேஷங் கொண்டு அந்த நர்ஸ்களை ஏவி தன் பெண்ணும் தீங்கு செய்கிறாளோ! என்ற எண்ணம் சடக்கென உதித்தது.

அத்தகைய காரியத்திற்குத் துணிந்த அப்பாதகி எதைத்தான் துணிந்து செய்யமாட்டாள் என்று தன் மகள்மீதே அடங்கா வெறுப்பும் கசப்பும் உண்டாகியது. உடனே வாரண்டுக்காரனையும்

வீட்டுக்காரனையும் நோக்கி "ஐயா! தயை தாக்ஷண்யமற்ற நெஞ்சுடையவர்களில் நீங்களும் சேர்ந்த புண்ணிய புருஷர்களாவீர்கள். இருங்கள்....வருகிறேன். உங்கள் வேலையை நிறுத்துங்கள்....

என்று கூறிக்கொண்டே வீட்டிற்குப்போய் ஓட்டமாகத் திரும்பிவந்து வீட்டு வாடகை பாக்கியும், வருகிற முதல்தேதி வரையிலும் பணத்தைக் கொடுத்து கணக்கை பைசல் செய்துவிட்டு சாமான்களை எல்லாம் உள்ளே தூக்கி போடச்செய்து பின்னர் அவர்களை எல்லாம் அனுப்பிவிட்டார் .... மாய ப்ரபஞ்சத்தின் லீலைகள் எப்படி இருக்கிறது பாருங்கள்' ஊர்மிளாதன் ரகஸ்யத்தை சௌதாமினி தெரிந்துகொண்டதற்காக அவளுக்கு தீங்கு செய்யத் துணிந்ததும், அதே ரகஸ்யத்தைத் தெரிந்தும் காப்பாற்றி வெளியிடாதிருந்த பெருந்தன்மைக்காக ஊர்மிளாவின் தகப்பனுர் ப்ரதியுபகாரம்போல் ஆபத்தில் காத்ததும் எப்படி இருக்கிறது பாருங்கள் ஒரே காரியத்தின் மதிப்புக்காக மரியாதையும், பயத்துக்காக ஆபத்து விளைவிப்பதுந்தான் கலியின் கூற்று போலும்

சௌதாமினி இந்த சமயத்தில் இத்தகைய ஓர் உதவி தனக்குக் கிடைக்குமென்று சொப்பனத்திலும் எண்ணவில்லையாகையாலும் தன் காதலனே தன்னை வந்து காப்பாற்றியதுபோல் அவளது மாமனே வந்து காத்ததும் அவளுக்கு வியப்பின்மீது வியப்பாகிவிட்டது. கடவுளே தனக்கு உதவி செய்ததாகத் தோன்றியது. சடகோபனை வணங்கி "பெரியீர்! தாங்கள் எனக்குச் செய்த இப்பேருதவிக்கு நான் என்னவிதமாகத்தான் கைம்மாறு செய்வேன்?" என்று கண்ணீர்:பெருகக் கூறினுள்.

சடகோ:—அம்மணீ! சிறியவளாகவிருப்பினும் எத்தனை பெரிய ஆபத்துக்களில் எங்களுக்கு உதவி செய்திருப்பாய்? இந்த உபசார வார்த்தைகளெல்லாம் வேண்டாம். இதோ இந்த 50 ரூபாயைக் கையில் வைத்துக்கொள். எங்காவது சிறிய இடம் பார்த்துக்கொண்டு சௌக்யமாயிருங்கள். நான் அவசரமாகப் போகிறேன்— என்று கூறிவிட்டு பதிலே பேசாமல் வீட்டிற்குப் போய்விட்டார்

இச் செய்கை கிழவரையும், சௌதாமினியையும் இன்னும் ப்ரமிக்கச் செய்துவிட்டது. "பூர்வத்தில் ஏதோ ருணனுசம்மந்தமிருந்திருக்கவேண்டும்; அதனுல் இவ்விதம் நன்மையைக் கடவுள் தக்கசமயத்தில் செய்துவிட்டார்." என்று மனந்தேறினுர்கள். அன்று நடந்த விபரீத சம்பவமும் உடனே நடந்த விசித்திர சம்பவமும் இவர்களின் இதயத்தில் புத்துணர்ச்சியை அளித்தது.

அதற்குமேல் அவ் வூரிலிருக்க ப்ரியப்படாத சௌதாமினி "தாதா! நாம் எங்காவது கிராமத்திற்குச் சென்றுவிடலாம். இந்த

ஊரில் இனிமேல் தலைகாட்ட எனக்குப் பிடிக்கவில்லை. எந்த கிராமத்திற்காவது சென்று ஏதேனும் தொழில் செய்து ஜீவிக்கலாம் என்று தோன்றுகிறது.'' என்றாள். கிழவரும் அதற்கு இசைந்தார்.

தங்களுடைய பூர்வீக கிராமத்திற்கே சென்று ஒரு சிறிய குடிசையில் வசிக்க வாரம்பித்தார்கள். சடகோபனும் ஊர்மிளாவும் கிராம வாசத்திற்குச் சென்றுவிட்டார்கள். கிராம வாஸத்தை சௌதாமினி வெகு ஆநந்தமாக வரவேற்றாள். தினந்தோறும் விடியற்காலையில் நடப்பதும், பிறகு ஆநந்தமாக ஏரியில் துளைந்து ஸ்நானம் செய்வதும், பிறகு கஞ்சியாகக் காய்ச்சி சந்தோஷமாய்க் குடிப்பதும், மீண்டும் மாலையில் உலாவச் செல்வதும், குடியான ஜனங்களுடன் வெகு தாராளமாகப் பழகுவதுமாகவிருக்கிறாள்.

ஊர்மிளாவோ, அவளுடைய க்ராமத்தைப் பார்க்கவும் வெறுத்தாள். அந்த க்ராமம் இதைவிட மிகவும் பெரியது. பண்ணையக்காரர்களே சுமார் 100 வீட்டார்கள் நிறைந்த கிராமம். தாலுகா போர்டு ஆபீஸ்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் முதலியன இருக்கும் க்ராமம். அதைக் கண்ணால் பார்க்கவும் பிடிக்காது, தினம் தாயாரையும் தகப்பனாரையும் கண்டபடி திட்டுவதும் முணுமுணுத்துக்கொண்டே சதா படுத்துப் புலம்புவதுமாகவிருக்கிறாள். வீட்டில் சதா ரோதனைதான். ஆனால் சடகோபன் இதை சற்றும் லக்ஷியம் செய்யவில்லை. தனது வேலையுண்டு, தானுண்டு என்று இருந்தார்.

சௌதாமினிக்கு க்ராம வாஸம் பிடித்திருக்கிறதெனினும் சரியானபடி தொழில் கிடைக்கவில்லை. வயல் வேலைகளைச் செய்ய பழக்கமில்லாததால் அதில் திடீரென இறங்க முடியாது போயிற்று. அந்த க்ராமத்து பண்ணையாரின் உதவியால் பக்கத்து க்ராமத்திலுள்ள பஞ்சாயத்து போர்டு ஆஸ்பத்திரியில் மாதம் 15 ரூபாய் சம்பளத்தில் நர்ஸ் வேலைக்கமர்ந்தாள். அதே க்ராமத்திற்கு ஜாகையை மாற்றிக்கொண்டார்கள்.

கஷ்டமும் சுகமும் மனிதர்களுக்கு நிழலல்லவா! இதுகாறும் நிறைய பணம் சம்பாதித்தாலும் இப்போது அதைவிட கேவலமான சிறு தொகையைச் சம்பாதித்து காலந்தள்ளுவது சந்தோஷமாகவே சௌதாமினிக்குத் தோன்றியது. ஆனால் மாட்டு வண்டியில் சுற்றுப்புறமுள்ள க்ராமங்களுக்கு தொழில் நிமித்தம் இரவும் பகலும் சென்றுவருவது மட்டும் சற்று கஷ்டமாயும் பயமாயும் தோன்றியது எனினும், விரோதிகளுடைய உபத்திரவ மில்லாதிருப்பதே பரமாநந்தமாக எண்ணினாள். ஹரிநாத்தைப் பற்றி எவ்விதமான தகவலும் தெரியாது போய்விட்டதற்காக மிகவும் விசனித்து ஏங்குவதை மாற்றவோ, மறக்கவோ முடியுமா! சதா அதொருபுறம் புகைந்துகொண்டுதானிருந்தது.

இதற்கு நேர்மாறாக, ஊர்மிளா அவன் சென்றதைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை; எனினும் அவன் வந்துவிட்டால் தான் பட்டின வாஸம் செய்யலாமே என்ற ஆசை மட்டும் தலை தூக்கியது. வீட்டிற் குள்ளேயே அடைத்து வைத்தாலும் சரி, வெளியில் அலையவிட்டாலும் சரி தன்னையும் தன்னெறியையும் காக்கும் உத்தமிகள் எங்கேயும் காத்துதான் வருவார்கள். மனம் காவலேயன்றி மதில் காவலில்லையல்லவா?...மனம் சுத்தமின்றி மதில்கள் பல கட்டி அவற்றுள் சிறை வைப்பினும் அத்தனை மதில்களையும் கடக்கும் சக்தியும், துர் எண்ணமும், குண்டு தைரியமும் அத்தகையோருக்குத் தோன்றிவிடும்.

வருடங்கள் ஒவ்வொன்றாய் சுழன்றுச் செல்கின்றது. ஊர்மிளா வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்ததும் பிடிக்காமல் மெல்ல மலையடிவாரத்திற்கும், மைதானத்திற்கும் சென்று உலாவ வாரம்பித்தாள். அவ்வூர் பண்ணையக்காரரின் மகனிடம் அதிக ஸினேகமும், அவள் திருட்டு புத்தி மாறாமல் நட்பும் உண்டாகிவிட்டது. ஆனால் அதை சடகோபன் அறியமாட்டார் வேம்பை பலதரம் கரும்புச் சாறு ஊற்றிக் கழுவினாலும் அதன் கைப்பு மாறுமா! கரும்பையும் கைப்பாகச் செய்துவிடுமேயன்றி அதன் குணம் மாறாது. அது போல் எத்தனைதான் திருத்தவேண்டுமென்று நினைத்தும் பயனில்லை. ஒருதரம் பேராபத்து அனுபவித்திருந்தும்கூட அதை அடியோடு மறந்துபோய் தன் மனம் போன போக்காக நடக்க வாரம்பித்தாள்.

வருடங்கள் நான்காய்விட்டன. வெளி நாட்டில் அபாரமான புகழும் கீர்த்தியும் அடைந்துவரும் ஹரிநாத்தை அவ்வூரிலிருந்து தாய் நாட்டிற்கு மாற்றிவிட்டார்கள். வெளி நாட்டிலேயே புகழ் பெற்றுவிட்டதால் இங்கு இன்னும் அதிகரித்த சம்பளத்தில் மாற்றிய உடனே ஹரிநாத்தும், ஸ்ரீமதி லீலா ஹரிநாத்தும், மிஸ் ஹரிநாத், மாஸ்டர் ஹரிநாத்தும் தாய் நாட்டிற்கு வந்து பெரிய பங்களாவில் குடியேறிவிட்டார்கள்.

லீலாவதியின் அன்பையும் ஆர்வத்தையும் காணக் காண ஹரிநாத்தின் உள்ளம் பூரித்து பழய சரித்திரங்களை அப்படியே மறந்துவிட்டான். அவன் தாய்நாட்டை விட்டுச் சென்று ஆறு வருடங்களுக்கு மேலாகிவிட்டன.

சௌதாமினி ஒரு தினம் பஞ்சாயத்து ஆஸ்பத்திரியில் பத்திரிகை படித்துக்கொண்டிருக்கையில் அதில் ஒரு விளம்பரம் இருப்பதைக் கண்டு அதை உடனே தன் பாட்டனாருக்குக் காட்டி "தாதா! இதோ இதைப் படிக்கிறேன் கேளுங்கள்.

"கல்வியறிவும் சிறந்த ஒழுக்கமும் நிறைந்த உயர் குடும்பத்து தாதியொருத்தி தேவை. சரியான சம்பளமும் பாதுகாப்பும் அளிக்கப்

படும். நர்ஸ் தொழில் தெரிந்தவர்களானல் மிகவும் நல்லது. கீழ் காணும் விலாசத்திற்கு எழுதியோ, நேரிலோ கேட்டு விவரமறியவும்.

மிஸஸ் லீலாவதி.
ஆநந்த விலாஸ்.''

தாதா! கேட்டீர்களா! இப்போதிருக்கும் நிலைமை பஞ்சாயத்து போர்டு நின்றுவிடும்போல் இருக்கிறது. வருமானமே கிடையாது. நடத்துவதற்குக் கஷ்டப்படுகிருர்கள். திடீரென்று நின்றுவிட்டால் நாம் என்ன செய்ய முடியும்? கடவுள் எல்லாம் நன்மைக்குத்தான் செய்வார் என்பதை நாம் நம்புகிறவர்கள். இதைப் பார்த்தால் பெரிய மனிதர்களின் வீட்டு சகவாஸமாகத் தெரிகிறது.

தாதா! அடிக்கடி கட்டை வண்டியில் வெகு தூரம் போகவும் வரவும் என்னுல் முடியவில்லை. அதனல் பலஹீனம் அதிகரிக்கிறது. அந்த வேலை நமக்கு கடவுள் கிருபையால் கிடைத்தால் நம் விதியை மறந்து சிவனே என்று காலந்தள்ளலாம். பெரிய இடத்தில் பழகினுல் நமது அந்தஸ்திற்குத் தக்க இடமாகப் பார்த்து கோகிலாவையும் கட்டிக் கொடுத்துவிடலாம். என்ன சொல்கிறீர்கள்?'' என்ருள்.

இந்த யோசனை கிழவருக்கும் உசிதமாகத் தோன்றியதால் "அம்மா! சௌதாமினீ! இது கிடைத்தால் மிகவும் நன்மைதான். நீ இன்றே தந்தியடித்து பதில் தெரிந்துகொள்கிருயா?'' என்ருர்.

சௌ:—தந்தியடிப்பதைவிட நான் நேரிலேயே சென்று சகலமும் விசாரித்தறிந்துகொண்டு முடிந்தால் நமக்கு அதிர்ஷ்டமிருந்து கிடைத்தால் ஒப்புக்கொண்டு வந்து பிறகு நாம் எல்லோரும் போவோம்—என்ருன். அதற்குக் கிழவர் சம்மதித்ததால் அன்றே ப்ரயாணமாகி மாலை 6 மணி சுமாருக்கு ஆநந்த விலாசத்தையடைந்தாள்.

அப்போதுதான் அவர்கள் அங்கு மாற்றப்பட்டு வந்திருப்பதால் சாமான்கள் எல்லாம் சரியாக அடுக்காமல் மூலைக்கொன்ருகப் போட்டும், சிலவற்றைச் சரிப்படுத்தியும் இருந்தன. அழகே உருக்கொண்ட பெண் குழந்தை கையில் பந்தும் பெட்டுமாக ஓடி ஓடி விளையாடும் அழகு சௌதாமினியை ப்ரமிக்கச் செய்தது. அதன் முகச் சாயல் தன்னுருயிர்க் காதலன் ஹரிநாத்தைப்போல் தோன்றி அவளை யொரு கலக்கு கலக்கியது.

தான் வந்திருப்பதை எஜமானிக்கு அறிவித்தாள். எஜமானி உள்ளே வரும்படி தெரிவித்ததும் உள்ளே சென்ருள். ஆங்கில மாதைப்போல் ஜாடையும், உடை மட்டும் இந்தியர்களைப்போல் அணிந்துகொண்டு மிஸஸ் லீலா உட்கார்ந்திருந்தாள். ஆங்கிலத்தைத் தவிர தாய் பாஷை அவளுக்கு எவ்விதம் பேசவரும்? "வாருங்கள். உட்காருங்கள்'' என்று ஆங்கிலத்திலேயே கூறினுள்.

சௌதாமினியும் மரியாதையாக வந்தனம் செய்துவிட்டு ஆங்கிலத்திலேயே பேசவாரம்பித்து "அம்மணீ! உங்களுடைய விளம்பரத்தைக் கண்டு வந்தேன். எனக்கு ஆங்கிலமும் நன்றாகத் தெரியும். சுமார் 10 வருடங்களாக ஆஸ்பத்திரிகளிலும் தனிமையிலும் நர்ஸ் தொழிலே செய்துவருகிறேன். இப்போது பஞ்சாயத்து ஆஸ்பத்திரியில்தானிருக்கிறேன். அடிக்கடி கட்டை வண்டியில் கிராமங்களுக்குச் செல்வது கஷ்டமாயிருப்பதால் வேறு வேலைக்கு ப்ரயத்தனம் செய்துகொண்டிருந்தேன். உங்கள் விளம்பரத்தைப் பார்த்ததும் இங்கு வந்தேன். நீங்கள் என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்.'' என்று நயமாகப் பேசினாள்.

லீலா:—ஓ! மெத்த சந்தோஷம். உங்களுக்குக் குழந்தைகள் உண்டா? குடும்பம் பெரியதா, சிறியதா! வீட்டோடு இருப்பதற்கு தடையொன்றுமில்லையே......உங்கள் பெயரென்ன?...

சௌதா:—என் பெயர் சௌதாமினி.......

லீலா:—ஆ......பேஷ்.........என் குழந்தையின் பெயரும் சௌதாமினிதான். என் புருஷனுக்கு அப்பெயர் நிரம்பவும் பிடிக்குமென்று அதை வைத்தார். ரொம்ப சந்தோஷம்.

சௌதா:—ஹா......உங்கள் குழந்தைக்கும் இதே பெயரா!... அம்மணீ! எனக்குக் குழந்தையுமில்லை; குடும்பமுமில்லை. ஒரு பாட்டனாரும். இளைய சகோதரியுந்தான் இருக்கிறார்கள் நான் தங்கள் வீட்டிலேயே சதா இருந்து ஊழியம் செய்யக் காத்திருக்கிறேன். தங்களுக்கு என்னென்ன பணிகள் செய்ய வேண்டும்?

லீலா.—என் குழந்தைகளை நன்றாக கவனித்துக் கொள்வது தான் முதன்மையான முக்கிய காரியம். அவர்களுக்கு வேண்டிய சகல காரியத்தையும் செய்து அவர்கள் உடைகள், ஆகாரம், குளிப்பது, சாயந்திர வேளையில் காரில் அழைத்துச் செல்வது முதலியன பொறுப்பாக கவனிக்க வேண்டும். அதற்குமேல் நேரமிருந்தால் எனக்கு ஏதாவது செய்யலாம். மாத சம்பளம் இப்போது முதலில் 50 ரூபாய் கொடுக்கிறேன். பிறகு உயர்த்துகிறேன். இந்த பங்களாவின் தோட்டத்திலுள்ள சிறிய வீட்டை நீ உபயோகப்படுத்திக் கொள்ளலாம். உன் தாதாவையும் சகோதரியையும் அங்கேயே வைத்துக் கொள்ளலாம். எனக்கு உணவு, உடைகள் முதலிய சகலமும் நானே சப்ளை செய்கிறேன். இது உனக்குச் சம்மதந்தானா?

நேற்று செய்த விளம்பரத்தைப் பார்த்து இதற்குள் எத்தனையோ பேர்கள் வந்து விட்டுப் போனார்கள். அவர்களில் பலர் மிகவும் கோரமாயும், அருவருக்கத் தக்க விதமாயுமிருப்பதால் குழந்தைகள் அவர்களுடன் பழகவே மாட்டார்கள். உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆதலால் உன்னையே நியமித்துவிட்டேன்.

என் புருஷர் முக்கிய காரியமாய் வெளியூருக்குப் போயிருக்கிருர். அவர் வருவதற்கு ஒரு வாரம் பிடிக்கும். நீ இப்போதே சென்று சாமான்களுடன் அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து விடு. இதோ உனக்கு அட்வான்ஸாக 50 ரூபாய் தருகிறேன்; இதைக் கொண்டு உன் காரியத்தை முடித்துக் கொண்டு வா'' என்ருள்.

லீலாவின் நயமான குணமும், முக வசீகரமும், சாந்தமான வார்த்தையும் செளதாமினியை அடிமையாக்கி விட்டன. குழந்தைகளை வாரி எடுத்து முத்தமிட்டாள். எஜமானிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பி தன் கிராமத்திற்கு வந்து சேர்ந்தாள். இரண்டு நாட்களுக்குள் செளதாமினி தாதாவுடனும், கோகிலாவுடனும் லீலாவின் வீட்டிற்கு வந்து விட்டாள்.

லீலாவின் சந்தோஷமும், குழந்தைகளின் சந்தோஷமும் கரை புரண்டது. செளதாமினியின் சந்தோஷத்திற்குக் கேட்க வேண்டுமா! வெகு நாட்கள் பழகியவளைப் போல் குழந்தைகள் அவளிடம் ஒட்டிக் கொண்டார்கள். குழந்தைகளின் முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் செளதாமினியின் மனத்தில் ஹரிநாத்தின் அழகிய பிம்பம் தோன்ருமலில்லை. "இவர்களின் சாயலுக்கும் அந்த பிம்பத்திற்கும் கடவுள் ஏன் என் மனத்தில் ஒருவிதமான உணர்ச்சியையும், சம்மந்தத்தையும் அளிக்கிருர்?'' என்று நினைப்பாள்

சென்ற காரியம் சீக்கிரமே முடிந்து விட்டதால் ஹரிநாத் நாளைக் காலையே திரும்பிவிடுவதாயும், ரயிலுக்குக் கார் அனுப்பும்படியும் தந்தி வந்துவிட்டது. எஜமானர் வரப்போகும் சந்தோஷம் லீலாவின் முகத்தில் தாண்டவமாடியது. 'அப்பா வரப்போகிருர்'... என்று பெரிய குழந்தை கும்மாளமடிக்கிறது.

மறு தினம் அதிகாலையில் லீலா காருடன் ரயிலடிக்குச் செல்ல சற்று உடம்பு சரியில்லாமலிருந்ததால் காரை மட்டும் அனுப்பினுள். அரை மணிக்குள் ஹரிநாத் அவனுடைய இயற்கையான ஆநந்தத்துடன் தன்னருமைப் புதல்வி செளதாமினியை உரத்த குரலில் கூவியபடியே "செளதாமினீ! கண்மணீ!......என்று அழைத்தவாறு உள்ளே வந்தான்.

குழந்தை செளதாமினிக்கு, செளதாமினி சட்டை போட்டுக் கொண்டிருக்கையில் இக்குரல் காதில் கேட்டதும் அவள் தேகம் மயிர் கூச்செரிந்து சிலிர்த்தது......"ஹா......ஹரிநாத்தின் குரல் போலிருக்கிறதே!''என்று இமை கொட்டும் நேரம் மனத்தில் நினைப்பதற்குள் குழந்தை "அப்பா! அப்பா! என்று குதூகலமாகக் கூவிக் கொண்டே சட்டையைப் போட்டுக் கொள்வதையும் விட்டு ஓட்ட

மாக ஹரிநாத்தை எதிர்கொண்டு ஓடி அவன் காலை கட்டிக் கொண்டது.

குழந்தையைத் தூக்கி முத்த மிட்டபடியே நிமிர்ந்தான். சௌதாமினி ஸ்தம்பித்துப்போய் மிரள மிரளப் பார்த்தபடியே "ஹா, டாக்டர்!"......என்றாள். அதே சமயம் "சௌதாமினி!".... என்றான். இருவர் கண்களும் நிலைக் குத்தாக நின்று விட்டன. இந்த அதி யாச்சரியத்தைக் கண்ட லீலாவும், குழந்தையும் ப்ரமித்து இவர்களின் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்று விட்டார்கள். பிரிந்தவர் கூடினால் பேசவுங் கூடுமோ! என்ற பழமொழிப்படி அப்படியே இருவரும் கற் சிலைகள்போலாகிவிட்டார்கள்.

---

## 19—வது அதிகாரம்

## பேய்களின் கதியும், பெருமகிழ் நிதியும்

சடகோபன் தன் மகளின் ஊழலான குணமும், நடத்தையும் க்ராமவாஸத்தினால் நன்றாக சீராகிவிடும் என்ற நம்பிக்கையில் அவளை பலவந்தமாக க்ராமவாஸம் செய்ய அழைத்துச் சென்றும் அதனால் இன்னும் விபரீத குணமும் நடத்தையும் உண்டாகிவிட்டதை யறிந்ததும் அவர் மனம் கரைபுரண்டு விசனித்ததோடு அவமானம் தலைதூக்க முடியாத நிலைமையை அடைந்துவிட்டார்.

சில நாளடைவில் தன்னுடைய மனைவிக்கும் இது தெரிந்திருக்கவேண்டியதுதான் என்று எண்ணி அந்தம்மாளிடம் தெரிவித்ததும் அவளும் தீயை மிதித்தவள்போல் தவித்தாள் அதுவே வேதனைகொண்டு பெண்ணைக் கண்டிக்க வாரம்பித்தாள். யாருக்கும் அடங்காப் பிடாரியான பெண் பூதம் "என்னை இம்மாதிரி சிறை வைத்து உபத்திரவம் செய்து கண்டித்தால் நான் இனி சொல்லாமல் ஓடிவிடுவேன். என்னைப் பிடிக்காதவனுக்கு என்னைக் கட்டிக் கொடுத்துவிட்டு என்னைப் பாழாக்கிவிட்டீர்கள். வெளிநாட்டிற்குச் சென்று இத்தனை வருடங்களாக எவ்விதமான தகவலும் இல்லை என்றால் அவன் கட்டாயம் வெள்ளை மாதை மணந்துவிட்டான் என்றதில் ஆக்ஷேபனையே இல்லை. மரியாதையாகவிருந்தால்

போயிற்று. இல்லாவிட்டால் ஓடிப்போவேன்.'' என்று சற்றும் பயங் கூச்சமின்றி சொல்ல வாரம்பித்தாள்.

இதற்குமேல் மானக்கேடு வேறு என்ன வேண்டும்? இவ ளுடைய நடத்தையைப்பற்றி அச் சிறிய க்ராமத்தினர்கள் வம்பு பேசி ஏளனமாக நகைக்க வாரம்பித்தார்கள். இந்த அவமானத் தைச் சகிக்கமாட்டாது மீண்டும் தன் குடும்பத்தை சடகோபன் முன்பிருந்த இடத்திற்கே மாற்றிவிட்டுத் தானும் தன் மனேவியும் சன்யாசினியின் புதிய திட்டத்துடன் வேலே நடக்கும் ஆசிரமத் திற்கே வந்து சதா பஜனேயில் கலந்துகொண்டதோடு, சொல்லியதை சொல்லியபடியே செய்கையில் செய்துக் காட்டிய சன்யாசினியின் மகிமையைக் கண்டு பின்னும் உள்ளம் பூரித்தார்.

சன்யாசினி அபாரமான திறமையுடன் நடத்தும் இப் புதிய வேலேயின் கொள்கையைக் கண்டு ஆச்சரியப்பட்ட பொது ஜனங்கள் அந்த நிலேயத்திற்கு ஏராளமான நிதியைக் கொடுத்து உதவ முன் வந்தார்கள். அதனுல் சன்யாசினி தன் வீதி பஜனேயில் தான் நடத்தப்போகும் காரியத்திற்கு திட்டங்கள் கூறியபடியே சகலமான தொழில்களேயும் முறையே நடத்தும் வசதிகளே உண்டாக்கி செவ் வனே நடத்திவரத் தொடங்கினுள்.

வாரா வாரம் சனிக்கிழமைதோறும் ஒரு தனி மைதானத்தில் சந்தை கூட்டி இங்கு தயாரான பொருள்களே சரசமான விலேக்கு விற்று அத் தொகையைக் கொண்டும், இன்னும் செல்வவந்தர்கள் கொடுக்கும் பொருளேக் கொண்டும் அந்த ஸ்தாபனத்தை வெகு சிறப்பாக நடத்திவந்தாள்.

விடுதலேயாகும் முன்பு மிக்க கேவலமான மனேபாவத்துடன் இருந்த கைதிகளுக்கு சன்யாசினி கொடுக்கும் உயர்ந்த போதனு முறையின் மகத்துவத்தாலும், அங்கு நடக்கும் அருமையான தொழில்முறையினுலும், இடைவிடாத பஜனும்ருதத்தின் உணர்ச் சியினுலும் அவர்கள் அடியோடு மாறிப்போய் புனர் ஜென்மம் எடுத்ததுபோலாகிவிட்டார்கள்.

இத்தகைய அருமையான புனித இடத்தைவிட்டு வருவதற்கு சடகோபன் ப்ரியப்படவே இல்லே. இந்த இடத்திலேயே தன் விசனத்தை மறந்து இருக்க வாரம்பித்தார். அக் காலேயில் ஹரிநாத் திடமிருந்து மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஒரு கடிதம் சட கோபனுக்கு வந்தது. அது வருமாறு:—

“மாமா! நமஸ்காரம்.

நான் சென்று இத்தனே வருடங்களாகியும் திரும்பி வராததுபற்றி நீங்கள் பலவிதமாக நினேக்கலாம். என்னருமை

அன்னையின் மரணத் தறுவாயில் கூறிய வாக்கை நிறைவேற்றும் பொருட்டு நான் விரும்பிய காதலியையும் விட்டு உங்கள் மகளை மணந்ததும், அவளால் நான் அடைந்த சுகமும் அறிவாளியாகிய உங்களுக்கே தெரிந்திருக்கும். இருப்பினும் பெரியார் என்ற மதிப்புக்கும், நீதிக்கும் கட்டுப்பட்டு நாள் சகித்துக் கொண்டு காலந் தள்ளினேன். அவள் ஊழலை யறிந்தும் அறியாத பாவனையாகவே குருடனாக குட்டும், கோபியமுமாய் குடும்பத்திலிருந்ததும் உங்களுக்குத் தெரியும். இப்போது நடந்துவிட்ட சகலமான ரகஸ்ய ஊழல்களும், ஆஸ்பத்திரியிலுள்ள ஓர் டாக்டரின் மூலமாக நானறிந்த பின்னர், திரும்பவும் முன்போல் பொறுமையாக விருக்கவோ; அன்றி வித்யாசமாக விலக்கி உங்களை வருத்தவோ நான் விரும்பவில்லை. அதற்கு என் மனம் இடந்தராது. நான் இங்கேயே படித்துத் தேறியாகிவிட்டது. என் மனத்திற்குகந்த மங்கையை விவாகம் செய்துகொண்டு கண்காணாத இடத்தில் சந்தோஷமாக விருப்பதை நீங்கள் வெறுக்கமாட்டீர்கள். நான் எப்போதாவது திரும்பி வந்தால் அப்போது தங்களைப் பார்க்க முடிந்தால் பார்க்கிறேன். இந்த உறுதியும் மனோபாவமும் அப்போதே இருந்தால் என்னருமை சௌதாமினியை நான் கைவிட்டே இருக்கமாட்டேன். எல்லாம் காலக்கொடுமையின் கூற்று. இனிமேல் என்னைப்பற்றிக் கவலையே படவேண்டாம். மாமிக்கு என் வந்தனம்.

இங்ஙனம்

ஹரிநாத்''

இதைப் படித்த சடகோபனுக்கு என்னவிதமான உணர்ச்சி தோன்றி இருக்கும்? குற்றம் தன் மகள்மீது இருப்பதை இனி இல்லை என்று சண்டையிட்டுக் கூற அவர் மனம் சம்மதப்படவில்லை. இத்தகைய கொடுமையைச் செய்த பிறகு எப்படித்தான் மனம் இசையும்? அவன் நல்ல உத்தமனாக இருந்ததனால் விவாகம் செய்துகொண்டு கஷ்டப்பட்டான். அவன் பெரிய அந்தஸ்திற்கு வந்த பிறகு இனி ஏன் கஷ்டப்படவேண்டும்? அவன் இஷ்டம்போல் இருக்கட்டும். இந்த அவமானம் நம்முடன் தொலையட்டும்'' என்றே முடிவு கட்டிவிட்டார். தன் மனைவிக்கு மட்டும் கடிதம் வந்த விவரத்தைத் தெரிவித்து இருவரும் வருந்தினார்கள்.

'உன் விருப்பத்திற்கு நான் வாழ்த்துகிறேன்' என்று ஹரிநாத்திற்கு சுருக்கமாக பதிலும் தெரிவித்துவிட்ட பிறகு வீட்டுப் பற்றும், மகளுடன் எப்போதாவது பேசும் வழக்கமும் போய் விட்டது. இதே வேதனையினால் அவர் மனைவி காலமாகிவிட்டாள். பிறகு சடகோபனுக்கு தன் மகளை சன்யாசினி ஆச்ரமத்திலேயே

இருக்கச் செய்தால் சற்று நல்ல புத்தியும், பழக்கமும் வருமா வென்ற யோசனை தோன்றியதால் அங்கு சேர்க்க நினைத்து "ஊர்மிளா! இனிமேல் வீட்டில் நீ தனியே இருப்பது சரியில்லை. இத்தனை வருடங்களாக உன் தாயார் இருந்ததால் ஒருமாதிரி போய்விட்டது. எத்தனை சொன்னாலும் உனக்கு புத்தியே இல்லை. இதன் விளைவு இப்போது தெரியாது. பெத்த பாசம் மெத்தவும் பாதிப்பதால் உனக்கு இன்னமும் நன்மை செய்யவே நான் முன் வருகிறேன். பூலோக வைகுண்டத்திற்கு ஒப்பாகவிருக்கும் சன்யாசினியின் ஆச்ரமத்திலேயே இனி நாம் இருந்து காலந்தள்ள தீர்மானித்து விட்டேன். நீ நாளையே அங்கு வந்து சேர்ந்து செய்த பாபங்கள் மறையும்பொருட்டு பகவானை பஜனையாவது செய்து வா" என்றார்.

தன் ஊழலைத் தெரிந்துகொண்டுவிட்டாரே என்ற ஒரு சிறு உணர்ச்சி மட்டும் தோன்றியதே யன்றி அந்த வாழ்க்கை வாழ அவளுக்கு இஷ்டமில்லை என்பதைத் தெரிவித்தும் சடகோபன் கட்டாயமாக அவளைக் கொண்டுபோய் ஆச்ரமத்தில் சேர்த்தார். ஆச்ரமத்து நடவடிக்கைகளும் பஜனை முதலிய பக்திரஸமான காரியங்களும் இவளுக்குப் பயித்தியக்காரத்தனமாகத் தோன்றியதெனினும் கசந்து வெறுத்தபடியே அங்கிருந்தாள்.

ஆனால் அவள் துர்க்குணம் அவளை விடவில்லை துஷ்ட நேசர்களை சந்தித்துப் பேசுவதும், திருட்டுத்தனமாக சினிமா முதலியவற்றிற்கு அவர்களுடன் போவதும் பழய தொழிலை விடாது செய்வதையும் உற்று கவனித்த சடகோபனுக்கு பயம் பிடித்துக் கொண்டது. பானை பாலில் ஒரு துளி புளிப்பு குத்திக் கெடுப்பது போல் இந்த புனிதமான ஆச்ரமம் எல்லோராலும் வெகு மதிப்புடன் போற்றப்பட்டு வருவதை இந்த துஷ்டக் கழுதையின் இந்த நடத்தையினால் ஆச்ரமத்தின் பேரே கெட்டுவிடப்போகிறதே என்று தோன்றிவிட்டதால் அவளை மீண்டும் வீட்டிற்கே மாற்றி விட்டார்.

"இனிமேல் நல்லமாதிரி திருந்துவதென்பது குதிரைக்கொம்பு தான்; நம் சொத்தாவது நல்ல விஷயங்களில் செலவாகட்டும் என்று எண்ணி தன்னுடைய சகலமான சொத்தையும் சன்யாசினியின் ஆச்ரமத்திற்கே எழுதி வைத்துவிடத் துணிந்துவிட்டார்.

இந்த ரகஸியத்தை யறிந்த ஊர்மிளாவின் துஷ்ட நேசன் அவளுக்குச் சரியான கலகத்தைச் செய்து தூண்டிவிட்டதால் ஊர்மிளா வீட்டிலிருந்த நகைகள், உயர்ந்த உடைகள், முதலிய உயர்ந்த பொருள்களை எல்லாம் தானே திருடிக்கொண்டு. அந்த மனிதனுடன் எங்காவது சென்று பிழைத்துக்கொள்வதென்ற ஆசையால் துணிந்து தன் பிதா இல்லாத சமயம் எல்லாவற்றையும்

திருடிக்கொண்டு பின்னால் தனது நிலைமையை சற்றும் நினைக்காமல் வீட்டை விட்டே கிளம்பிவிட்டாள். நெருப்பை யாராலதான் குளிரச்செய்ய முடியும்? அடியோடு அணைத்துவிட்டால் குளிர்ந்து விடும். அதுபோல் துர்க்குணிகளை எத்தனை விதத்தில் பதம் பெறச் செய்தால்தான் பதமாவார்கள்? அவர்களின் ஆவி நீங்கினால் பிறகு திருந்திவிடுவது நிச்சயமல்லவா!

* * * * *

சௌதாமினியைக் கண்டு ப்ரமித்த ஹரிநாத்தும், ஹரிநாத்தைக் கண்டு அப்படியே அசந்துவிட்ட சௌதாமினியும், இவ்விருவரையும் கண்டு தம்பித்துவிட்ட லீலாவும் ஒன்றுமே தோன்றாது சில விநாடிகள் ஊமைபோலானார்கள். பிறகு லீலாவே சற்று தெளியப் பெற்றவளாய் "நாதா! ஏன் இப்படி இருவரும் தம்பித்துவிட்டீர்கள்? இந்தம்மாளை உங்களுக்கு முன்பே தெரியுமா!.... இவர்களைத் தான் நான் நர்ஸாக ஏற்பாடு செய்து அமர்த்தி இருக்கிறேன்...சௌதாமினீ! ஏன் உன் கண்களில் ஜலம் வருகிறது?"...என்று இருவரையும் மாறி மாறிக் கேட்டாள்.

ஹரிநாத்தின் இதயத்தில் செம்மட்டியால் பிளப்பதுபோன்று வேதனை செய்கிறது. தான் சௌதாமினிக்கு பெரிய த்ரோகம் செய்துவிட்டதுபோல் ஒரு தோற்றம் தோன்றியது. தன்மீது உயிரை வைத்திருந்த அதே பழய சௌதாமினி இன்று இன்னும் மெலிந்து எலும்பும் தோலுமாக நிற்பதைப் பார்க்க வயிற்றில் சித்ரவதை செய்கிறது.

தான் இம்மாதிரி மணந்துகொண்டு அவளை அடியோடு மறந்து விட்டது பெரும் பாதகமென்றும், தன்னை ஏமாற்றி வஞ்சித்து விட்டான் என்றும் சௌதாமினி எண்ணுவாளோ என்று ஏதேதோ தோன்றி அவனை வதைக்கிறது.

சௌதாமினிக்கோ, ஹரிநாத் தன் மனதிற்கிசைந்த மங்கையை மணந்து, குல விளக்குபோல் முத்து முத்தாகக் குழந்தைகளுடன் காட்சியளிப்பதைக் கண்டதும் உண்மையில் பரமாநந்தம் பொங்கி விட்டது. அதை யடக்கமாட்டாது கண் வழியே பொங்கி வழிந்து

கொண்டே இருக்கிறது. வாயோ திறக்க முடியவில்லை. குழந்தைகளின் முகத்தைப் பார்த்ததும் தனக்குத் தோன்றிய உணர்ச்சியின் காரணம் தெரிந்து பெருமகிழ்ச்சி யடைந்தாள். "டாக்டர்! டாக்டர்!" என்று வா யெடுக்கிருள்; பேச முடியவில்லை.

தடுமாறிய குரலுடன் "டாக்டர்!......டாக்டர்! நான்தான் பாக்யசாலி. நான்தான் கொடுத்துவைத்த மகாராஜி...என்னைப் போல் நிர்ப்பாக்யசாலி யாருமில்லை என்று சற்று முன்பு வரையில் நினைத்திருந்தேன். அது கத்த தப்பு என்றதை இன்னிமிடமே உணர்ந்து பேராநந்தமடைகிறேன். தங்களை இம்மாதிரி கோலத்தில் காணவேண்டுமென்று பகவானை இரவு பகல் துதித்தது பலித்த சந்தோஷத்தைவிட தங்களுடைய ப்ரதி பிம்பங்களாகிய குழந்தைகளுக்கும், தர்ம பத்தினியாருக்கும் சேவை செய்யும் பெரும் பாக்யம் கிடைத்ததை நான் எனது புனிதத் தொண்டாயும், புத்துயிர் பெற்ற மகிழ்ச்சியாயும் எண்ணுகிறேன்." என்று கூறிப் பின் லீலாவை இறுகத் தழுவிக்கொண்டு "அம்மணீ! என்னைக் கைவிடாதீர்கள். எனக்கு இனி நீங்கள் தான் கதி. உங்களுடைய நிழல்தான் ஆதாரம் என்னைப்போன்ற திக்கில்லாப் பரதேசிகளை உலகில் காணவே முடியாது. என்னை ஆதரியுங்கள்" என்று காலில் விழுந்து வணங்கினள்.

மகா புத்திசாலியாகிய லீலாவுக்கு விஷயம் விளக்கமாகத் தெரியவில்லை எனினும் இவர்கள் இருவரும் காதலர்கள் என்று மட்டும் யூகித்தறிந்துகொண்டாள். தன் கணவனை நோக்கி "டாக்டர்! இதென்ன எனக்கொன்றும் விளங்கவில்லையே...நீங்களிருவரும் ஆதியில்...கா...என்று இழுத்தாற்போல் கூறுவதற்குள் சௌதாமினியே இடைமறுத்து "தாயே!....ஆம்...நீங்கள் வாயெடுத்தபடியும், யூகித்தபடியும் நாங்கள் கடவுளால் அளிக்கப்பட்ட தெய்வீகமான காதலுக்கு அடிமையாகியவர்கள். ஆனால் என் தலைவிதி வலிய மலைபோல் என்னை மறைத்தது." என்று கூறும்போது கண்ணீர் ஆருய் ஓடிவிட்டது.

லீலா:—உன் தலைவிதியா! ஏன்? எதற்காக நீங்கள் தம்பதிகளாகவில்லை? உனக்கு எது தடையாக நின்றது? நீ விடோவா... இப்படி நான் கேட்பது குற்றமாயின் மன்னிக்கவேண்டும்....

சௌதாமி :—ஹூம்...மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது?... தாயே! அப்படி விதந்துவாயிருப்பின் தடையே இல்லாமல் நான் தாராளமாக அவருக்கு அடிமையாகி இருக்கலாம். என் சரிதமே ஓர் துக்ககரமானது. என்னை மனப்பூர்வமாகக் காதலித்த இவருக்கும் அது தெரியாது. என் தாயார் எத்தனையோ தவமிருந்து என்னைப் பெற்றூர்களாம். எனது நான்காவது வயதில் அவர்களுக்கு தடபுடலாக உடம்புக்கு வீந்து பிழைப்பதரிது என்று வைத்தியர்கள் கூறிவிட்டார்களாம்.

பட்டிக்காட்டு ஜனங்களுக்கு மூட ஆசைக்கும், மூட பக்திக்கும் கேட்கவேண்டுமா? பெண் குழந்தையைக் ;கன்னிகாதானம் செய்து கொடுத்தால் உடம்பு குணமாகிவிடும் என்று அனேகர் சொல்லியதால் எனது நான்காவது வயதிலேயே 18 வயதான யாரோ ஒருவனுக்கு கன்னிகாதானம்—இல்லை, என் வாழ்வையே பாழ்படுத்திய பாழுந்தானம்—செய்து கொடுத்துவிட்டார்கள்.

காக்காய் ஏறிப் பனம் பழம் விழுவது போல் என் தாயார் சிறிது குணமடைந்தாளாம். எனக்கு ஏழாவது வயதில் என்னை மணந்த கணவன் சில துஷ்ட சகாக்களுடன் சேர்ந்துகொண்டு ஒரு சீமாட்டியைக் கொலை செய்துவிட்டு அதற்காக பொங்கல் பண்டிகையன்றைய தினம் அவனுக்கு மரண தண்டனை விதித்தார்களாம்,

அப்போது என் தங்கையை என் தாயார் ப்ரஸவித்திருந்தாள். இந்த கோராமையைக் காதில் கேட்டதும் உடனே உயிர் நீத்தாள். பிறகு ஏதோ அப்பீல் செய்ததில் ஆயுள் காலம் முற்றிலும் சிறைவாஸம் என்ற தீர்ப்பு கிடைத்ததாம். எனக்கு வயது ஏற ஏற இந்த துக்க சம்பவம் நன்ருகத் தெரியவந்தது. என் பாட்டனூரே என்னைக் காப்பாற்றிவருகிறூர். என் காலம் ஏதோ தலைகின்றது.

ஹரிநாத் இடைமறுத்து "ஹா...சௌதாமினீ! உன் கணவன் உயிருடனிருக்கிறுனு? நீ இந்த ரகஸியத்தை ஏன் இதுபரியந்தம் என்னிடம் சொல்லவில்லை? நான் அவனை விடுதலை செய்ய ஏதாவது ஏற்பாடு செய்திருப்பேனே!'' என்று கேட்டான்.

சௌதா :—டாக்டர்! குற்றம் செய்யாது பழி சுமத்தப்பட்டவர்களுக்கு வேண்டுமானல் ஐயோ பாவம் என்று கூறி வழி செய்யலாம். குற்றம் செய்த பாதகர்களுக்கு விடுதலை வேறு வேண்டுமா... இனி அந்த பேச்சை விட்டுவிடுங்கள். என் காலம் இப்படியே உங்களுக்கு ஊழியம் செய்து ஆநந்தமாகக் கழியட்டும். என்னைக் கைவிடாதீர்கள். இருவரும் எனக்கு அபயம் கொடுங்கள்—என்று புலம்பியபடியே கேட்டாள்.

லீலாவின் கண்ணிலும் கண்ணீர் வந்துவிட்டது. ஹரிநாத்தின்மீது தான் கொண்ட காதலின் சக்தியை அவள் அறிவாள்; ஆகையினுல் சௌதாமினியின்மீது இரக்கமே உண்டாகியது. அவளுடைய ஒழுக்கமும் நற்குணமும் லீலாவை ப்ரமிக்கச் செய்தன. இம்மாதிரியான காதல் விஷயங்கள் அவளுடைய நாட்டில் மிக மிகச் சாதாரணமாகையினுல் இதையோர் விகல்பமாகவே எண்ணுமல் சௌதாமினியின் கைகளைப் பிடித்துக்கொண்டு "சகோதரி! உன் சரிதையைக் கேட்க என் மனம் உருகுகிறது இனிமேல் நீ வேறல்ல. நான் வேறல்ல. என்னுயுள் உள்ள பரியந்தம் உன்னை நான் விடமாட்டேன். இது நிச்சயம். இக்குழந்தைகளுக்கு இனிமேல் நீ தாதியல்ல." என்றதைக் கேட்ட சௌதாமினி "தாயே! எனக்கு உங்கள் பேராதரவிருந்தால் அதுவே போதும். உங்களுக்கு சேவை செய்வதே எனக்குப் பரமாநந்தம் இது கிடைத்தால் போதும்." என்று கூறினுள்.

சௌதாமினியின் மொழிகள் ஹரிநாத்தை ப்ரமிக்கச் செய்தன. தன் மனைவியைக் கண்டு "லீலா! உன் விருப்பத்திற்கு மாருக நான் ஒரு காரியமும் செய்ய மாட்டேன். உன் மனப் பூர்வமாய் சௌதாமினியைப் பற்றி நீ எப்படி தீர்மானிக்கிருய்? நீ என் கிருஹ லக்ஷ்மியானதால் உன் முடிவே என் முடிவுதான். ஆதி காலத்தின் சம்பவங்களை நீ வித்யாசமாக எண்ண மாட்டாய் என்று நம்புகிறேன். என்ன சொல்லுகிருய்?" என்ருன்.

லீலா:—என்னை பரீக்ஷிக்கின்றீர்களா! நான்தான் என் வாக்குறுதியை அப்போதே கொடுத்து விட்டேனே. சௌதாமினியை நீங்கள் வைத்துக் கொள்ள ப்ரியப்படா விட்டாலும் நான் இனி விட

மாட்டேன். என் சகோதரியைப்போல் எண்ணிவிட்டேன்......... சௌதாமினி! இதுதான் தீர்மான முடிவு. உன் பாட்டனாரையும் சகோதரியையும் இங்கேயே அழைத்து வந்து விடு. வீட்டிற்கும் பெரிய துணையாக விருக்கும் என்ன சொல்கிறாய்?

சௌதா:—தாயே!......உங்கள் சித்தப்படியே செய்கிறேன். எல்லாம் ஈசனருள். எனக்கு இத்தகைய பேராதரவுகள் கிடைக்குமென்று கனவிலும் கருதவில்லை. ஆதியில் நடந்ததும், மத்தியில் நிகழ்ந்ததும், இப்போது நடப்பதும், இனி நடக்கப் போவதும் யாவும் மாய ப்ரபஞ்சத்தின் கூற்று—என்றாள்.

ஹரிநாத் சௌதாமினிக்கு அந்த துஷ்ட நர்ஸுகளால் நேர்ந்த சதியையும், மாமன் என்று வந்து பணத்தைச் சுருட்டிக் கொண்டு சென்ற விசித்திரத்தையும், ஊர்மிளாவின் அவகேட்டையும், சமயத்தில் சடகோபன் காப்பாற்றியதையும், அறிந்து விசனப் பட்டான். கிழவரையும் கோகிலாவையும் தன் வீட்டிற்கே அழைத்து வந்து பரம ப்ரீதியுடன் விசாரித்து அன்பு காட்டி உபசரித்தான்.

பெரியவர்களை விட சௌதாமினியிடம் குழந்தைகள் ஐக்யமாகி விட்டன. லீலாவை தன்னுயிர்போல் சௌதாமினி பாவித்து நடக்க வாரம்பித்தாள். தேனும் பாலும்போல் குடும்பம் நடக்க வாரம்பித்தது. ப்ரதி தினமும் மோட்டார் காரை ஹரிநாத்தே ஓட்டுவதும், 'க்கத்தில் லீலா உட்காருவதும் பின் பக்கம் குழந்தைகளுடன் சௌதாம்னி உடகார்ந்து மாலை நேரத்தில் வெகு தூரம் உலாவி விட்டு வருவது வழக்கம்.

அதே போல் ஒரு தினம் இவர்கள் மோட்டாரில் போகும் போது வழியிலிருந்த ரயில் கேட்டை சாத்தி விட்டதால் அஸ்தமித்து இருட்டும் சமயமாயிருந்த வேளையில் ஹரிநாத்தும் லீலாவும் இறங்கி வந்து கேட்டின் அருகில் நின்றார்கள். சௌதாமினி காரில் குழந்தைகளுடன் வீற்றிருந்தாள்.

வேகமாக போகும் ரயிலிலிருந்து யாரோ ஒரு பெண் கீழே விழும் கோரத்தைக் கண்டதும் ஹரிநாத்தும், லீலாவும் "ஐயயோ! ரயிலிலிருந்து யாரோ விழுந்துவிட்டாள்...என்று அலறிக் கத்தி

ணர்கள். இதற்குள் பக்கத்து வண்டியிலிருந்து இதைப் பார்த்தவர்கள் சங்கிலியை இழுத்து ரயிலை நிற்கச் செய்ததும் எல்லோரும் இறங்கி வந்து கூட்டங் கூடிவிட்டார்கள்.

கேட்டைத் திறந்துகொண்டு இவர்களும் சென்ருர்கள். கீழே விழுந்த பெண்ணின் உயிர் குத்துயிர் குலை உயிராயிருந்தது கண்டு எல்லோரும் அவள் ஏறியிருந்த இரண்டாவது வகுப்பு வண்டியைப் பார்த்ததும் அதில் யாரும் காணவில்லை. அந்த பெண்ணின் கோலம் சின்ன பின்னமாகி இருந்ததைக் கண்டு பரிதபித்தனர்.

ஹரிநாத் அருகில் சென்று பார்த்த உடனே திடுக்கிட்டலறினன்...''ஐயோ! இந்தப் பாதகியா...பார்த்தால் கர்ப்பிணிபோன்று தோன்றுகிறதே...அட க்ரசாரமே!''...என்று தனக்குள் எண்ணித் தவித்தான் அவள் கண்ராவியைக் கண்டு சகிக்க முடியவில்லை. ''லீலா! எனக்கு மனைவி என்ற பைசாசம் ஒன்று இருப்பதாகத் தெரிவித்தேனே, அந்த பாபி இவள்தான்...தன்னுடைய அக்ரமத்திற்குப் பலன் இதுதான் போலும்'' என்ருன்.

லீலாவின் வியப்புக்கு எல்லையே இல்லை. ஹரிநாத் அவள் முகத்தில் விழிக்கவும் வெறுத்து விலகினன். லீலா பரிதாபத்துடன் ''டாக்டர்! தாங்கள் வைத்திய முறையில் இவளுக்கு சிகிச்சை செய்யுங்கள். இந்த மாதிரியாபத்தில் விலகுவது சரியில்லை. வாருங்கள்....அவரவர்களின் கர்மாவை அவரவர்கள் அனுபவிக்கிருர்கள்'' என்று பலவந்தம் செய்தாள்.

இதற்குள் ரயில்வேக்காரர்கள் இவளைத் தூக்கி கேட்டினருகில் கிடத்தினர்கள். சௌதாமினிக்கு இங்கு ஏதோ விபத்து நேர்ந்து விட்டதென்று மட்டும் தெரிந்து அதை விசாரிக்க மனம் பதறியது குழந்தைகளைக் காரில் உட்காரவைத்துவிட்டு மெல்ல அங்கு வந்து எட்டிப் பார்த்தாள். அந்த விபத்தில் சிக்கியது ஊர்மிளாவென்று தெரிந்ததும் தீயை மிதித்தவள் போல் துள்ளினள்.

சௌதாமினி ஊர்மிளாவின் அருகில் சென்று ''ஊர்மிளா!'' என்று அழைத்தாள். ஊர்மிளாவின் உயிர் போய்க்கொண்டிருக்

கும் நிலைமையில்..."ஹா...சௌதாமினீ...நான் உனக்கும்...உன் காதலனுக்கும் செய்த சதிதான் இம் முடிவைக் கொடுத்தது. உன்னை ஒழிக்கும்பொருட்டு லைஸாலை நான்தான் கொட்டினேன். ஒரு ஆளை உன் உறவுபோலனுப்பி கொள்ளையடிக்கச் செய்ததும் நான் தான்.

என் வஞ்சனை என்னையே அழிக்குமென்று அப்போது தெரிய வில்லை. என்னை வஞ்சனையா யழைத்து வந்த பாவி என் பொருள் களைப் பிடுங்கிக்கொண்டு என்னைத் தள்ளிவிட்டான். என் பெற்றோ ருக்குச் செய்த த்ரோகத்தின் பலனிது. நீ உன் காதலனைப் பார்த் தால் இப் பாவி தொலைந்தாள் என்ற சந்தோஷச் செய்தியைத் தெரிவி சௌதாமினீ! ... தண்ணீர் வேண்டும். .... என்று பரிதாபமாகக் கூறினள்.

இதைக்! கேட்ட அருகிலிருந்தோர்கள் பலவித உணர்ச்சியை அடைந்தார்கள். எந்த சௌதாமினிக்கு த்ரோகஞ் செய்து அடி யோடு கொல்ல முயன்றளோ, அதே சௌதாமினியின் கையினல் ஒரு வாய் தண்ணீர் குடித்ததும் உயிர் நீங்கியது. துர்க்கிருத்யத்தின் முடிவும், ஒழுங்கீனத்தின் பலனும் கை மேல் பருமானம்போல் கிடைத்துவிட்டன.

இனிமேல் அதைப் பற்றி என்ன கூறவேண்டும்? அசத்யமும் அநீதியும், அட்டூழியமும் என்றும் எமன்தான் என்பதையும் ஒழுங்கும், தன்னெறி காத்தலும், நற்குணமும்' நீதிக்கும் சத்தியத் திற்கும் பயந்து நடந்தால் என்றைக்கும் அதன் பலன் நன்மையே அளிக்குமென்பதற்கும் ஊர்மிளா, சௌதாமினி இருவரின் ஜீவிய மும்போதுமல்லவா? அதை விட நிதர்சனமான அத்தாட்சி என்ன வேண்டும்?...தன்னைப் பிடித்த பீடை தொலைந்ததாகவே பெத்த பிதா வாகிய சடகோபனும் எண்ணி மகிழ்ந்தார் என்றே கூறவேண்டும்.

தன் சொத்துக்கள் பூராவும் சன்யாசினியின் ஆசிரமத்திற்கே கொடுத்துவிட்டார். ஹரிநாத், சடகோபன் சன்யாசினியின் ஆசிர மத்திலேயே இருப்பதையும், ஆசிரமத்தில் வெகு உன்னதமான சேவைகள் நடக்கிறதென்றும் கேள்விப்பட்டு அதைப் பார்வையிடும் பொருட்டு தன் குடும்பத்துடன் சௌதாமினி உள்பட ஆசிரமத் திற்குச் சென்றன்.

சடகோபன் ஹரிநாத்தைக் கண்டு பரம சந்தோஷமும், தன் மகளின் விதியை எண்ணி துக்கமும், வெட்கமும் அடைந்தார். ஆச்ரமத்தின் சமூக சேவையைக் கண்டு லீலாவும், ஹரிநாத்தும் அபாரமான சந்தோஷத்தை யடைந்து முற்றிலும் பார்த்துக் கொண்டே வந்தார்கள். ஆச்ரமத்தில் வந்துள்ள கைதிகளை எல்லாம் சன்யாசினி காட்டிக்கொண்டே வருகையில் அக் கூட்டத்தில் முன் குறிப்பிட்ட நர்ஸ்கள் நால்வரும் சென்ற மாதந்தான் விடுதலையாகிய கைதிகளின் ஜாபிதாவில் நிற்பதைக் கண்ட சௌதாமினி வியப்புக் கடலில் மூழ்கினாள்.

சௌதாமினி ஒரு குழந்தையுடன் ராஜாத்திபோல் வருவதைக் கண்டு நால்வரும் தலை குனிந்தார்கள். வயிற்றில் எரிச்சல் மூண்டது. இவர்கள் எதற்காக தண்டிக்கப்பட்டார்கள் என்று சௌதாமினி சன்யாசினியைக் கேட்டாள். சன்யாசினி மகா யூகசாலியும், ஞாபகசக்தியும் உள்ளவளாகையால் ஆதியில் ஒரு காலத்தில் சன்யாசியிடம் பரிகாஸமாக ஏளனம் செய்து குறும்பாகக் கேள்வி கேட்ட அக்கூட்டத்தையும் மறக்கவில்லை; சௌதாமினியையும் மறக்கவில்லை.

அதையே குறித்துக் காட்டி, அதே துர்க்குணத்துடன் ஒரு நோயாளிக்கு சிகிச்சை செய்யும்போது நகைகளைத் திருடி விட்டதற்காக மூன்று வருடம் சிறைவாசம் செய்து, பின்னர் இங்கு வந்திருக்கிறார்கள்'' என்றாள். ஹரிநாத் தனக்கு ஏராளமான வருமானமிருப்பதால் தன் பிதாவின் சொத்து பூராவும் ஆச்ரமத்திற்கே கொடுத்ததோடு, ஆசிரமத்தில் உள்ளவர்களுக்காக சிறிய ஆஸ்பத்திரியும் அதில் நிறுவி, தானே அதில் தர்மத்திற்கு வைத்தியம் செய்வதாயும் தெரிவித்துச் செய்ய வாரம்பித்தான். ஆஸ்பத்திரி வேலைகளை ஹரிநாத்துடன் சௌதாமினியே நர்ஸாக வ[illegible] சகலத்தையும் கவனிக்கவாரம்பித்தாள்.

எக்காலத்திலும் வினை விதைத்தவன் வினையை [illegible]ப்பதும் தினையை விதைத்தவன் தினையை அறுப்பதும் நிகழ்[illegible] உண்மையல்லவா? சன்யாசினியின் நாத்தியும் விடுதலையாகி ஆ[illegible]திலேயே வந்து சேர்ந்து, வேம்பே கரும்பாக மாறியதுபோல் ம[illegible]றிவிட்டாள். என்றால் வேறு என்ன வேண்டும்? ஒவ்வொரு வா[illegible]ம் டாக்டர் குடும்பத்துடன் கிழவர் உள்பட, ஆச்ரமத்தின் ப[illegible]யில் கலந்து கொண்டு மெய் மறந்த ஆநந்தம் அனுபவிப்பதை வி[illegible] உலகில் வேறு என்ன நித்ய கல்யாண வைபவ சுகம் வேண்டும்? [illegible]த ஆநந்தமே இகத்திற்கும், பரத்திற்கும் நன்மை பயக்கும் ந[illegible]வுடதமல்லவா? மாய ப்ரபஞ்சத்தின் லீலைகளை ஜெயிக்கு[illegible]மல்லவா?

மங்களம்.

PRINTED AT TATA PRESS & PUBL[illegible]HED BY
V. M. PARTHASARATHY, MADRAS. GC[illegible]EE.

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

| 30 ரூபாய்க்கு 38 நாவல்கள். | முழு விலை | | 'ஜகன்மோகினி' சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை. | |
|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ரூ. | அ. |
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனை (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| இன்பஜோதி | 1 | 4 | 1 | 0 |
| அநாதைப் பெண் | 1 | 4 | 1 | 0 |
| ராஜமோஹன் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| சாந்தகுமாரி | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| ப்ரேமப்ரபா | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அம்ருததாரா | 0 | 4 | | |
| அன்பின் சிகரம் | 0 | 4 | | |
| ஸரஸராஜன் | 0 | 4 | | |

முன்பணமனுப்பி
தபாற் செலவின்றி
பெற்றுக் கொள்ளுங்கள்
வி. பி. கிடையாது.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி.

Jaganmohini Vol. XIV—No 8 Regd. No. M. 2210.




தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்

சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்